139

வசந்தம்

1947 ஆகஸ்டு.

ஆவணி

8 அணா.

ANNOUNCING

THE

NEW INDIA ASSURANCE CO.,

LIMITED.

(H. O. BOMBAY)

Have much pleasure in announcing

HAVING COMPLETED
A NEW BUSINESS (LIFE) OF

Rs. 12,39,71,956 in 1946
Against a New Business of
Rs. 8,38,31,700 in 1945

Thus Registering an increase of
NEARLY 50 PER CENT

During this Year The Company has plans for an intensive organisation in the City & Districts undeveloped.

APPLICATIONS FROM PERSONS OF RECOGNISED ORGANISING ABILITY WILL BE CONSIDERED.

Apply to :

MADRAS BRANCH,
4 & 5, First Line Beach.

K. GANAPATHI,
Branch Manager.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
OCT 1947

Vasantham, August, 1947.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,

நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென் இந்தியாவில் எல்லா முக்கிய மான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	... ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிஸர்வ் நிதி	... ரூ. 62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.

IBN/10 செக்ரெடரி.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

வாயுப் பிடிப்புக்கு லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

உபயோகிப்பது எளிது வெகு விரைவில் நிவாரணம்

மகத்தான கியாதியுடன் கூடிய சிறிய புட்டி

விரைவில் நிச்சயமான நிவாரணம்

தயாரிப்பவர்கள் :-

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பர்மசியுடிகல்ஸ் லிமிடெட்,

தபால் பெட்டி நெ. 67 :: சென்னை.

புதுயுக நிலையம், புதுச்சேரி

யோகி சுத்தானந்தர் தமது வாழ்வை அரவிந்தாசிரமத்துடன் ஐக்கியப்படுத்தி விட்டதால், தமது நூல்களை இனி இங்கேயே வெளியிட நல்ல ஏற்பாடு செய்திருக்கிறார். இதுகாறும் புதுயுக நிலயத்திலிருந்து வெளிவந்த நூல்களாவன. எல்லாம் மானுடைப் பதிப்புகள்.

1. The Gospel of Perfect Life — Yoga Siddhi. 3—8
2. YOGI SHUDDHANANDA BARATHI— by Dewan Bahdur K. S. Ramaswami Sastriar 4—0

ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்	2—8
பகவத் கீதை	1—4
அன்னை	1—4

அச்சிலுள்ளவை.

ஏழைபடும்பாடு அரியநாவல்.
கவிக் கனவுகள்

மானேஜர், புதுயுக நிலயம், புதுச்சேரி.



ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் நேர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து தூய்மைக்கு தூய சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

மைசூர்
சந்தன அத்தர்

MSK 16 TM

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

துணி உற்பத்தியாளர் கவனிக்க

நீங்கள் உற்பத்தி செய்யும் சட்டைத் துணிகள் கோட்டுத் துணிகள், சேலைகள், வேஷ்டிகள், முதலிய சகலவிதத் துணிகளிலும், பளபளப்பும் கண் கவர்வனப்பும் உண்டாக்க 'காலண்டர்' செய்யுங்கள்.

குறைந்த சார்ஜில் நிறைந்த அழகுடன் 'காலண்டர்' செய்து தரப்படும்.

வெளியூரிலிருந்து வரும் துணிகள் உடனே கவனித்து 'காலண்டர்' செய்து அனுப்பப்படும்.

விபரத்திற்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,

(Calendering Department)

CANNANORE : : NORTH MALABAR.

ஆடை அணிவகுப்பில் இப்பொழுது அதிகம் அடிபடுவது

காலத்துக்கு தகுந்த பாஷனாக எல்லா நெம்பர் நூல், நிறம், பாட்டர்ன், அதிக நேர்த்தியாய் நெசவு செய்த துணிகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தாரால் மதருஸ் மாகாணம் பூராவும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜாஸ்தி சக்தியால் ஓட்டப்படும் யந்திரங்களைக் கொண்டு, பெருவாரியாக உண்டாக்கும் மில் துணிகளைவிட, கைத்றி சரக்குகளுக்கு பலம் நீடித்த உழைப்பு அழகு நேர்த்தி, உபயோகம் மென்மை மிகவும் அதிகம்.

மதருஸ் கூட்டுறவு கைத்துணிகள், சங்கத்தின், மதருஸ் மற்ற ஊர்களிலிருந்து நேராக குறிப்பிட்ட கருர் விலையில் விற்பனை செய்யப்படுவதால், நடுவிலிருக்கும் வியாபாரிகளின் லாபத்தை அகற்ற சாத்தியமாகிறது. ஆகவே, எங்களிடம் சாமான்கள் வாங்குவதால், உங்கள் பணம் மீதமடையும், கஷ்டமுமில்லை

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரின்ட்ஸ், சிங்கம்ஸ், சின்ட்ஸ், வீடு அலங்கரிக்கத் துணிகள், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், கைக்குட்டைகள், லுங்கிகள், அங்கவஸ்திரங்கள், கொசுவலைகள், க்வில்ட்ஸ், தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ்
கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 6-A உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP" Coimbatore.

Telegrams :- "UMAYAL". **Telephone :- 56 A.**

UMAYAL WEAVING ESTT., LTD.,

Cannanore, N. Malabar.

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

BEDSPREADS
TABLE LINEN
FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS
DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS
TURKISH TOWELS
BATH GLOVES
BATH MATS
MUFFLERS ETC.

ENQUIRIES EARNESTLY SOLICITED.

ENCOURAGE HANDLOOM INDUSTRY.

"UMAYAL" FABRICS
AN ASSET TO EVERY HOME
EVERYTHING MADE TO ORDERS
POPULAR FABRICS
THROUGHOUT INDIA AND CEYLON.

Distributors for Mysore State :-
SRI UMAYAL STORES,
363, Avenue Road,
BANGALORE CITY.

சந்தாதாரர்களுக்கு

'வசந்த'த்திற்கு அனுப்பும் செக்குகள், மணியார்டர், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளில் 'மானேஜர், வசந்தம்' என்று குறிப்பிடவேண்டும்.

மானேஜர் :

வசந்தம், 4/12A திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

பனி மலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரிய மலர்களின் நறுமணம் போன்று களைப்பாற்றுவதுமான

டாடா ஓ-டி-கோலோன்

உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப்பண்ணுவதற்காயினும் சரி உகந்தது.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.

டாம்கோ விற்பனை இலாகா :

நெ. 4/117 திருச்சிரோடு : : கோயமுத்தூர்.

வசந்தம்

பொருளடக்கம்

மலர் 6	சர்வஜித் ௵ ஆவணி ௴	இதழ் 5

வருகின்ற ஹிந்துஸ்தானம்	...	பாரதி	...	1
காற்றலைகள்	...	ஆர். கே. விசுவநாதன்	...	2
நிலவின் சிரிப்பிலே	...	'அருவி'	...	6
புத்தக ஆராய்ச்சி	...	'உமாபதி'	...	7
மறுமலர்ச்சி	...	சரஸ்வதி தியாகராஜன்	...	9
அவள் மகிழ்ந்தாள்!	...	கா. மு. ஷெரீப்	...	15
சிலப்பதிகாரம்	...	சர். ஆர். கே. எஸ்.	..	17
விடிவெள்ளி	...	தே. ப. பெருமாள்	...	24
கொத்துப் பூ	...	கி. வே. துரைசாமிராஜா	...	25
வெள்ளியங்கிரி யாத்திரை	...	எஸ். பாலசுந்தரம்	...	35
காதலும் மணமும்	...	'சுகி'	...	46
அரசியலும் சாமியாரும்	...	'வில்லன்'	...	54
மல்லிகை மொக்கு	...	நா. நாகலிங்கம்	...	57
கடமை	...	எச். விஜயகுமார்	...	60
பிச்சைக்காரி	...	வி. கிருஷ்ணன்	...	69
சுதந்திர வாழ்வு	...	'தேவிகா'	...	76
சமையற்காரன்	...	ஜெயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன்	...	79

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்களும்' சம்பவங்களும் கற்பனை.

நம் நாட்டுத் தொழிலை
ஆதரியுங்கள்
மேனேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடரீஸ்:
R. K. ஷண்முகம் செட்டி
அண்டு பிரதர்ஸ்.
நூற்றல்:
20 நெ. முதல் 44 நெ. வரை ஒற்றை,
முறுக்கு, காரம் சலவை நூல்
தயாரிக்கிறோம்.
எல்லாவிதமான ஜவுளி
ரகங்களும்:
வேஸ்டிகள், லாங்கிலாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்
தயாரிக்கிறோம்.
எங்கஸ்ளுடய வி 116 நெ. லாங்கிலாத்
மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா- தயாரிக்கும் உரிமை
எங்களுடையதே.
வசந்தா மில்ஸ் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.
தந்தி: "வசந்தா" கோயமுத்தூர்: போன்: நெ. 25.

வசந்தம்

★

கௌரவ ஆசிரியர்கள்:

டி. கே. சிதம்பரநாதமுதலியார். சர். ஆர். கே. சண்முகம்செட்டியார்

வருகின்ற ஹிந்துஸ்தானம்

[அமரகவி பாரதியார் வெகு நாட்களுக்கு முன்னரே 'வருகின்ற பாரத'த்தை வாழ்த்தி யிருக்கிறார். கவி அரசரின் கனவு இன்று நனவாகிறது.]

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களி படைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண் டிரங்குவாய் வா வா வா
ஏறு போல் நடையினாய் வா வா வா

வெற்றி கொண்ட கையினாய் வா வா வா
விநய நின்ற நாவினாய் வா வா வா
முற்றி நின்ற வடிவினாய் வா வா வா
முழுமை சேர் முகத்தினாய் வா வா வா
கற்ற லொன்று பொய்க்கிலாய் வா வா வா
கருதிய தியற்றுவாய் வா வா வா
ஒற்றுமைக்கு ளுய்யவே — நாடெலாம்
ஒரு பெருஞ் செயல் செய்வாய் வா வா வா

அலையும் கலையும் 2:

காற்றலைகள்

19725

[ஆர். கே. விசுவநாதன்]

நீரில் செல்வதைப் போல காற்றிலும் அலைகள் செல்லுகின்றன. நீரில் செல்லும் அலைகளை நாம் பார்க்க முடியும். காற்றில் செல்லும் அலைகளை நாம் பார்க்க முடியாது; ஆனால் கேட்கலாம். நீர் அலைகளுக்கும் காற்றலைகளுக்கும் வித்தியாசம் உண்டு. நீர் அலைகளில் அகடும் முகடும் தொடர்ந்து செல்லுவதைப் பார்க்கிறோம். நீர் மட்டத்தை விட சற்று தாழ்ந்தும் உயர்ந்தும் செல்லும் வடிவங்களைத் தான் அகடு முகடுகள் என்று கூறுவது. காற்றலைகளில் அகடு முகடுகளுக்குப் பதிலாக அடர்த்தி தளர்த்திகள் (Condensation and Rarefaction) செல்லுகின்றன. அலைகள் செல்லும் போது காற்றுப் பகுதிகள் அடர்ந்திருக்கும் இடங்களை அடர்த்திகள் என்றும் தளர்ந்து இருக்கும் இடங்களை தளர்த்திகள் என்றும் கூறுவது வழக்கம். அடர்த்தி தளர்த்திகள் செல்லும் மாதிரியை விளக்க ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுவோம்.

இருபது அல்லது முப்பது பையன்களை ஒரு வரிசையில் நிறுத்தி வைத்து ஒருவன் தோளை பின் நிற்பவன் கைகளினால் பிடித்துக் கொள்ளும்படி செய்வோம். இப்பொழுது வரிசையின் கடைசியில் நிற்பவன் முதுகில் ஒரு குத்து வைத்தால் அவன் உடனே சற்று முன்புறம் சாய்ந்து அவனுக்கு முன் நிற்பவனை தள்ளுவான். இதனால் அவனும் சாய்ந்து அவனுக்கு முன் நிற்பவனைத் தள்ளுவான். இவ்வாறாக வரிசையில் நிற்கும் ஒவ்வொருவனும் சிறிது முன்னே சாய்ந்து பின்பு தன்னிலையை அடைவான். தூரத்திலிருந்து வரிசையை கவனிக்கும் ஒருவருக்கு வரிசையின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு ஒரு 'அடர்த்தி' பரவுவது புலப்படும். கடைசியில் நிற்பவன் முதுகில் குத்து வைப்பதற்குப் பதிலாக அவன் முதுகை திடீரென்று பின்னுக்கு இழுப்போம். உடனே அவன் பின்புறம் சாய்ந்து அவனுக்கு முன் நிற்பவனையும் பின்னுக்கு இழுப்பான். இதனால் அவனும் பின்புறம் சாய்ந்து அவனுக்கு முன் நிற்பவனையும் இழுப்பான். இவ்வாறாக வரிசையில் நிற்கும் ஒவ்வொருவனும் சிறிது பின்னே சாய்ந்து தன்னிலையை அடைவான். இப்பொழுது தூரத்தில் நின்று கொண்டு பார்ப்பவருக்கு வரிசை நெடுக ஒரு தளர்த்தி முன்னேறிச் செல்லுவது புலப்படும். கடைசியில் நிற்பவன் முன்புறம் சாய்ந்து உடனே பின் புறமும் சாய்ந்து தன்னிலையை அடைந்தானால் தூரத்தில் நின்று பார்ப்பவருக்கு வரிசை நெடுக ஒரு அடர்த்தியுடன் தளர்த்தியும் முன்னேறிச் செல்வது புலப்படும்.

ஒரு ஒலியெழுப்பும் பொருள் துடிக்கும் போது அது முன்னும் பின்னுமாக ஆடுகிறது. முன்னே செல்லும் போது அதை அடுத்துள்ள காற்றுப் பகுதியை அது அமுக்குகிறது. இதனால் இப்பகுதி இதற்கு முன்னுள்ள பகுதியை அமுக்கி விட்டு தன் நிலைமைக்கு மீளுகிறது. இவ்வாறு அடுத்தடுத்

துள்ள பகுதிகள் நெருக்கப் படுவதால் ஒரு 'அடர்த்தி' காற்றில் பரவும். ஒலியெழுப்பும் பொருள் பின்னுக்குப் போகும் போது அதை அடுத்துள்ள காற்றுப் பகுதியை விரியச் செய்கிறது. இதனல் இப்பகுதி அதை அடுத்துள்ள பகுதியை தளர்த்தி விட்டு தன் முன் நிலையை அடைகிறது. இவ்வாறு அடுத்தடுத்துள்ள பகுதிகள் தொடர்ந்து விரியும் போது காற்றில் ஒரு 'தளர்த்தி' முன்னேறிச் செல்லும். ஒலியெழுப்பும் பொருள் துடித்துக் கொண்டே இருப்பதினல் காற்றில் அடர்த்தி தளர்த்திகளே மாறி மாறி ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். இவ்வடர்த்திதளர்த்திகள் முன்னேறிச் செல்லும். இவை ஒலியைக் கேட்போனுடைய காதினுள்ளே இருக்கும் காற்றையும் இயக்குகின்றன. இதனல் அவன் காதிலுள்ள சவ்வு தோல் முன்னும் பின்னுமாக அசைகிறது. இந்த அசைவு சில சிறிய எலும்புகளின் வாயிலாக கேள்வி நரம்புகளுக்குச் சென்று அவற்றின் மூலமாக மூளைக்கு ஒலியின் உணர்ச்சியைத் தெரிவிக்கின்றது. காற்றலைகளின் போக்கை அறிய மற்றுமோர் உதாரணத்தைப் பார்ப்போம்.

அறுவடையாவதற்கு ஒருமாதத்திற்கு முன் கதிரை தலையிலேந்திய வண்ணம் நெற்பயிர் வயலில் நிமிர்ந்து நிற்கும். இவ்வாறு இருக்கையில் காற்று வீசும் போதெல்லாம் பயிரில் ஓர் அலை இயக்கம் தோன்றுவதைப் பலர் பார்த்திருக்கலாம். இது என்றும் மறக்க முடியாத காட்சியாக இருக்கும். இவ்வலை இயக்கத்தை ஊன்றிக்கவனித்தால் கதிர் முன்னும் பின்னுமாக ஆடிக் கொண்டே இருப்பதும் அதனல் அலைத்தொடர் முன்னேறிச் செல்வதும் தெரியவரும். சில இடங்களில் கதிர்கள் நெருங்குவதையும் சில இடங்களில் விலகுவதையும் பார்க்கலாம். எவ்வாறு கதிர்கள் தம் இருப்பிடங்களிலிருந்து கொண்டே சற்று முன்னும் பின்னுமாக ஆடி அலைத்தொடரை பரவச்செய்கிறதோ அதுபோலக் காற்றுத் துகள்களும் தம்மிருப்பிடங்களில் இருந்து கொண்டே அசைந்து 'அடர்த்தி தளர்த்திகளை' முன்னேறச் செய்கின்றன.

குளத்தில் கல்லை விட்டெறியும் போது அது விழுந்த இடத்திலிருந்து தோன்றிய அலைகள் சிறிது நேரத்திலேயே அடங்கி விடுவதைப் பார்க்கிருேம். ஆனல் ஒரு குச்சியின் நுனியைத் தண்ணீரினுள்ளே முழுக்கி அதை ஆட்டிக் கொண்டே இருந்தால் அலைகள் விடாமல் தோன்றிப் பரவிக் கொண்டே இருப்பதைப் பார்க்கலாம். இதைப் போலவே காற்றில் ஏற்படும் அலைகளும் தோன்றிய உடனேயே மறையலாம். அல்லது விடாமல் தோன்றி பரவிக் கொண்டே இருக்கலாம். காற்றில் ஒரு வெடி சத்தம் உண்டாகும் போது அலைகள் தோன்றி உடனேயே மறைந்து விடும். இதைப் போலவே ஒரு கழியை ஒடிக்கும் போது உண்டாகும் சத்தமும் தோன்றிய உடனேயே மறைந்து விடும். தொடர்ந்து அலைகள் உண்டாவதற்கு நலிக்கு காரணமாயுள்ள பொருள் துடித்துக்கொண்டே இருக்கவேண்டும். இசைக் கருவிகள் எல்லாம் காற்றில் அலைகளைத் தொடர்ந்து உற்பத்தி செய்யும். தொடர்ந்து துடிக்கும் எல்லா ஒலிகளும் இனிமையாக இதர அதாவது காற்றலைகள் எல்லாம் இன்பத்தை அளிக்க மாட்டா. இதன் காரணத்தைப் பின்பு ஆராய்வோம்.

முதலில் நாம் பார்த்த உதாரணத்தில் கடைசிப் பையன் சற்று நிதானமாகச் சாய்ந்து தன் முன் நிலையை அடைந்தால் வரிசையில் தோன்றும் அடர்த்தியும் நிதானமாகவே பாதிசெல்லும். இவ்வாறு இல்லாமல் பையன் சற்று மிடுக்காகச் சாய்ந்து தன் முன் நிலையை அடைந்தால் வரிசையில் அடர்த்தியும் வேகமாகவே செல்லும்.

அதாவது பையன் சாய்ந்து மீளுவதைப் பொருத்து வரிசையின் அலை இயக்கத்தின் வேகம் அமையும். இதைப்போலவே காற்றலைகள் செல்லும் வேகமும் காற்றின் சுருங்கி மீளும் திறமையைப் பொருத்து அமையும். காற்றின் சுருங்கி மீளும் திறமை என்றால் என்ன என்பதை விளக்க ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுவோம். சைக்கிள் சக்கரத்துக்கு காற்றடிக்கும் நிறவியை (Pump) எல்லோரும் பார்த்திருப்பார்கள். இதன் குழாயினுள்ளே ஒரு பீச்சான் இருப்பதைப் பார்க்கலாம்.

நிறைவியின் அடியில் ஒரு சிறு துவாரம் இருக்கும். இதன் வழியாகத்தான் காற்று வெளிப்படும். பீச்சானை மேலிருந்து கீழே அழுத்தும் போதெல்லாம் காற்று இச்சிறு துவாரத்தின் வழியாக வெளிப்படும். இத்துவாரத்தை விரலினால் மூடிக் கொண்டு பீச்சானை மேலிருந்து கீழே அழுத்தினால் பீச்சான் கீழே செல்ல முடியாமல் துள்ளி மேலெழும்புவதை கவனிக்கலாம். குழலினுள்ள காற்றை சுருக்கும் போது அது விற்சுருளை போல துள்ளி மீண்டும் தன் நிலைமையை அடைய முயலுகிறது. இதைத்தான் காற்றின் நெகிழ்ச்சி வன்மை (Elasticity) என்பார்கள். காற்றில் அலைகள் செல்லும் வேகம் காற்றினது நெகிழ்ச்சி வன்மையைப் பொருத்திருக்கும். இத்துடன் காற்றின் செறிவும் காற்றலைகளின் வேகத்தை நிர்ணயிக்கிறது. காற்றின் நெகிழ்ச்சி வன்மையை அளந்திருக்கிறார்கள். செறிவையும் அளந்திருக்கிறார்கள் இவ்விவரங்களைக் கொண்டு காற்றில் அலைகள் வினாடிக்கு சுமார் ஆயிரத்து நூறு அடிவீதம் பரவிச் செல்லுகின்றன என்று அறிந்தார்கள்.

காற்றலைகள் ஒளியைப் போல பிரதி பலனும் அடைகின்றன. மலைகளுக்கருகே ரயில் வண்டி செல்லும் போது அதன் ஊதலினால் உண்டாகும் காற்றலைகள் மலைகளின் மீது பல முறை பிரதி பலனமாகி ஊதல் நின்றும் நெடு நேரம் வரை ஒலியை உண்டாக்கிக் கொண்டிருக்கும். இவ்வாறு பிரதிபலனம் ஆகி திரும்பி வரும் ஒலியைத் தான் நாம் எதிரொலி என்று சொல்லுகிறோம். சில சமயம் இடி இடிக்கும் போது மேகங்களின் காற்றலைகள் பல முறை பிரதி பலனம் ஆகி நெடு நேரம் வரை இடி முழங்கிக் கொண்டிருப்பதைக் கேட்கலாம். எதிரொலி ஏற்படுவதற்கு ஓர் நியதி உண்டு. நேரே ஒலியைக் கேட்பதற்கும் பிரதி பலித்து வருகிற ஒலியைக் கேட்பதற்குமிடையே நிகழ்ந்த நேரம் குறைந்த பக்ஷம் வீசம் செகண்டு இருக்க வேண்டும்.

காற்றலைகளின் வேகம் செகண்டுக்கு சுமார் ஆயிரத்து நூறு அடி என்று கூறினோம். எனவே காற்றலைகள் தோன்றிய இடத்திலிருந்து மலையோ பெரிய கட்டிடமோ வரை சென்று மீண்டு வந்து நம்மை அடையும் தூரம் சுமார் எழுபத்திரண்டு அடிக்கு மேலிருக்க வேண்டுமென்று ஆகிறது. பிரதி பலனத்தினால் காற்றலைகள்

சில இடங்களில் குவிவதும் உண்டு. இந்நிகழ்ச்சி உண்டாவதற்கு பிரதி பலனத்திற்கு காரணமாயுள்ள பரப்பு கோள வடிவமாக இருக்க வேண்டும். லண்டனில் (St Paul' s Cathedral) என்ற ஒரு மாதா கோவில் உண்டு. இதன் சுவர்கள் கோள வடிவானவை. இக்கட்டிடம் மிகப் பெரியது. இதன் சுவருக்கு அருகே ஒருவர் குசுகுசு என்று பேசினலும் வெகு தூரத்தில் ஆனல் சுவருக்கு அருகேயே யுள்ளவர்களுக்கு இது கேட்கின்றதாம். இதன் காரணத்தை ஆராய்ந்து பார்த்து கோள வடிவான சுவரின் பரப்பில் ஏற்பட்ட பிரதி பலனத்தினல் காற்றலைகள் சிறிதும் சேதமாகாமல் சுவரின் முன் நெடுந்தூரம் வரை செல்லுகிறதாக கூறுகிருர்கள். வெள்ளெழுத்துமூக்குக் கண்ணடி வில்லையைக் கொண்டு ஒளியைக் குவியச்செய்வது போல காற்றலைகளை குவிய செய்யலாம். குழந்தைகளுக்கு நாம் வாங்கும் பலூனில் காற்றை விட கனமானதொரு வாயுவை அடைத்து அதை வில்லையாகக் கொண்டு ஒலியை குவியச் செய்யலாம்.

காற்றலைகள் எல்லாம் நீளத்திலும், வீச்சிலும் அமைப்பிலும் வேறுபடும். காற்றலைகளின் நீளம் என்னும் போது அடுத்தடுத்துள்ள இரண்டு அடர்த்திகளினிடைத் தூரத்தையே கூறுகிறேம். இதைப் போல இரண்டு தளர்த்திகளினிடைத் தூரத்தையும் அலைகளின் நீளமாகக் கொள்ளலாம். ஒலியெழுப்பும் பொருளின் துடிப்பு வேகத்தைப் பொருத்து காற்றில் உண்டாகும் அலைகளின் நீளம் மாறும். ஒரு வினடியிலே ஒலியெழுப்பும் பொருள் இயற்றும் துடிப்புகளை அதன் அடுக்கம் (Frequency) என்று சொல்லுவார்கள். இந்த எண்ணிக்கை அதிகமானல் காற்றலைகளின் நீளம் குறைவாகவும், குறைவானல் காற்றலைகளின் நீளம் அதிகமாகவும் அமைந்திருக்கும். அலைகள் பரவும் போது காற்றின் பகுதிகள் தம்மிருப்பிடங்களில் இருந்து கொண்டே முன்னும் பின்னுமாக ஆடிக் கொண்டிருக்கும் என்று பார்த்தோம். இவ்வாறு ஒவ்வொரு பகுதியும் அசைந்து செல்லும் தூரத்தையே அலைகளின் வீச்சு என்று சொல்லுவார்கள். காற்றலைகளின் வீச்சு அதிகமானல் கேட்கும் ஒலியின் முழக்கமும் அதிகமாக இருக்கும். ஒலியெழுப்பும் பொருள் துடிக்கும் மாதிரியைப் பொருத்து காற்றில் அலைகளின் அமைப்பு மாறுபடும். இதைப் பற்றி அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.

★

பொன் மொழிகள்

"எவரையும் அவமதித்துப் பேசாதே."

"நண்பன் இல்லத்திற்கு விருந்திற்கு மெதுவாகப் போ; ஆனல் அவனது இன்னல்களைக் களைவதற்கு விரைந்து செல்."

"தலை நரைக்கும் வேகத்திற்குச் சமமாக, உள்ளமும் சுத்தமடைந்து வர வேண்டும்."

நிலவின் சிரிப்பிலே!...

"அருவி"

மாலைக் கன்னி தென்றல் வீணையை மீட்டினாள்
அந்த இசையில் விரியும் வண்ண மலர்கள்
என்னைக் கேலிசெய்வது போலிருக்கின்றது.
நான்காண்டுகளுக்கு முன்
இதே மாலைக் கன்னி மீட்டும் இசை
இன்னிசைக் கீதமாய்த் தோன்றிய தெனக்கு.
வேதனை என்பது நெஞ்சத்தில் வெளியாக வில்லை
அவர் என்னை இன்பப் படகில் அழைத்துச் சென்றார்.
இன்பக் கிளையில் கூவியிருந்தோம் குயிலாய்
நிலவின் சிரிப்பில்
குலவி யிருந்தோம் நாங்கள்
தென்றலின் பண்ணிசைப்பில் மலர் மெத்தைமேல்
படுத்திருந்தோம்
காலத்தின் கிறுக்கலில்
அயல் நாடு சென்றார் அன்னிய
ஆட்சியைத் தொலைக்க.
அவர் போனபின் எத்தனையோ மாலைக்காலம்
எழில் நிலவுகள், தென்றல் பண்ணிசைப்புகள்!
ஆனால் அவைகள் என் நெஞ்சத்தில்
அனலை வீசி யெறிகின்றன
தும்பியின் சோக கீதம்
வெம்பச் செய்கின்றது நெஞ்சை
துயிலணங்கு என்னைக் கண்டஞ்சுகின்றாள்.
இரவெல்லாம் என்னைப் போல் துயிலாமல்
கண்ணீர் வடிக்கும் மூடுபனிபோல்
என் கண்களும் கண்ணீரைச் சிந்துகின்றன.
நாளை வருவதாக
சேதி வந்துள்ளது
நிலவின் சிரிப்பிலே
நாளைக்கு
வாழ்வுப்பூ மலர இருக்கிறது!

வளர் பிறை (நவீனம்) ஆசிரியர்: மாறன்; வெளியீடு: கார்த்திகேயினி பிரசுரம், இராமச் சந்திரபுரம், புதுக்கோட்டை; விலை: ரூ 3—0—0.

தாசி என்ற கேவலமான ஸ்தானத்தை விட்டு குடும்பப் பெண் என்ற ஸ்தானத்தில் அமர்ந்து, தனக்கு ஏற்ற ஒருவனை மணந்து மற்றவர்களைப் போல் கௌரவமாக வாழ விரும்புகிறாள் சுந்தரி என்ற தாசி. விடாப்பிடியாக எத்தனையோ அல்லல்கள் பட்டு தன் லக்ஷியத்தை அடைகிறாள் அவள். அவளைப் பின்பற்றி அவள் மகள் மோகனாவும் ஒருவனை மணந்து, ஒரு கலா சேவகி ஆகிறாள்.

லக்ஷியக் கதை. கதாபாத்திரங்களே கதை சொல்லும் பாணி, சொல்லும் முறை, சரளமான நடை, கதா பாத்திரங்களின் உள்ளுணர்ச்சியை வெளிப்படுத்தும் விதம் இவற்றின் காரணமாக இந்நவீனத்தைச் சலிப்பின்றி சுவைத்துப் படிக்க முடிகிறது. 'மாறனு'க்கு இந்நவீனம் ஒரு நல்ல வெற்றி.

அபூர்வப் பிறவிகள்: ஆசிரியர்: 'மாறன்'; பிரசுரம்; கார்த்திகேயினி பிரசுரம், ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை, விலை: ரூ 2—8—0.

மனதில் ஒரே சோர்வு! மனம் நிலையில்லாமல் திரிந்து கொண்டிருக்கிறது; பொழுதே போக மாட்டேன் என்கிறது; காரணமில்லாத ஒரு ஏக்கம்; சிடுசிடுப்பு! இத்யாதி நிலைமைகளில் உங்களுக்கு எது ஏற்பட்டாலும் சரி, 'மாறன்' எழுதியிருக்கும் 'அபூர்வப் பிறவிகள்' என்ற புத்தகத்தை தயவு செய்து வாங்கி (விலை ரூபாய் இரண்டரை தான்!) ஒரு முறை முழுக்கப் படித்து விடுங்கள். உங்கள் பழைய நிலைமையில் அபூர்வமான மாறுதல் ஏற்பட்டு விடும். நீங்கள் தெளிவும் தெம்பும் பெற்று புது உற்சாகத்துடனும் மலர்ந்த முகத்துடனும் இருப்பீர்கள்.

நகைச் சுவை மணி மாறனின் மணி மணியான மொத்தம் பதினைந்து பொறுக்கியெடுத்த ஹாஸ்யக் கட்டுரைகளின் தொகுதி இது. 'ஹாஸ்ய நடிகன்' 'இல்லறமும் துறவறமும்' 'சாந்தசாமியின்

ஜாதகம்' 'கார்விடு தூது' ஆகிய கட்டுரைகளில் நினைத்து நினைத்துச் சிரிக்கக் கூடிய உயர்ந்த ஹாஸ்யம் நிறைந்திருக்கிறது. சுருங்கச் சொன்னால் 'அபூர்வப் பிறவிகள்' ஒரு பெரிய ஹாஸ்யச் சுரங்கம். இந்தச் சுரங்கத்தின் அதிபதியும், அபூர்வப் பிறவிகளின் சிருஷ்டி கர்த்தாவுமாகிய 'மாறனை' எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

●

அம்புலி மாமா. ஆசிரியர்: பி. ஆர். ராஜசூடாமணி; காரியாலயம்: 37 ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை; விலை: 0—6—0.

பி. ஆர் ராஜ சூடாமணி குழந்தைகளின் உள்ளத்தை, உணர்ச்சியை, அந்த உணர்ச்சிப் பெருக்கில் ஊசலாடும் எண்ணங்களை வெகு நன்ருக அறிந்தவர். அவர் குழந்தைகளுக்கு என்று ஒரு பத்திரிகை நடத்தினால் அது உண்மையில் குழந்தைகளுக்கான பத்திரிகையாகத்தான் இருக்கும். சமீபத்தில் ராஜசூடாமணியை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்திருக்கும் 'அம்புலி மாமா' இதைத் தான் நிரூபிக்கின்றது. கவர்ச்சியான மேலட்டை. உள்ளே திருப்பின பக்கமெல்லாம் பல்வேறு வர்ணப் படங்கள். உள்ளே சிறுவர் சிறுமியர் விழுந்து விழுந்து படிக்கக் கூடிய கதை, பாட்டு, புதிர், வேடிக்கை, விநோதம்! இப்படி குழந்தைகளுக்குத் தேவையான எல்லா ரகங்களும் நிறைந்திருக்கின்ற இந்தப்புத்தகம் மாதத்துக்கு ஒன்றே ஒன்று வருவது சில குழந்தைகளுக்கு வருத்தமாயிருக்கும். குழந்தைகளின் மனது வருந்த விட மாட்டார் அம்புலி மாமா என்று அக்குழந்தைகளுக்கு ஆறுதல் சொல்கிறோம்.

ஒளி. (கவிதைகள்) ஆசிரியர்: கா. மு. ஷெரீப்; பிரசுரம்: தொண்டன் பிரசுராலயம், வேளுக்குடி, தஞ்சை; விலை: ரூ 1—0—0.

அவ்வப்போது தம் உள்ளத்திலே மலரும் உணர்ச்சி மலர்களை கவர்ச்சிகரமான சிறு சிறு கவிதைகளாக உருவாக்கி விடுகிறார் சிறந்த சிந்தனையாளரான ஷெரீப். அத்தகைய தனிக் கவிதைகளைத் திரட்டிய தொகுதி தான் இந்த ஒளி. இயற்கை, சமுதாயம், காதல் ஆகிய பொதுத் தலைப்புகளில் சில நல்ல, கருத்தமைந்த கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன.

வரப்பெற்றோம்

●

திருப்புகழமிர்தம்: ஆசிரியர்: கிருபானந்தவாரி; காரியாலயம்: சிந்தாதிரிப் பேட்டை, சென்னை; விலை: 0—3—0.

●

வானொளி. ஆசிரியர் மொஹிதீன் அப்துல் காதர், கர்ரைக்கால்; விலை: 0—4—0.

●

அணில்: (பாப்பா பத்திரிகை) வார வெளியீடு; ஆசிரியர்: வை. கோவிந்தன்; ராயப்பேட்டை, சென்னை; விலை: 0—1—0.

●

தருமபுர ஆதீனப் பாடசாலை 6வது ஆண்டு அறிக்கை.

திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகங்கள்.

தமிழ் வளர்ச்சிப் பாடல்கள்.

மாணவர் திருக்குறள்.

—'உமாபதி'

மறுமலர்ச்சி

[சரஸ்வதி தியாகராஜன்]

"சுபா! உன்னுடைய கண்கள் எப்படி யிருக்கும்?"

"மீனைப்போன்ற பெரிய விழி களில் வண்டின் கருமை படர்ந் திருக்கும்!"

"உனது பற்கள் முத்துக் கோர்த்தாற் போலத் தானே இருக்கும்?"

"ஆமாம்!"

"உன்னுடைய நிறம்?"

"அப்பா! நீ எவ்வளவு அழகு! உன்னை நான் எப்பொழுது கண் குளிரக் காணப் போகிறேனே!" என்று பெரு மூச்செறிந்தான் ராகுலன்.

சுபா நெஞ்சை அமுக்கிப் பிடித் துக் கொண்டாள். அவனுடைய அந்தப் பெயர் பெற்ற கலைஞனு டைய அன்பைப் பெறுவதற்காக அவள் எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாக வேண்டி யிருக்கிறது!

அந்தப் பிராந்தியத்தில் மிகுந்த சீரும் சிறப்பும் பெற்றவன். அழ கிய யுவன். பிறகு கலா ரஸிகை யான சுபாவின் நெஞ்சைக் கொள்ளை கொள்ளுவதற்கு வேறென்ன வேண்டும்?

ஆனல்—

இன்று ராகுலனின் மனதுக்கு இனியவளாக இருக்கும் சுபா ஒரு காலத்தில் அவனல் வெறுக் கப்பட்டவள். அவளுடைய அந்த அழகிய பெயரைக் கேட்கவும் அருவருப்படைந்த ராகுலனைத் தான் அவள் அல்லும் பகலும் பூஜித்து வந்தாள்.

தாசிகுலப் பெண்ணன சுபா அழகியல்ல. கருத்த மேனியும், சிறிய கண்களும் உடைய அவளை, பேரழகும், பெருமிதமும் படைத்த ராகுலன் எவ்விதம் ஏற் றுக் கொள்வான்? சாதாரண மனிதர்கள் கூட சுபாவை நெருங்க ஆசைப்படவில்லை. அவள் ராகுலனைத் தன்னுடைய வனுகை ஆக்க முயலுவதைப் பேரா சை யென்று சொல்லாமல் வே றென்ன சொல்லுவது!

ராகுலனைச் சுற்றி எவ்வளவோ அழகியர்கள் அலைந்து கொண் டிருந்தார்கள். அவன் கானத் தைக் கேட்கவும், அவன் நடனத் தைப் பார்க்கவும், அவன் ஓவியத் தைப் புகழவும், அவனது இனிய மொழிகளைப் பருகவும், வண்டு களைப்போல அவர்கள் மொய்த்துக் கொண்டிருந்தார்கள். அவ்வளவு அழகிகளுக்கு நடுவில் சுபாவின் ரேகை புகலுவதற்குக்கூட இட மில்லாமல் போனதில் வியப்பில்லை.

எவ்வளவோ அழைப்புக்கள் சுபா அவனுக்கு அனுப்பி யிருக் கிருள். ராகுலனும் தன்னுடைய அழகிகளிடம் அவளைப்பற்றி விசா ரித்திருக்கிருன். அப்பா! அப் பொழுது அவர்கள் சுபாவைப் பற்றிச் செய்த பிரசாரம்! ஏழை சுபா கேட்டிருந்தால் உயிரையே விட்டிருப்பாள்!

அவள் அன்புடன் அனுப்பின எவ்வளவு பரிசுகளை அவன் திருப்பி அனுப்பி யிருக்கிறுன்! இப்படியிருக்கும் அவனை அவள் எவ்விதம் நேரில் சென்று சந்திப்பாள்? கண்களால் காணுத போதே தன்னிடம் இவ்வளவு வெறுப்பைக் காட்டும் அவன், கண்டபிறகு எவ்விதம் நடத்துவானே? அந்த பயத்தினுலேயே அவனை சந்திக்க அவள் முயற்சிக்கவில்லை.

"ஈஸ்வரா! உலகில் அழகுதான் பெரிதா? அழகுக்கு முன் அன்பு துச்சமாகப் போய்விடுமா? இதுவா உன் படைப்பின் விசித்திரம்?" என்று கடவுளிடம் தன் குறையை முறையிட்டுக் கொள்வாள் சுபா.

★

கடவுள் கருணை புரிந்தார்!

அப்பொழுது நகரத்தில் கொடிய விஷ ஜுரம் பரவியிருந்தது. ராகுலன் அதற்கு இரையானுன். அதன் பயனுக அவனுடைய அழகிய இரு கண்களும் பார்க்கும் சக்தியை இழந்து விட்டன!

அன்று முதல் ராகுலன் ஏகாங்கியானுன். அவனுடைய அழகிகள் எல்லோரும் அவனை விட்டு விலகி விட்டார்கள். மன முடைந்த அந்தக் கலைஞன் மீண்டும் கண் திருஷ்டியைப் பெறுவதற்காகத் தான் அதுவரையில் சேர்த்து வைத்திருந்த சொத்தையெல்லாம் வாரியிறைத்தான். பிரமாதமான வைத்திய முறைகள் அவனுக்குச் செய்யப்பட்டன. அவனைக் கவனித்து வேளா வேளைக்கு ஆகாரம் கொடுத்து, கண்களுக்கு மருந்து போட்டுக் கட்ட ஒரு உண்மையான ஆள் இல்லாமல் அவன் தவித்துக் கொண்டிருந்தான்.

யாவும் கேள்வியுற்ற சுபா அந்த சமயத்தில் அவனிடம் வந்து சேர்ந்தாள்.

ஜிலு ஜிலு வென்று மிதந்து கொண்டிருந்த காலைக் காற்றின் குளுமையை அனுபவித்த வண்ணம் சாளரத்தின் அருகில் சயனித்துக் கொண்டிருந்தான் ராகுலன். அப்பொழுது அறையில் சப்தித்த மெல்லிய அடி

யோசை அவனுடைய சிந்தனையை உலுக்கிற்று.

"யாரது?"

"சுபா!"

ராகுலன் நெற்றிக் கட்டைச் சுருக்கிக் கொண்டான். பிறகு கண்களை மிரள விழித்து "சாயா மகள் சுபாவா?" என்று சற்று கேலியாகக் கேட்டான்.

"இல்லை! நான் அவள் அல்ல! நெடுந்தூரத்திலிருந்து வந்திருக்கிறேன்! உங்களுடைய புகழைக் கேள்வியுற்றது முதல் உங்களைக் காண வேண்டுமென்கிற ஆசை! ஆனல் இந்தக் கோலத்தில் பார்க்கும் படியாக விதி அமைந்து விட்டதைப்பற்றி மிகவும் வருந்துகிறேன்!" என்று சிறிது வருத்தத்துடன் மொழிந்தாள் சுபா.

"சுபா! நீ அழகுடையவளா?" என்று வெடுக்கென்று கேட்டான் ராகுலன்.

"என்மேல் அன்பு கொண்டவர்களெல்லோரும் என்னை அழகு என்றுதான் சொல்வார்கள்!"

"அப்படியென்ருல்?"

"நான் அழகிதான்!" என்று சிறிது தடுமாற்றத்துடன் மொழிந்தாள் சுபா.



அன்று முதல் அவள் அவனுடைய சேவகியானாள். கண்களைக் கட்டும் பொழுது அவளுடைய தளிர் விரல்களால் ஏற்படும் ஸ்பரிசத்தில் ராகுலன் மெய் சிலிர்ப்பான். வீட்டு வேலைகளைச் செய்யும்பொழுது மெல்லிய குரலில் அவள் பாடும் பாட்டைக் கேட்டு பரவச மடைவான். சாயங்கால வேளைகளில், அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, செங்கதிரோனின் சிவப்பு நிறத்தையும், கூட்டுக்குத் திரும்பிச் செல்லும் குருவிகளின் உல்லாஸத்தையும், தென்றலின் சுமுகத்தைப் பற்றியும் அவள் வர்ணிப்பதில் தன்னையும் மறந்து ஈடுபடுவான் ராகுலன்.

"சுபா! நீ ஒரு கவிதை!" என்பான் ராகுலன்.

"ராகுலரே! நீங்கள் ஒரு கவி!" என்பாள் சுபா.

"கவியும், கவிதையும் ஒன்றாக சேர்ந்து விட்டால் உலகில் அதை விட வேறு இன்பம் என்ன விருக்கிறது!" என்று அவள் கையை வருடியவாறு உரைப்பான் ராகுலன்.

ஆனால்—

அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவள் விரும்பினது கிட்டிவிட்டது. ஆனால் அது சாஸ்வதமாக இருக்குமா! ராகுலன் அவளைக் காதலிக்கிறான்! சந்தேகமில்லை! எல்லாம் எதுவரையில்? அவனுடைய கண்கள் பார்க்கும் சக்தியை மறுபடியும் பெறும் வரையில்தான்! அவன் பார்வையைத் திரும்பவும் பெற்று விட்டானானல் அவள் மீண்டும் ஓடிப் போய் ஒளிந்துகொள்ள வேண்டியவள்தானே!

என்ன் உலகம்!

அன்புதான் மனிதர்களை எப்படியெல்லாம் ஆட்டுவிக்கிறது! ராகுலன் மேல் சுபா கொண்ட ஒரு அன்பு – அது அன்பா? இல்லை, வெறி – அவளை எப்பேர்ப்பட்ட பொய்யைச் சொல்லும் படியாகத் தூண்டிவிட்டு விட்டது! அழகியென்கிற பொய்ப் போர்வையைப் போர்த்திக்கொண்டு ராகுலனுடன் இவ்வளவு நாட்கள் சந்தோஷமாக இருந்து விட்டாள்! கூடிய சீக்கிரத்தில் கண் திருஷ்டியைப் பெறப்போகும் ராகுலன் அவளுடைய உண்மை ரூபத்தைக் கண்டு விட்டானானல் அவளை நேசிப்பானா? அவளுக்கு இது ஒரு பிரச்னையாக இருந்தது.

போகிறது, இந்த மட்டும் கொஞ்ச நாளாவது அவனுடன் இருக்கும் படியாக கடவுள் கிருபை கூர்ந்தாரே என்று சுபா தன்னை சமாதானம் செய்து கொண்டாள்.

ராகுலன் குதூகலமாக இருந்தான். அடுத்தநாள் கண் கட்டை அவிழ்த்ததும் அவன் பார்வையைப் பெறுவான் என்று வைத்தியர் சொல்லியிருந்தார். அடுத்த நாள் நடக்கப்போகும் சம்பவங்களை எண்ணி யெண்ணி உணர்ச்சி மயமாய் இருந்தான் அவன்.

"சுபா! என் சுபா! என்று உரக்கக் கத்தினன் ராகுலன்.

"என்?" என்று மெல்லிய குரலில் கேட்டாள் அவள்.

"அதிகாலையில் சீக்கிரம் ஸ்னனம் செய்து விடு! உள்ளறையில் இருக்கும் மஞ்சப் பெட்டியில் ஒரு நீலக் காசிப் புடவையிருக்கிறது! அதை உடுத்திக் கொள்! தலை மயிரை முடித்துக்

கொள்ளாதே! தெரியுமா! அப்படியே தொங்கவிட்டு விடு! இந்த மாதிரி ரூபத்தில் தான் நான் கண்களைத் திறக்கும்போது நீ என்னெதிரில் நிற்கவேண்டும்!'' என்று மொழிந்தான் ராகுலன்.

சுபா ஒன்றும் பேசாமல் தலை குனிந்து கொண்டிருந்தாள். அவளுடைய மனதில் எண்ணற்ற அலைகள் எழும்பி எழும்பி விழுந்து கொண்டிருந்தன. இவ்வளவு ஆசையுடனிருக்கும் ராகுலனுடைய மனது நாளைக்கு உடைந்து சுக்கல் சுக்கலாகப் போகும் காட்சியை அவள் எவ்விதம் காணுவாள்?

அன்றே அந்த வீட்டை விட்டுப் போய் விடலாமென்றால் அதுவும் முடியாது. கட்டை அவிழ்க்கும் வரையில், கண்களுக்குமேல் ஒரு திராவகத்தை ஊற்றிக் கொண்டே யிருக்க வேண்டுமென்று வைத்தியரின் உத்திரவு. அப்படி செய்யாவிட்டால் இவ்வளவு நாள் பட்ட சிரமமெல்லாம் வீணாகிவிடும். சுபா தத்தளித்தாள்.

''சுபா! என் சுபாஷிணி! பேச மாட்டாயா?'' என்று அவள் கையைப் பிடித்து அழுத்தினான் ராகுலன்.

''கண்கள் மலர்ந்ததும், அழகிய ரோஜாக்கொத்தைத் தான் நீங்கள் பார்க்க வேண்டும்! பிறகுதான் என்னை!'' என்றாள் சுபா.

''முடியாது! பெண்ணே, முடியாது! உன்னைத்தான்!'' என்று தீர்க்கமாக உரைத்தான் ராகுலன்.

கடைசி முறையாக கண்களுக்கு மருந்தைப் போட்டுவிட்டு அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியில் போனாள் சுபா.

வைத்தியர் கட்டை மெதுவாக அவிழ்த்தார். ராகுலன் கண்களை அகல விரித்துப் பார்த்தான். அப்பா! என்ன அழகான உலகம்!

ஆனால் சுபா எங்கே?

தன் முன்னால் நிற்க வேண்டியவள் எங்கே போய் விட்டாள்? 'ஓஹோ? நான் போய் அவளைத் தேட வேண்டுமாக்கும்!'' என்று சொல்லியவாறு வீடு முழுவதும் 'சுபா! சுபா!' என்று கத்திக் கொண்டே அவளைத் தேடினான்.

வைத்தியர் அவனருகில் வந்து ''அவள் வீட்டிற்குப் போய்விட்டாள்!'' என்றார் மெதுவாக.

''அவள் வீட்டிற்கா! அவளுக்கு இந்த ஊரில் எதுவீடு?'' என்று குழம்பியவாறு கேட்டான் ராகுலன்.

''அவளுடைய வீட்டிற்குத் தான் போய் விட்டாள்!'' என்றார் வைத்தியர் மறுபடியும்.

''அவளுடைய வீடு! என்னை உடனே அங்கு அழைத்துக் கொண்டு போங்கள்!'' என்றான் ராகுலன்.

சாமான்களை மூட்டைக் கட்டிக் கொண்டிருந்த சுபா, வாசலில் யாரோ வரும் ஓசையைக் கேட்டுச் சாளரத்தின் வழியாகப் பார்த்தாள்.

ராகுலன்!

''ஐயோ! அவர்!'' என்றலறியவாறு ஒரு அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

''சுபா!''

''ஏன்?'' என்றாள் மெல்லிய குரலில், உள்ளிருந்தவாறு.

"கதவைத்திற!" என்ருன் ராகுலன்.

"ஐயோ! வேண்டாம்! நீங்கள் போய்விடுங்கள்! நீங்கள் என்னைப் பார்க்கக்கூடாது"! என்று கத்தினுள் சுபா.

"சுபா! கதவைத் திறக்கிருயா? இல்லை, இங்கேயே என் கழுத்தை நெறித்துக் கொள்ளட்டுமா?" என்று கடுமையாகக் கேட்டான் ராகுலன்.

சுபா கதவைத் திறந்தாள்!

ஆவேசம் வந்தவன் போல ராகுலன் உள்ளே ஓடிஞன். சுபா முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு விம்மி, விம்மி அழுது கொண்டிருந்தாள். அவளுடைய கைகளைப் பிடுங்கியெடுத்து, முகத்தை நிமிர்த்திப் பார்த்தான் ராகுலன்.

"சுபா!"

"ஐயோ!"

"சுபா! வா! வீட்டிற்குப் போகலாம்" என்றழைத்தான் ராகுலன்.

சுபாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ராகுலனை நிமிர்ந்து பார்க்கவும் சத்தியற்றவளாய்த் தலை கவிழ்ந்து கொண்டாள்.

"நீங்கள்.........நீங்கள் என்னை விரும்புகிறீர்களா? முடியுமா? ஐயோ! நான் ஏன் பொய் சொன்னேன்?" என்று அழுதாள் சுபா.

"இல்லை சுபா! நீ பொய் சொல்லவில்லை! ஆனுல் நான் கொண்டிருந்த ஒரு பொய்மையைப் போக்கிஞய்! இவ்வளவு நாட்களாக நான் உன்னுடைய அழகைக் காதலித்தேன்! இன்று தான் நான் உன்னைக் காதலிக்கிறேன்! என் புறக்கண்ணையும் ஒருங்கே திறந்து விட்ட சுபா! என் சுபாஷிணீ! வா! என்னுடைய வீட்டிற்கு!" என்று அவளை அன்புடன் அழைத்துக் கொண்டு போனுன் ராகுலன்.

தாம்பத்தியம்

கலியாணமானவனுக்கு 'கொடுக்கல் — வாங்கல்' அனுபவம் ஏற்படும். அவன் கொடுக்க விரும்பாததை — மனைவி வாங்கிக் கொள்ளுகிருள்.

கலியாணமானவனுக்கு வார்த்தைப் பஞ்சமில்லை; அதாவது அகராதியையே மணந்து விடுகிருன்!

அவள் மகிழ்ந்தாள்

[கா. மு. ஷெரீப்]

" வென்று விட்டேன் தமிழணங்கை கவிஞனென
வீறுகொண்டேன்! அவள் எனக்கு அடிமையானாள்
பொன்றாத புகழ் மணக்க உலகமக்கள்
போற்றுகின்றார் என்னெழுத்தை யெழில்தானென்று!
குன்றுநிகர் தனம் படைத்த செல்வரெல்லாம்
குனிந்தெனக்கு நலம் செய்து நடக்கின்றார்கள்
நின்ற நிலை தன்னிலே நான் கவிதைபாடி
நிலம் செழிக்க அமுதமழை பொழியலாகும்!........"

முடிக்கவில்லை எழுத்ததனை என் மனைவி
முதுகிற்குப் பின்நின்று சிரித்துச் சொன்னாள்
" அடித்தளத்தில் பலமில்லை; அரிசி வாங்கி
அடுப்பேற்ற வகையில்லை; அழும்பிள்ளைக்கு
பிடியென்று தர ஒரு சல்லியில்லை.
பீத்தலிடைத் துணி இந்த நிலையிருந்தும்
குடிவெறியில் துள்ளுகின்ற மனிதன் போலக்
கோர்த்து விட்டீர் வார்த்தைதனை அர்த்தம் உண்டா ?

தமிழணங்கை வென்றதினால் உலகமக்கள்
சரியான கவிஞனெனச் சொன்னதினால்
அமிழ்தென்ன மொழியவிழ்க்கும் நம்மகவின்
அரும்பசிக் குணவாச்சா? அதோ அந்தச்
சிமிளியிலே எண்ணெய் இல்லை திரிகருகி
சிறுத்து விட்ட ஒளிதுலங்க வழிதானுண்டா ?
கமழ்மதுரத் தென்றலிலே கானம் ஒச்சி
கவிபாடிக் களித்திருத்தல் நன்று, நன்று!"

என்று சொல்லி ஏடெடுத்துக் கிழித்துப் போட்டாள்.
எல்லையிலாச் சினமெனக்கு! இருந்துமென்ன?
ஒன்றேனும் பொய்யில்லை அவள் சொன்னது
உளம் நொந்த சோகத்தின் நெட்டுயிர்ப்பு!

மன்றல் தனில் எனை மணந்தாள் வாழ்க்கை தன்னில்
வற்றாத வறுமைதனைக் கட்டிக் கொண்டாள்.
குன்றுமணி யெடையுள்ள தாலிதன்னைக்
கோர்த்திருக்கும் கயிறன்றி வேறு இல்லை
என்னசுகம் தனைக்கண்டாள் என்னால் அவள்?
இந்த நிலை யிருந்தும்பல பிள்ளைபெற்றாள்!
கன்னல் மொழி பேசுகின்ற மக்கள் கூடி
கண் பிசைந்து அழுகையிலே ஏடெடுத்து

மண்ணுலகம் உய்யப்பல மார்க்கம் சொல்லி
மாத்தமிழில் கவிபாடிக் களித்திருந்தேன்!
சின்னவிழி தேனதரம் தெவிட்டாவுடல்
சேய்வாழ நான் கண்ட தொன்று மில்லை!
'பாழ் உலகே' எனச்சபித்தேன் என்பக்கத்தே
படுத்திருந்த என்பிள்ளை பசிக்கொதிப்பில்
"கூழ் அம்மா கூழெ"ன்றான் கவியெழுதும்
கூர்ப் 'பேனா' தனைமுறித்தேன் "இன்று முதல்

கேள் பெண்ணே நான் உழவன் கீர்த்தி வெல்க
கிழித்தெறிந்தாய் ஏடுதனை நீ உழத்தி!"
பாழ் படுத்தும் கவிதையினி நமக்கு வேண்டாம்!
பார் உழுவோம் எனச்சொன்னேன் அவள் மகிழ்ந்தாள்.

★

விவசாயி

ஒரு நெல் விளையும் இடத்தில் இரண்டு நெல்லை விளைவிக்கின்ற விவசாயி, அந்நாட்டு அரசியல் வாதிகள் அத்தனை பேரையும் விட சமூகத்திற்கு நன்மை பயப்பவன்.

— ஸ்விப்ட் —

மதுரைக் காண்டம்



சிலப்பதிகாரம்

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

(தொடர்ச்சி)

வனதேவதையின் தோற்றம்

(162—191)

கவுந்தியடிகள் இவ்வாறு அந்தணனுக்கு இசைந்த மொழிகளைச் சொல்லி, குன்றாச் சிறப்பினையுடைய கோவலனுடன் அன்று பகல் ஒரு ஊரில் தங்கிவிட்டு, பின்பு அவ்வழியில் மீண்டும் போனார்கள். அடுத்த நாள் கவுந்தியடிகளும், கண்ணகியும் வழி நடை வருத்தத்தால் ஓர் இடத்தில் இளைப்பாறுவதற்குத் தங்கினார்கள். கோவலனுக்குத் தாகவிடாய் உண்டாகவே, வழியில் உள்ள ஒரு பொய்கையில் சென்று, கரையில் நின்று கொண்டிருந்தான். அக்காட்டில் ஒரு வன தேவதை உண்டென்று முன்னமே அந்தணன் சொல்லி யிருந்தானல்லவா? அத்தெய்வம் கோவலன் மேல் காதல் கொண்டு, விரும்பிய காதல் உடையவனாதலால் இவன் தனக்கு இணங்குவான் என்று எண்ணி, மாதவியின் தோழியாகிய வசந்தமாலை வடிவமாக அவன் முன் தோன்றி, உடல் நடுங்கக், கண்ணீர் பெருக, அவன் காலில் வீழ்ந்து முறையிட்டாள்.

"மாதவி என்பாள் விடுத்த ஓலையை நீ மறுத்து விட்டதற்கு, அவள் என்மேல் கோபமுற்று என்னை நீக்கி விட்டாள். நான் உன்னிடம் தவறான மொழிகளைச் சொல்லியிருப்பேன் என்றும், அதனால் தான் நீ அவ்வாறு செய்தாயென்றும் என்மேல் குற்றம் சாட்டினாள். 'நான் ஓலையில் எழுதியதெல்லாம் உண்மை மொழிகள். நீ கோவலனிடம் பொய்யான மொழிகளைச் சொல்லியிருப்பாய். அதனால்தான், என்மேல் பிழை ஒன்றுமில்லாதிருந்தும், கோவலன் நான் அனுப்பிய மாலையை வாங்க மறுத்தான். தவத்தாலும், கல்வியாலும், இயற்கை

அறிவாலும் மேன்மை அடைந்த பெரியோர்கள் பிணி எனக் கருதி வெறுக்கும் வேசியர் வாழ்வு கடைப்பட்டதே யாகும்' என்று மாதவி புலம்பி, துயரத்தை அடைந்து தன் மார்பிலிருந்த முத்து மாலையை அறுத்தெறிந்து, என்னையும் சினந்து நீக்கி விட்டாள். நீ மதுரைக்குப் போகும் செய்தியை சில வழிப்போக்கர்கள் எனக்குச் சொன்னார்கள். உன்னை எப்படியாவது மீண்டும் பார்க்க வேண்டு மென்று, வணிகர் கூட்டத்தைத் துணையாகக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தேன். வழியில் பெரும் துன்பங்களை யெல்லாம் அடைந்தேன் பகுத்து உணர்தற்கரிய பண்பினையுடைய நீ என்னை ஆதரிக்க வேண்டும். உன் கட்டளை யாது?'' என்று வனதேவதை கோவலன் முன் வருந்தி நின்றது.

என்று அம்மறையோற்கு இசை மொழி உணர்த்திக்
குன்றாக் கொள்கைக் கோவலன் தன்னுடன்,
அன்றைப் பகல் ஓர் அரும்பதித் தங்கிப்,
பின்றையும் அவ்வழிப் பெயர்ந்து செல் வழிநாள்;
கருந்தடம் கண்ணியும், கவுந்தி அடிகளும்
வருந்து செல் வருத்தத்து வழி மருங்கு இருப்ப;
இடைநெறிக் கிடந்த, இயவுகொள் மருங்கின்
புடை நெறிப் போய், ஓர் பொய்கையிற் சென்று,
நீர்நசை வேட்கையின் நெடுத்துறை நிற்பக்,
கான்உறை தெய்வம் காதலின் சென்று:
'நயந்த காதலின் நல்குவன் இவன்' என,
வயந்த மாலை வடிவில் தோன்றிக்
கொடி நடுக்கு உற்றது போல, ஆங்கு அவன்
அடிமுதல் வீழ்ந்து, ஆங்கு அரும்கணீர் உகுத்து,
"வாசமாலையின் எழுதிய மாற்றம்,
தீது இலேன்; பிழைமொழி செப்பினை; ஆதலின்,
கோவலன் செய்தான் கொடுமை; என்று என்முன்
மாதவி மயங்கி வான் துயர் உற்று;
மேலோராயினும், நூலோராயினும்,
பால்வகை தெரிந்த பகுதியோராயினும்
பிணி எனக் கொண்டு பிறக்கிட்டு ஒழியும்
கணிகையர் வாழ்க்கை, கடையே போன்ம;'' எனச்
செவ்வரி ஒழுகிய செழுங்கடை மழைக்கண்
வெண்முத்து உதிர்த்து, வெண்நிலாத் திகழும்
தண்முத்து ஒருகாழ் தன் கையால் பரிந்து,
துனி உற்று என்னையும் துறந்தனள்; ஆதலின்,
மதுரை மூதூர் மாநகர்ப் போந்தது,
எதிர்வழிப்பட்டோர் எனக்கு ஆங்கு உரைப்பச்
சாத்தொடு போந்து, தனித்துயர் உழந்தேன்;
பாத்து அரும் பண்ப! நின் பணிமொழி யாது?'' என;

[என்று — ; அம்மறையோற்கு — அவ்வந்தணனுக்கு ; இசை மொழி உணர்த்தி — பொருந்திய சொற்களைச் சொல்லி ; குன்றாக் கொள்கை — குன்றாத சிறப்பினையுடைய ; கோவலன் தன்னுடன் — கோவலனுடன் ; அன்றைப் பகல் ஓர் அரும் பதித்தங்கி — அன்றைய பகற் பொழுதில் ஒரு அரிய ஊரில் தங்கியிருந்து விட்டு ; பின்றையும் — பின்பும் ; அவ்வழி — அவ்வழியிலேயே ; பெயர்ந்து செல்வழி நாள் — மீண்டும் போகின்ற அந்த அடுத்த நாளில் ;

கரும் தடம் கண்ணியும் — கரிய பரந்த கண்ணையுடைய கண்ணகி யும் ; கவுந்தி அடிகளும் — கவுந்தியும் ; வருந்து செல் வருத்தத்து — வழிநடை வருத்தத்தால் ; வழி மருங்கு இருப்ப — வழியின் பக்கத்தில் சிறிது தங்கி இளைப்பாற ;

[வருந்து — வழி.]

இடைநெறிக் கிடந்த — போகும் வழியின் இடையில் கிடந்த தாகிய ; இயவு கொள் மருங்கின் — வழி அமைந்த ஓர் இடத்தின் ; புடை நெறிப் போய் — பக்கத்து வழியிலே போய் ; ஓர் பொய்கை யில் சென்று — ஒரு பொய்கையை யடைந்து ; நீர் நசை வேட்கை யின் — நீர் விரும்பிய வேட்கையால் ; நெடும் துறை நிற்ப — நீண்ட நீர்த் துறைக்கண் நின்று கொண்டிருக்க ; கான் உறை தெய்வம் — அக்காட்டில் வாழும் தெய்வம் ; காதலின் சென்று — அவன் மேல் கொண்ட விருப்பத்தால் அவனிடம் சென்று ; நயந்த காதலின் — விரும்பிய காதல் உடையவனாதலால் ; நல்குவன் இவன் என — இவன் நமக்கு அருள் செய்வான் என்று கருதி ; வயந்தமாலை வடிவின் தோன்றி — வயந்தமாலையின் வடிவத்தோடு வந்து ; கொடி நடுக்கு உற்றது போல — ஒரு பூங்கொடி நடுங்கி வீழ்ந்தது போல ; அரும் கண் நீர் உகுத்து — கண்ணிலிருந்து பொய்யான நீரை வடித்து ; வாச மாலையின் எழுதிய மாற்றம் — மணமுள்ள மாலையில் யான் எழுதி யனுப்பிய மொழிகளில் ; தீது இலேன் — யான் பிழைபடவில்லை ; பிழைமொழி செப்பினை ஆதலின் — நீ தவறான சொற்களை அவன்பால் கூறி யிருக்கிறாய், ஆதலால் ; கோவலன் செய்தான் கொடுமை — கோவலன் மாலையை வாங்க மறுத்துக் கொடுமை செய்தான் ; என்று — என்று கூறி ; என் முன் மாதவி மயங்கி — என் முன்னர் மாதவி மயக்க முற்று ; வான் துயர் உற்று — மிக்க துயரத்தையும் அடைந்து ;

[இயவு — வழி ; அடிமுதல் — அடியிடம் ; அரும் கண்ணீர் — அரிய கண்ணீர், அதாவது வருந்தி வரவழைக்கும் பொய்க் கண்ணீர்.]

மேலோராயினும் — தவமுடையோரும் ; நூலோராயினும் — கற்றறிந்தவரும் ; பால்வகை தெரிந்த பகுதியோராயினும் — கல்லா மலேயே நன்மை தீமை அறியும் பெரியோர்களும் ; பிணி எனக் கொண்டு — இது நோய் எனக் கருதி ; பிறக்கு இட்டு ஒழியும் — புறக் கணித்து நீங்கிப் போகின்ற ; கணிகையர் வாழ்க்கை — இவ்விலைமகள் வாழ்வு ; கடையே போன்ம என — மிகவும் கடைப்பட்டதேயாகும் என்று ; செவ்வரி ஒழுகிய — சிவந்த கோடுகள் பரந்த ; செழுங்கடை

மழைக் கண் — செழிப்பான குளிர்ந்த கடைக் கண்ணிலிருந்து; வெண்முத்து உதிர்த்து — வெள்ளிய முத்துக்கள் போன்ற நீரைச் சிந்தி; வெண் நிலாத் திகழும் — வெள்ளிய ஒளியுடன் விளங்குகின்ற; தண் முத்து — குளிர்ந்த முத்துக்களாலாகிய; ஒரு காழ் — ஒப்பற்ற முத்து மாலையை; தன் கையால் பரிந்து — தன் கையினால் அறுத்தெறிந்து; என்னையும் துனி உற்று — என்னையும் சினந்து; துறந்தனள் ஆதலின் — நீக்கி விட்டாள் ஆதலால்; மதுரை மூதூர் மாநகர் — பழைய ஊராகிய மதுரைமா நகருக்கு; போந்தது — நீவிர் சென்றதை; எதிர் வழிப்பட்டோர் — வழியில் உங்களை எதிர்ப்பட்டவர்கள்; எனக்கு ஆங்கு உரைப்ப — எனக்கு அங்கு கூறவே; சாத்தொடு போந்து — வாணிபம் செய்வோர் கூட்டத்தோடு வந்து; தனித்துயர் உழந்தேன் — பெருந் துன்பங்களையெல்லாம் யான் அடையலானேன்; பாத்து அரும் பண்ப — பகுத்து உணர்தற்கரிய பண்பினையுடைய கோவல! பணிமொழி யாது என — நின் கட்டளை யாது என்று கேட்ப;

[சாத்து — ஊர் ஊராகச் சென்று வாணிபஞ் செய்வோர் கூட்டம்; துனி — வெறுப்பு; பாத்தல் — பகுத்தல்.]

★

தேவதை மறைவது

(182—200)

இந்தக் கொடிய காட்டில் போவோரை மயக்கும் தெய்வம் ஒன்றுண்டு என்று அந்தணன் சொல்லிய வார்த்தை கோவலன் நினைவுக்கு வந்தது. கோவலன் துர்க்கையின் மந்திரத்தைச் செபித்தான். கூந்தலை ஐந்து பிரிவாகப் பின்னியிருக்கும் வனதேவதையின் சூழ்ச்சிகள் பலிக்கவில்லை. "நான் இக்காட்டில் திரியும் வனசாரிணி. உன்னை மயக்க முயன்றேன். நான் செய்த குற்றத்தை பத்தினியான உன் மனைவிக்கும், புண்ணிய முதல்வியான கவுந்தியடிகளுக்கும் சொல்ல வேண்டாம். ஏனெனில் அவர்கள் ஒரு வேளை என்னை சபித்து விடுவார்கள். நீ வந்த வழியே திரும்பிப்போ" என்று சொல்லி வன தேவதை மறைந்து விட்டது.

"மயக்கும் தெய்வம் இவ் வன்காட்டு உண்டு" என
வியத்தகு மறையோன் விளம்பினன் ஆதலின்,
வஞ்சம் பெயர்க்கும் மந்திரத்தால், இவ்
ஐஞ்சில் ஓதியை அறிகுவென் யான்; எனக்
கோவலன் நாவின் கூறிய மந்திரம்,
பாய்கலைப் பாவை மந்திரம் ஆதலின்,
"வனசாரிணி யான்; மயக்கம் செய்தேன்;
புன மயில் சாயற்கும், புண்ணிய முதல்விக்கும்
என்திறம் உரையாது ஏகு;" என்று ஏக;

[இவ்வன்காட்டு — அக்கொடிய காட்டுள் : மயக்கும் தெய்வம் உண்டு என — போவாரை மயக்கம் செய்கிற தெய்வம் உண்டு என்று; வியத்தகு மறையோன் — வியக்கத்தக்க அவ்வந்தணன் ; விளம்பினன் ஆதலின் — கூறினன் ஆதலால்; வஞ்சம் பெயர்க்கும் — மாயத்தையெல்லாம் ஒழிக்கின்ற ; மந்திரத்தால் — மந்திரத்தினுல் ; இவ் ஐஞ்சில் ஓதியை — ஐவகைப்பட்ட சிலவாகிய கூந்தலையுடைய இவளை ; அறிகுவென் யான் என — யான் ஆராய்ந்தறிவேன் என்று கருதி; கோவலன் நாவின் கூறிய — கோவலன் தன் நாவினுல் (தனக்குள்) கூறிக் கொண்ட ; மந்திரம் — அம்மந்திரம் ; பாய்கலைப் பாவை மந்திரம் ஆதலின் — பாயும் கலைமான் மேல் செல்லும் பாவை போன்றவளாகிய துர்க்கையின் மந்திரம் ஆதலால்: (அம்மாயத் தெய்வம்) வனசாரிணி யான் — யான் இவ்வனத்தில் திரிபவள்; மயக்கம் செய்தேன் — உன்னை மயக்கிப் பார்த்தேன் ; புன மயில் சாயற்கும் — காட்டிலாடும் மயில்போன்ற சாயலையுடைய கண்ணகிக்கும்; புண்ணிய முதல்விக்கும் — கவுந்தியடிகளுக்கும் ; என்திறம் உரையாது — இங்கு செய்த என் செயல்களைக் கூருமல்; ஏகு என்று — நீ போவாயாக என்று கூறிவிட்டு ; ஏக — அத்தெய்வம் போனபின் ;]

★

காளி கோயில்

(201—216)

வனதேவதை மறைந்ததும், தாமரை இலையில் பொய்கையிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து, களைப்படைந்திருந்த கண்ணகிக்குக் கொடுத்தான். வெய்யில் தாங்க முடியாமல் எரிந்தது. இனி இப் பாலைவனத்தில் செல்ல முடியாது என்று எண்ணி சுற்றிலும் பார்த்தார்கள். சற்று தூரத்தில் குரவம், வெண்கடம்பம், வேங்கை முதலிய மரங்கள் நிறைந்த ஒரு பூஞ்சோலை தென்பட்டது. அச் சோலையை மூவரும் அடைந்தார்கள். அங்கே ஒரு காளி கோயில் இருந்தது. காளி மறவர் வழிபடும் தெய்வம். மழை வளத்தைப் பெற்ற மருத நிலத்தில் வாழும் உழவர், ஏரைக் கருவியாகக் கொண்டு வாழ்கின்றனர். ஆனல் நீர் வளமே காணுத பாலை நிலத்தில் வாழும் மறவர்களுக்கு வில்தான் வாழ்க்கைக் கருவி. அவர்கள் எமனை ஒத்த வலிமையுடன் வில்லைக் கையிலேந்தி பகைவர் நாட்டில் சென்று வெற்றி பெற்று வாழ்பவர்கள். விழியை நெற்றியிலே யுடைய சிறப்புப் பொருந்திய காளி, அவர்களுக்குத் துணையாயிருந்து அவர்கள் ஆண்மையுடன் கொடுக்கும் பலியை எதிர்பார்ப்பவள்.

மூவரும் அக்காளி கோயிலில் தங்கியிருந்தனர்.

தாமரைப் பாசு அடை தண்ணீர் கொணர்ந்து, ஆங்கு
அயர்வு உறும் மடந்தை அரும் துயர் தீர்த்து;
மீது செல்வெம்கதிர் வெம்மையின் தொடங்கத்
தீது இயல் கானம் செலவு அரிது என்று;

கோவலன் தன்னொடும், கொடும் குழை மாதொடும்,
மாதவத்தாட்டியும் மயங்கு அதர் அழுவத்துக்
குரவமும், மரவமும், கோங்கமும், வேங்கையும்,
விரவிய பூம்பொழில் விளங்கிய இருக்கை
ஆர் இடை அத்தத்து இயங்குநர் அல்லது,
மாரி வளம்பெரு வில்ஏர் உழவர்
கூற்று உறழ் முன்பொடு கொடுவில் ஏந்தி,
வேற்றுப்புலம் போகி, நல்வெற்றம் கொடுத்துக்,
கழிபேர் ஆண்மைக் கடன் பார்த்த இருக்கும் —
விழிநுதல் குமரி, விண்ணோர் பாவை,
மை அறு சிறப்பின் வான நாடி,
ஐயை தன் கோட்டம் அடைந்தனர் ஆங்கு என்.

[தாமரைப் பாசு அடை — பசிய தாமரை இலையில்; தண்ணீர் கொணர்ந்து — தண்ணீரைக் கொண்டுவந்து; ஆங்கு அயர்வுறும் மடந்தை — அவ்விடத்தில் களைப்புற்று இருக்கும் கண்ணகியின்; அரும் துயர் — மிக்க வருத்தத்தை; தீர்த்து — போக்கி;

மீது செல் வெம்கதிர் — வானத்து மேலே செல்கின்ற வெம்மையான கதிரவன்; வெம்மையின் தொடங்க — கொடுமையாய் எரிக்கத் தொடங்க; தீது இயல் கானம் — தீமை நிறைந்த இப்பாலையில்; செலவு அரிது என்று — செல்லுதல் மிக அரிதாகும் என்று கருதி;

கோவலன் தன்னொடும் — கோவலனோடும்; கொடும் குழை மாதொடும் — வளைந்த குழை என்னும் காதணியையுடைய கண்ணகியோடும்; மாதவத்தாட்டியும் — கவுந்தியடிகளும்; மயங்கு அதர் அழுவத்து — மயக்கந் தருகின்ற பல வழிகளையுடைய அந்நிலப்பரப்பில்; குரவமும் — குரா மரமும்; மரவமும் — வெண்கடம்ப மரமும்; கோங்கமும் — கோங்க மரமும்; வேங்கையும் — வேங்கை மரமும்; விரவிய பூம்பொழில் — கலந்து வளர்ந்திருக்கும் பூக்களையுடைய சோலையில்; விளங்கிய இருக்கை — விளங்குகின்ற அவ்விடத்தில் உள்ள; ஆர் இடை அத்தத்து — கடைத்தற்கரிய வழிகளையுடைய பாலையில்; இயங்குநர் அல்லது — வழிப் போவார் அல்லாமல்; மாரி வளம் பெற — மழை வளத்தையே பெருத; வில் ஏர் உழவர் — வில்லாகிய ஏரையுடைய உழவர்களின்; (என்றது வில்லால் கொலை செய்யும் வேடர்களை;) கூற்று உறழ் முன்பொடு — எமனை ஒத்த வலிமையுடன்; கொடுவில் ஏந்தி — வளைந்த வில்லைக் கையில் ஏந்திக்கொண்டு; வேற்றுப் புலம் போகி — பகைவர் நாட்டில் சென்று; நல் வெற்றம் கொடுத்து — நல்ல வெற்றியைத் தந்து; கழிபேர் ஆண்மைக் கடன் — மிக்க பெரிய ஆண்மையாகிய கடனை; பார்த்திருக்கும் — எதிர்பார்த்திருக்கும்; விழி நுதல் குமரி — விழியை நெற்றியிலேயுடைய அழியாதவளான; விண்ணோர் பாவை — தெய்வ மகளான; மை அறு சிறப்பின் — குற்றமற்ற சிறப்பினையுடைய; வான நாடி — விண்ணுலகத்துக்கு உரியவளான; ஐயை தன் கோட்டம் — துர்க்கையின் கோயிலை; அடைந்தனர் — போய்ச் சேர்ந்தனர்.

[மயங்கு அதர் — வழிப் போவார் மயங்கும் படியான பல பிரிவான வழிகள்; அழுவம் — பரந்த இடம்; உழவர்கள் ஏரால் உழுது உண்பர். வேடர்கள் வில்லாகிய ஏரினால் உயிர்களைக் கொன்று உண்பர். ஆதலின், அவர்களை 'வில்லேருழவர்' என்றார். உறழ் — ஒத்த; முன்பு — வலிமை; துர்க்கையை அவ்வேடர்கள் வணங்குவது மரபு. அவர்கள் பகைவர் ஊரில் சென்று கொள்ளை கொள்ளும் போது, அவர்களுக்கு வெற்றியைத் தந்து, காக்கும் கடவுள். அங்ஙனம் வெற்றி தருதலால், அவர்கள் அக்கடவுளுக்குப் பலி முதலான பூசனைகள் செய்து வழிபடுவது வழக்கு. அப்பூசனைகளை எதிர்பார்த்திருக்கும் விண்ணோர் பாவையான, வானநாடியான ஐயையின் கோட்டம் என்க. கோட்டம் — கோயில்.]

(காடுகாண் காதை முற்றிற்று)

மழை

[கே. ஸ்ரீனிவாசன்]

வெயிலில் பூமி வரண்டிருக்கும்,
கல் போல் இருக்கும்.
அவனுடைய மேடு பள்ளமான முகத்தில்
சூரிய காந்தம் பொழியும்.
அவனுடைய வரண்ட இதயத்தை
கலப்பையால் கிளறுவது வீணே.
மனிதனுடைய நேசிப்புக்கு இணங்காள்
விதை விதைப்பதுவும் வீணே.
அவனுடைய உதடுகள் மட்டும்
தாகத்தால் வாடி உலர்ந்திருக்கும்
வெயிலில் பூமி வரண்டிருக்கும்.
உடைந்திருக்கும்,
வெடித்திருக்கும்,
மழைக்காகக் காத்திருக்கும்
அவனுடைய தாகத்தைப் போக்க
பாட்டாளி வியர்வையைப் பொழிகிறான்.
வீரன் ரத்தம் பொழிகிறான்
கவியோ — கண்ணீர் பொழிகிறான்.

விடிவெள்ளி

[தே. ப. பெருமாள்]

நீல விசும்பின் மௌனத்தின்
நிறையை யழிக்க உருவாகும்
கோலக் குமரி! விடிவெள்ளி
கொஞ்சும் அமுதச் சுடர்முத்தே!

உதயக் குமரி அரசாள
ஓடி விரையும் செய்தியினை
இதயம் மணங்கொள் மலருக்கே
இயம்ப நீயும் வந்தாயோ?

கமலம் உன்னைக் கதிரோன் பால்
கருதித் தூதாய் அனுப்பிடவே
அமைந்த வைரப் பாறையிலே
அணுக நாணி நின்றாயோ?

நெற்றி வியர்வை நிலத்தினிலே
நெடுகச் சிந்தி உழைத்தோர்கள்
வெற்றி யின்றிப் பட்டினியால்
மெலியக் கண்டு துடிப்பாயோ!

பட்டினி பசியால் நலிவோர்க்குப்
பஞ்சம் இல்லா உலகின்வழி
சுட்டிக் காட்ட வானத்தில்
சுடருருக் கொண்டு வந்தாயோ?

விடியும் முன்னர் வயல் நோக்கி
வெள்ளேருடன் செல் உழவனிடம்
முடிகொள் மன்னன் நீயென்றே
முறையாம் உரிமை உணர்த்துவையோ?

கொத்துப் பூ

[கி. வே. துரைசாமி ராஜா]

நான் அவரை உயிருக்குயிராய்த் தான் நேசித்திருந்தேன். அவரும் என்னைக் கைப்பிடித்த நாளிலிருந்து எந்த ஒரு அன்பைத் தன் ஹிருதயத்திலே எனக்காகப் பொங்க விட்டுக் கொண்டாரோ அந்த அன்பிலிருந்து ஒரு துளி கூடக் குறைத்துக் காட்டியதேயில்லை.

வாழ்க்கையின் ஒப்பந்த முடிச்சு இன்னும் அதிகமாக இறுகிக் கொண்டுவிட, தலைநாள் ஒரு தங்க விக்ரஹத்தைப் பெற்று அவர் மடியிலே தவழ விட்டிருந்தேன். அவருடன் தனிக் குடித்தனம் வைத்து ஐந்தாறு வருஷங்கள் ஆகியிருந்தாலும், எங்கள் வாழ்க்கையிலே, மப்பு மந்தாரம் என்பது ஒரு நிமிஷ நேரமுங்கூட ஆதிக்கம் செலுத்தியதில்லை. அவருடைய போக்குக்குக் குறுக்காக நானோ அல்லது என்னுடைய போக்குக்குக் குறுக்காக அவரோ ஒரு நாளும் நடந்து கொண்டது கிடையாது.

அன்றாடு பார்க்கிற வானவீதி எப்பொழுதும் துலாம்பரமாகவே இருக்கிறதா? மப்பு மந்தாரங்கள் படர்கின்றன — விலகுகின்றன. பேரந்தகாரம் கௌவுகிறது – கலைகிறது.

என்னுடைய வாழ்க்கை வீதியில் இப்படிச் சீர்கேடு நேராமல் எவ்வளவோ முயன்று கொண்டு தான் வந்தேன்; ஆனால் என்ன பயன்? விதியின் வேகச் சுழல் எப்படியோ மப்பு மந்தாரங்களைத் தள்ளிக் கொண்டு வந்து குப்பை போட்டு விட்டது.

கூட்டி 'நருவசாக' வைத்திருக்கிற வீட்டில் மறுபடியும் குப்பை விழாமலா இருக்கிறது? வீட்டுக் குப்பையைக் கூட்டித் தள்ளத் துடைப்பம் தயாராகத் தான் இருக்கிறது. ஆனால் வாழ்க்கைக் குப்பையைக் கூட்டித்தள்ள எந்தக் கருவியை உபயோகப் படுத்துவது?

அவர்தான், என் கணவர், கடந்த சில நாளாக ரொம்பவும் மாறிப் போயிருந்தார். பேய் பிடித்தவரைப் போல, பைத்தியகாரனைப் போல, கண்களுக்குத் தூக்கம் பிடிக்காமல், படுக்கையில் ஒட்டியும் ஒட்டாமலும் ஏதேதோ பிதற்றுவார், எனக்குப் புரியாத பாஷையில். நாளுக்கு நாள் உணவும் சுருங்கிக் கொண்டேவந்தது. உடையும் நன்றாக உடுத்துக்கொள்ள மாட்டார். ஒரே மாதத்தில் இளைத்



துத் துரும்பாய்ப் போய் விட்டார்.

வாழ்க்கையிலே மன வியாகூலம் வருவதற்கு யாதொரு காரணமும் இல்லை. சுகமாக வாழ்ந்து விட்டுப் போகப் போதுமான சொத்தும் எங்களுக்கு இல்லாமற் போகவில்லை.

டாக்டர்களைக் கொண்டு பார்த்ததில் ஒரு சில பாட்டில்கள் காலியானதுதான் மிச்சமே யொழிய அவருடைய உடல் மட்டும் உருப்படியாகவே இல்லை.

மன வியாதிதான். ஊருக்குள் அப்படியும் இப்படியும், எவளாகிலும் பின்னி விரித்து வைத்திருந்த மோஹ வலையில் மனதைக் கினதைச் சிக்க வைத்துக்கொண்டு விட்டாரோ என்றுங்கூட நினைத்து விட்டேன். சே, அவர் தங்கமான நடத்தை யுடையவர். அவரையே ஒரு நாள் கேட்டு விட்டேன், "என் நீங்கள் இளைத்துக் கொண்டே வருகிறீர்கள். கோடீஸ்வர பிரபுக்களின் டாம்பீக வாழ்க்கைகளைக் கற்பனை செய்து கொண்டு, அதையும் அனுபவிக்க முடிய வில்லையே என்ற ஏக்கம் உங்களைப் பிடித்துக் கொண்டதா? இங்கே பாருங்கள். பேய் மனதை அப்படி யெல்லாம் விட்டீர்களானல் நம் வாழ்க்கை நரகமாய்ப் போய்விடும். உள்ளதைக் கொண்டு திருப்தியாய் இருக்கும் வரையில்தான் சுவர்க்கம் நம்முடையது" என்று.

அதற்கவர் ஆதரவுடன் என்னை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, "குமுதா, அப்படி யெல்லாம் விபரீதமாக நினைத்துக் கொள்ளாதே" என்று லேசாகச் சிரித்துக்கொண்டு என்னைச் சமாளித்து விட்டார்.

ஒரு பெண் எதை வேண்டுமானுலும் உதாசீன புத்தியுடன் ஒதுக்கித் தள்ளிவிடலாம். ஆனல் உயிருக்குயிரான காதல் வஸ்துவை அதே புத்தியுடன் தள்ளிவிட்டு, வாழ்க்கையில் நிம்மதியாய்க் காலம் போடுவதற்கு அவளால் முடிகிற காரியமாகவா இருக்கிறது? இன்னும் ஒன்று, சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. காதற் கணவனுடைய நெஞ்சில் இதுவரையிலும் வெளிக் கிளம்பாது ஒளிந்து கொண்டிருக்கிற ரகசியத்தை அறிந்து கொள்ளத் துடியாய்த் துடிக்கிற ஜீவன்களில் பெண்ணுக்குப் பெண்ணைத்தான் ஒப்புக் காட்ட வேண்டியிருக்கிறது. என்ன செய்வது? வாழ்க்கைத் தேரின் சாரத்தியம் பெண் கையில் இருக்கிறதே!

அவரது வாழ்க்கையிலே சதா சந்தோஷம் நிலவியிருக்கத்தானே, அவருக்கு நான் வாழ்க்கைப் பட்டேன். என்னை நானே எந்த வழியிலோ தியாகம் செய்தாகிலும், அந்த வஸ்துவை மீண்டும் நிலை நாட்டுவதற்குப் பிரயத்தனம் செய்த என்மேல் யாருமே தவறு சொல்ல முடியாது.

அவருடன் போட்டி போட்டுக் கொண்டு என் உடலையும் சிதைக்க ஆரம்பித்தேன். என்னைத் திருத்தும் விஷயத்தில் என்னென்னவோ செய்து பார்த்தார். பிடிவாதத்திலே பெண்ணை ஆண், உலகு தொடங்கிய நாள் தொட்டுத் தோற்கடித்ததே கிடையாது. இந்தப் பரம்பரை உரிமையை நான் இன்றைக்கு விட்டுக் கொடுக்கவா போகிறேன்? "உங்கள் உள்ளக் கிடக்கையை எடுத்து உருட்டி உள்ளங் கையில் வைத்தாலல்லாமல் சமாதான முடிவுக்கு வரமாட்டேன்" என்று சொல்லி விட்டேன்.

ஒருநாள் அந்திநேரத்தில் கண்ணீ ரும் கம்பலேயுமாக விழுந்து கிடந் தேன். எங்கேயோ சுற்றிவிட்டு வந்த அவர், என் நிலையை உணர்ந்து கொண்டு அன்பும் சோகமும் கலந்த குரலில் என்னை நாலைந்து தடவை கூப்பிட்டார். நான் மறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டேன். ஏனென்று கூடப் பேசவில்லை.

என் தலைமேட்டில் வந்து உட் கார்ந்து, என் தலையை அவர் மடி மீது வைத்துக் கொண்டு, "குமுதா, என்னுடன் பேசுகி ருயா இல்லையா" என்று சொல்

அது கல்லிலும் கருங்கல்லாய் மாறி விடுகிற சந்தர்ப்பங்களை வாழ்க்கை வீதியில் ஏதோ ஒன்று கொண்டு வந்து விட்டுவிட்டுப் போய் விடுகிறது. அப்படிக் கருங் கல்லாக மாறிப் போய் விட்டாலோ, எந்த ரசாயனத் தாலும் அதைக் கரைத்துவிட முடி யாது. ஒன்றே ஒன்றினால்தான் கரைக்க முடியும் – அதுதான் ஒரு துளி அன்புக் கண்ணீர்.

நான் எழுந்து உட்கார்ந்தேன். என் மோவாயைப் பிடித்துக் கொஞ்சும் பாவனையில், "என் கண்ணே குமுதா, முழு ஆசையை



லிக்கொண்டே நாலைந்து துளி கண்ணீரைப் பொல பொல வென்று என் முகத்தில் சிந்தி விட்டார்.

மிருதுவிலும் மிருதுவான வஸ்து பெண்ணுடைய மனம்தான்.

வேண்டுமானாலும் பூர்த்தி செய்து விடலாம் – ஒரு முற்றுப் பெருத ஆசையை – அதிலும் ஒரு பெண் ணுகிய நீயா பூர்த்தி செய்யப் போகிருய்? விதிக் கயிற்றின் நுனி எவன் கையிலே இருக்கிற

தோ அவனுல்தான் முடியும்; நீ என் விருதாவிலே என்னை வேதனைக்கு உள்ளாக்குகிருய்? நான் சொன்னபடி கேட்கிருயா இல்லையா" என்று மதுரத் துளிகளைத் தூற்றி விட்டார்.

"அந்த முற்றுப் பெருத ஆசையைத்தான் சொல்லுங்களேன்! முற்றுப் பெறுமா பெருதா என்று பார்த்து விடுகிறேன்" என்றேன்.

மீண்டும் குரலைத் தாழ்த்திக் கொண்டு, "கைக்கு எட்டாத, வாழ்க்கையில் கைகூடாத ஒன்றுக்கு மனதை விட்டுவிட்டுக் கஷ்டப்படுவதில் ஆடவனுக்கு ஒப்பு ஆடவன்தான்; அதை அப்படியே விட்டுவிடு! இந்த ஜென்மம் பூராவும் எண்ணி எண்ணி ஏங்குவதிலேயே கழிந்து போகட்டும்" என்று ஏக்கம் ததும்ப முறையிட்டார்.

"ஏங்கி, ஏங்கிச் சாவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிற தென்ருல் உங்களைக்கண்டு ஏங்கி ஏங்கிச் சாவதற்கு எனக்கேன் உரிமையில்லை? இனிமேல் நீங்கள் என் வழிக்கு வரவேண்டாம்" என்று பிகுவுடன் சொல்லி முடித்தேன்.

வழிக்கு வந்தவர் போன்ற பாவனையில், அவருடைய ஜேபியில் கைவிட்டு ஏதோ ஒன்றை எடுத்து என் கையில் கொடுத்தார். அது ஒரு பூங்கொத்தாய் இருந்ததைப் பார்த்து ஆச்சர்யப் பட்டுப் போனேன். அதில் இரண்டே பூக்கள். ஒன்று மலர்ந்து மணம் விட்டுக் கொண்டிருந்தது. இன்னென்று மலராத மொக்கு. மரியாதையாக என் கையிலே வாங்கி வைத்துக்கொண்டேன். கொஞ்ச நேரம் என் முகத்தையும் அதையும் மாறி மாறிப் பார்த்து விட்டு, "அந்த மொக்கைப் பார்த்தாயா குமுதா" என்ருர்.

"மொக்கை மட்டுமென்ன மலரையுங்கூடத்தான் பார்க்கிறேன்" என்றேன்.

"அந்த மொக்கு அதே மலரிடத்தில் செய்து கொள்ளும் முறையீடு உன் காதுக்குக் கேட்கிறதா?" என்ருர்.

"பூக்களை வாங்கிக் கூந்தலில் சொருகிக் கொண்டால், கூந்தலுக்கு மணம் வரும் என்றுதான் எங்கள் வாத்தியார் சொல்லிக் கொடுத்திருக்கிருரே யொழிய, பூக்கள் ஒன்றுக்கொன்று பறிமாறிக் கொள்ளும் பாஷையை அவர் சொல்லிக் கொடுக்கவில்லையே" என்றேன்.

"கோபித்துக் கொள்ளாதே. அதே மொக்கும் அதே கொத்தில் மலர ஆசைப்படுகிறது. அதற்குத்தான் அது அனுமதி கேட்கிறது" என்ருர்.

"ஆஹா நன்ருகவே மலரலாம். அனுமதி என்ன வேண்டிக் கிடக்கிறது. நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே! உங்கள் ஆசைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?" என்று லேசான சிடுசிடுப்பை வருவித்துக்கொண்டு கேட்டேன்.

என் கையை இறுகப் பிடித்துக் கொண்டு குரலை மாற்றிக் கொண்டு, "குமுதா, என்னுடைய நெஞ்சை இன்னெருத்திக்கும் பங்கிக் கொடுத்து விட்டேன். நீ உட்கார்ந்திருந்த சிம்மாசனத்திலே அவளுக்கும் பாதி இடம் கொடுக்க மாட்டாயா? பாதி இருட்டாய் இருக்கிற என் மனவெளியில் சம்பூர்ண ஒளி நிலவட்டும்" என்ருர்.

அவ்வளவுதான்; உலகமே விர்ரென்று பல ஆயிரந் தடவை சுற்றி

விட்டுத் தன் நிலையில் வந்து நின்றது. மூச்சுப் போய் விட்டது. என் ஹிருதய பாகத்தில் அதுவரையிலும் எரிந்து கொண்டிருந்த நந்தா விளக்கு குப்பென்று அணைந்து விட்டது.

எத்தனை கோடி இடைஞ்சல்களை வேண்டுமானாலும், விதி, ஒரு பெண் மீது ஏவி விடட்டும். அதையெல்லாம் பொறுமையாகச் சகித்துக்கொண்டு விதிக்கு முன் தலை வணங்கி விடுவாள். ஆனால் தன் கணவனுடைய இதயத்தில் மட்டும் இன்னொருத்தியும் இடம் பிடிக்க வருவாளேயானால் - அதுவும் விதியின் ஆக்கினையாகவும் இருக்குமானால், அதை அவளால் சகிக்க முடியாது; அந்த விதிக்கு முன் வணங்கிக் கொடுக்கவும் மாட்டாள்.

அவரது கைப் பிடியை உதறிக் கொண்டு எழுந்தேன். முந்தானையைப் பிடித்துக் கொண்டு, "குமுதா, ஒரே கொத்திலே இரு மலர்கள் மலரக் கூடாதா என்ன? ஒரே வானத்திலே ஒரு சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடங் கிடைக்கவில்லையா என்ன? என்னை மன்னிக்க மாட்டாயா? நான் சந்தோஷமாக வாழ்வதிலே உனக்குப் பிரியம் இல்லையா? நான் யார்? நீ யார்? அவள் யார்...?" என்று அவர் சொல்லி முடிப்பதற்கு முன்னேயே தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த என் தங்கக் கட்டியை எடுத்துத் தோளிலே போட்டுக் கொண்டு, "உங்கள் இதயம் மட்டும் என்ன - சொத்து, சுகம், ஏக போக உரிமை யெல்லாம் அவளுடையதாகவே இருக்கட்டும். எனக்கு இந்த வீட்டிலே ஒரு நிமிஷங்கூட வேலையில்லை" என்று ஆத்திரங் கலங்கச் சொன்னேன். மறுநாள் வீட்டை விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி விட்டேன். அந்தச் சமயம் நான் பட்டிருந்த வேதனையும் துக்கமும் உண்மையிலேயே கடவுளால்தான் அளவெடுத்துச் சொல்ல முடியும்.

2

என் பிறந்த வீட்டுடன் தொடர்பற்றுக்கொண்டு மூன்று வருஷங்களுக்கு மேல் ஆகிறது. என்னுடைய தங்கை நளினாவின் திரட்டுக்குங்கூட நான் அடி யெடுத்து வைக்கவில்லை. ஒருவனுக்குக் கைப் பிடித்துக் கொடுத்து விடுகிறவரைக்குந்தான் பெண்ணுக்குப் பிறந்த வீட்டில் உரிமை உண்டு. என்ன எப்படி ஆகி விட்டாலும் உடையவனுடைய வீட்டு வெளியில்தான் தன்னுடைய முடிவைக் கோலிக் கொண்டு விடப் பழகிப் போனாள் பெண்.

நான் பிறந்த வீட்டில்தான் இருந்தேன் என்றாலும் என் உயிர் பூராவும் அவரிடத்திலேயே விட்டு விட்டு வந்திருந்தேன். தவறு செய்வது ஆடவனுடைய சகஜமான உரிமைதான்; என்றாலும் மன்னிக்க முடியாத தவறுகளுக்குப் பிராயச்சித்தம் இல்லை என்கிறாள் பெண். அந்த நிமிஷத்தில் என்னவோ முன்பின் யோசிக்காமல் திரஷ்காரம் செய்து விட்டுத் தான் வந்து விட்டேன்; இப்பொழுது என் மனதை அரிப்பது யாருக்குத் தெரியும்?

இவ்வளவு நாளும் என்னை அன்பாக நேசித்து வந்ததெல்லாம் வெறும் நடிப்புத்தான்; இல்லையென்றால் என்னைத் தேடி இன்னுமா வராமல் இருப்பார்?

நினைவொன்றிருக்கப் புறத்திலே ஒரு விதமாக பாவனை செய்து

கொண்டு திரிவதில் ஆணுக்குத் தான் முதல் மார்க்குக் கொடுக்க வேண்டும்.

சமயம் அந்த மாயக்காரியின் மோஹக் கடலில் அமிழ்ந்து விட்டாரோ என நினைக்கும் பொழுது

நாட்கள் பல சென்றுவிட்டன. அவருடைய சமாச்சாரமே என் காதுக்கு எட்டவில்லை. ஒரு

எனக்கு குபு குபு என்று அழுகை பொங்கி விடும். இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் என் தங்கை

தன் சாதுர்ய புத்தியால் என்னை ஜயித்துத் தேற்றி விடுவாள்.

நளினாவுக்குக் கலியாணத்தைச் செய்துவிட என் தந்தை நிச்சயம் செய்திருந்தார். எங்கெங்கோ இருந்து வரன்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தன. கடைசியாக வந்த வரன் தான் எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

தன்னுடைய கணவன் மலை போலே இருக்க, இன்னொரு ஆடவனைப் பற்றி வருணிப்பதென்றால் பெண்ணைப் பொருத்தவரையிலும் கூடாதுதான். கோடுதல் படாத நெஞ்சுடனே இன்னொருவரைப் பற்றிப் பிரஸ்தாபம் செய்வதிலே என்ன தவறு இருக்கிறதோ, எனக்குத் தெரியவில்லை.

முக லக்ஷணமுள்ள புருஷன். அடக்க ஒடுக்கம், அவன் நடந்து கொள்ளும் மாதிரியிலேயே தெரியும். கொஞ்ச நஞ்சம் பூஸ்தியும் உள்ள பேர்வழி. என் தங்கையினுடைய சாதுர்யமான புத்தி சாலித் தனத்துக்கு ஏற்றவன் தான். என்ன இருந்தாலும் நளினாவினுடைய இதயத்தைச் சோதனை போட்டுப் பார்க்க வேண்டாமா?

நளினா அருவருப்பாகவே முகத்தை வைத்திருந்ததைப் பார்த்து நான் திடுக்கிட்டே போய் விட்டேன். வலிய வந்து கிடக்கிற அமிர்த கலசத்தைத் தட்டி விட்டு வேடிக்கை பார்க்க ஆசைப்படுகிறாளே! என்ன இருந்தாலும் பெண் புத்தி பின் புத்திதான்.

கொல்லைப் புறத்திலே இருந்த மகிழ மாத்தடியில் அவளைக் கூட்டிக்கொண்டு போய் உட்கார வைத்து அவளுடைய மனதைக் கலைக்க ஆரம்பித்தேன்.

"என்னடி ஒரு விதமாகவே இருக்கிறாயே, நிச்சய தாம்பூலம் செய்து விடலாமா, உன்னாலே தான் பாக்கி. மாப்பிள்ளைக்கென்ன குறைச்சல் மன்மதனைட்டமா தோற்றம். கண்ணுக்கு

நிறைந்தவன். போய்ச் சந்தோஷமாய் இரு'' என்று கோபித்துக் கொண்டேன் செல்லமாக.

அது வரையிலும் தலை கவிழ்ந்து கொண்டு நிலங் கீறிக் கொண்டிருந்த அவள், வாடிப் போயிருந்த மலர் முகத்தைத் தூக்கி என் முகத்தைப் பார்த்தாள். கண்களில் தாரை தாரையாய்க் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. எனக்கு ஏன் கோபித்தோம் என்றாகி விட்டது.

அவரை நினைத்துக் கொண்டு ஆற்ற மாட்டாத துக்கத்தால் நான் அழும் பொழுதெல்லாம் முக மலர்ச்சியுடன் தேற்றி விட்டுக் கொண்டிருந்த அதே முகம்தான், இன்று கண்ணீர் வடிக்கிறது என்றால் எனக்கு எப்படித்தான் இருக்கும்.

''என்னடா கண்ணு அழாதே, உனக்கு ஒரு குறைச்சலும் நான் செய்து விடவில்லையே. உன் உள்ளக் கிடக்கையைச் சொல்லு'' என்றேன்,

தழுதழுத்த குரலில் சொல்ல ஆரம்பித்தாள், ''அக்கா, நானும் உன்னைப் போல ஒரு பெண்ணாகவே வாழ்ந்து விட்டுப் போக ஆசைப்படுகிறேன். என்னைப் பேயாக்கி விடாதே அக்கா. என்னுடைய எதிர்காலத்தை அடைக்கலப் பொருளாக உன் மடியில் தானக்கா போட்டு விட்டேன்'' என்று.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ''உனக்கென்ன பைத்தியமா பிடித்துக் கொண்டது, என்னென்னமோ உளறுகிறாயே'' என்று கடிந்து கொண்டேன்.

''அக்கா நான் என்ன செய்யட்டும், விதிச் சுழலின் வேகத்தை என்னால் சமாளிக்க முடியவில்லை. ரொம்ப நாளைக்கு முன்னாலேயே என் நெஞ்சை ஒருவருக்கு அடிமைப் படுத்திவிட்டேன். அக்கா என்னை மன்னித்து விடு. நீ எந்த மரத்தில் கூடு கட்டி வாழ்கிறாயோ அதே மரத்தில் தானக்கா நானும் கூடு கட்டி வாழ ஆசைப்படுகிறேன். உன் இரண்டு கையிலும் என் வாழ்க்கைக்கு வேண்டிய அமிர்தமும், விஷமும் இருக்கிறது. உனக்கு எது இஷ்டமோ அதைக் கொடு அக்கா'' என்று சொல்லிக் கொண்டே தன்னுடைய மடியில் ஒளித்து வைத்துக் கொண்டிருந்த சிறு புகைப் படத்தை என் கையில் கொடுத்துவிட்டு, அவளுடைய தலையை என் மடியில் போட்டுக் கொண்டாள்.

புகைப் படத்தைப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது! வேகமாக உலகம் என்னைச் சுற்றிவர ஆரம்பித்தது. ஆனால் நான் விடவில்லை.

விதி நம்முடன் நன்மை தீமைகளை வைத்துக்கொண்டு ஓயாது விளையாடுகிறது. இதை நாம் வேதனையாகக் கொண்டு விட்டாலோ வாழ்க்கை ருசி யற்றுச் சப்பென்று போய் விடுகிறது. சகஜமாகக் கொண்டு விட்டாலோ, இந்த அலங்காரமான உலகத்திலே இன்னும் குறைந்தது ஆயிர வருஷங்களாவது வாழ்ந்து விட வேண்டும் என்று சபலம் பிறக்கிறது.

புகைப் படத்தைப் பல தடவை பார்த்துக் கொண்டேன். என் பர்த்தாவின் படம்தான் அது. எனக்கும் அழுகை வந்தது. இப்பொழுது யார் யாரைத் தேற்றுவது? குருடனைக் குருடன் கூட்டிக்கொண்டு வழிப் பிரயாணம் செய்வது போல் இருந்தது. என்

னுடைய வாழ்க்கை, ஏன்? எங்கள் இருவருடைய வாழ்க்கையுந்தான்.

கொஞ்ச நேரம் மௌனத்தில் லயித்தோம். வாழ்க்கையிலே குதிக்கின்ற புதிர்களுக் கெல்லாம் மௌனத்தில்தான் விடை கிடைக்கிறது.

"என் கண்ணே நளினு, எழுந்திரம்மா, அமிர்தத்தைக் குடிப்பதாக நினைத்துக் கொண்டு விஷத்தைக் கொட்டிக் கொண்டவள் நான். இந்த விஷ விருக்ஷத்திலா நீயும் கூடுகட்ட ஆசைப்படுகிருய்?" என்றேன்.

அதற்கவளும் "வாழ்க்கையின் ருசி தெவிட்டிப் போகாமல் இருக்கத்தானே அக்கா சின்னச் சின்ன மனஸ்தாபத் துளிகளும் அடிக்கடி வந்து கலந்து விடுகின்றன. அதை நாம் அவசியம் அனுபவித்துத் தானக்கா ஆக வேண்டும்" என்ருள்.

"அடியம்மா சமாச்சாரம் உனக்குத் தெரியாது. கன்றுக் குட்டியும் குடிக்காமல், கலத்திலும் நிற்காமல் அந்தப் பால் கொட்டிப் போய் ரொம்ப நாளாச்சுதடி கண்ணு. கடைசி கடைசியென்று கொட்டிப் போன பாலையா கட்டி அழுக வந்தாய்?" என்று நான் சொன்ன பொழுது எனக்குப் பொத்துக் கொண்டு துக்கம் வந்தது. நான் அழுதாலோ அவளும் அழுதுதான் தீருவாள். அதற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டு அடக்கிக் கொண்டேன். அர்த்தம் புரியாதவளைப் போல் என்னையே பார்த்துக்கொண்டு நின்ருள்.

தோல்வியான காரியங்களைச் செய்வதிலோ அல்லது தோல்வியை ஒத்துக் கொள்வதான காரியங்களைச் செய்வதிலோ, பெண் எப்பொழுதும் ஜாக்கிரதையாகத் தான் இருப்பாள். என்னுடைய வீட்டுக்காரர் வெளியிடத்திலே நெஞ்சை ஒப்புவித்துவிட்ட சமாச்சாரத்தை இன்னும் என் தகப்பனருக்கோ, தாயாருக்கோ, தங்கைக்கோ மறை பொருளாகக் கூடச் சொல்லி வைக்கவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் நான் வாழ்க்கைத் தளத்திலே தோற்கடிக்கப்பட்டுப் புறமுதுகு காட்டியவளாகத்தானே அர்த்தம்?

இனி என்னுடைய ரகசியத்தை தங்கையிடம் மூடி வைத்திருந்து என்ன பிரயோஜனம்? நான் மலர்ந்திருக்கும் கொத்தில் தானே அவளும் மலர்ந்து விட்டாள்?

"என்டா கண்ணு என்னையே பார்க்கிருய், விதியின் குறும்புத் தனமான விளையாட்டுக்கு நீயும் நானும் என்ன செய்வது? அவர் எவளோ ஒருத்தியுடன் அல்லவா வாழ்ந்து கொண்டிருக்கிருர். 'சிலந்திக் கூட்டுக்குப் போன ஈ மறுபடியும் திரும்பி வந்து சேரும் என்று நிக்கரசு உண்டா?" என்றேன்.

அதற்கவள் என் வாயின் மீது கையை வைத்து மூடிக்கொண்டு, "அக்கா அவரை அவ்வளவு மோசமாக நினைத்து விடாதே அக்கா! மனம் போன போக்கெல்லாம் போகக் கூடியவர் அல்லவே அக்கா. அத்தானை எப்படியாகிலும் வரச்சொல்லு, இல்லையென்ருல் உன் காலடியிலேயே என்.........? என்று விபரீதமாக முடிவு செய்தாள்.

3

என்னுடைய பர்த்தா இவ்வளவு தூரம் மாறிப் போய்விட, இன்

ஒருத்தி அவருடைய இதயத்திலே இடம் பிடித்துக் கொண்டதனல்தான் என்பது முன்னமேயே தெரிந்த விஷயம். அந்த ஒருத்தியும் என் தங்கை என்று நான் தெரிந்துகொண்ட பொழுது பேரானந்தம் எனக்கு நிலை கொள்ளவில்லை.

கதை வளர்த்துவதில் என்ன பலன்? அவரை வருவித்து என் தங்கையை அவருக்கே கல்யாணம் செய்து வைத்தேன். இரண்டு மூன்று வருஷங்கள் தொடர்பில்லாமல் இருந்தும் எப்படி இவர்கள் இருவரும் நேசத்தை வளர்த்துக் கொண்டார்கள் என்று என் மனதில் கேள்வி எழும் போது விதி என்ற ஒரு வார்த்தைதான் என் கண் முன்னே வந்து நிற்கும்.

ஒரு சமயம், "ஏ மனமே, அவள் யார்; நீயும் அவளும் ஒரே கொத்தில் மலர்ந்த மலர்கள் தானே? இரண்டு மலர்களையும் ஒருவனே நுகரக் கூடாது என்பதற்குச் சட்டம் ஏதாவது உண்டா?" என்று தோன்றும்.

மற்றுமோர் சமயம், "நாம் விழுந்தது பாலைவனம் அல்ல. மலர்க்காடு" என்று மனம் மகிழ்ச்சி கொள்ளும். தங்கையின் ஆனந்தமும் என் ஆனந்தந் தானே?

வாழ்க்கை

இரு நோக்கங்கள் வாழ்க்கையில் இருக்க வேண்டும். ஒன்று நமது தேவையைப் பூர்த்தி செய்கிறது; பின்னர் அதையே அனுபவிக்கிறது. உலகத்திலேயே மிகவும் புத்திசாலிகள்தான், கிடைத்ததை அனுபவிக்கிறார்கள்.

— எல். பி. ஸ்மித் —

வெள்ளியங்கிரி யாத்திரை

[எஸ். பாலசுந்தரம்]

வடக்கேயுள்ள இமாலயத்தை எவ்வளவு புனிதமாகக் 'கைலயங்கிரி' என்றழைத்துக் கொண்டாடுகிறார்களோ, அதைப் போலவேதான் தெற்கேயுள்ள 'வெள்ளியங்கிரி, மலையைத் தமிழ்நாட்டாரும் கொண்டாடுகிறார்கள்.

மற்ற ஜில்லாக்காரர்களை விட கோயமுத்தூர் ஜில்லாவிலிருப்பவர்களுக்கு (போகிறவர்களைப் பார்ப்பதினால்) வெள்ளியங்கிரியைப் பற்றித் தெரியும். அங்கு செல்வோரின் எண்ணிக்கை குறைவுதான். ஏனெனில் முதலில் அங்கு போய் வந்தவர்கள், தாங்கள் அநுபவித்த பிரயாணச் சிரமத்தைச் சொல்லக் கேட்டவுடன், அங்கு போக வேண்டுமென்ற ஆர்வமுள்ளவர்களின் உற்சாகம் குறைந்து போகிறது.

"ஒன்றன் மேல் ஒன்றாக ஏழு மலை; எட்டு மைல் உயரம் நடக்க வேண்டும்; ஒவ்வொரு மலையும் செங்குத்தாக இருக்கிறது. சரியான படிகள் கிடையாது; சறுக்கும் பாறைகளும், குத்தும் பொடிக் கற்களும்; கோணல் மாணலான தொடர்பற்ற ஒத்தையடிப் பாதை; இருள் நிறைந்த மரஞ் செடிகள் அடர்ந்த, காட்டுப் புதர்கள்; ஒவ்வொரு அடியும் செங்குத்தாக எடுத்து வைத்து ஏற வேண்டும்; கால் கடுத்து வலி பொருக்க மாட்டாமல் அடிக்கடி களைத்துப் போய் அப்படியே உட்கார்ந்து விட வேண்டும்." என்றெல்லாம் கேள்விப் பட்டேன்.

பலவித அலுவல்களாலும், தகுந்த நண்பர்கள் கிடைக்காததாலும் என் பிரயாணத்தை மூன்று வருஷங்களாகத் தள்ளிக் கொண்டிருந்த நான், மேல் குறிப்பிட்ட விவரங்களைக் கேட்கக் கேட்க ஆவல் அதிகமாற்றே தவிர, கொஞ்சங்கூடக் குறையவில்லை. இயற்கையின் இன்ப எழிலைக் கண்டு, மனம் லயித்து ஆனந்தமடையும் பண்புள்ளம் கொண்டவர்களை இவ்விதத் தொல்லைகள் பாதிக்க முடியாதல்லவா?

எனவே ரசிக உள்ளங்கொண்ட சில நண்பர்களுடன் வெள்ளியங்கிரி மலைக்குச் செல்ல நிச்சயித்து விட்டேன். இதற்கென ஒரு பௌர்ணமி இரவு தேர்ந்தெடுக்கப்பட்டது.

அப்பொழுது தானே இயற்கை தேவியின் சௌந்தர்யத்தை இன்ப நிலவொளியில் கண்டு மகிழலாம்!

வெள்ளியங்கிரி மலையின் அடிவாரத்தைப் போய்ச் சேருவதற்கு நாங்கள் அடைந்த சிரமத்தை இப்பொழுது நினைத்தாலும், அவ்வளவு உயரமான மலைமீது ஏறி, இறங்கி வந்த கஷ்டமும் அலுப்பும் கூடப் பெரிதாகத் தோன்றவில்லை! கோயமுத்தூரிலிருந்து பதினாறு மைல் தூரத்திலுள்ள ஆலந்துறைக்கு மோட்டாரில் சென்று, அங்கிருந்து கட்டை வண்டியில், ஆமை வேகத்தில் ஆறு மைல் பிரயாணம் செய்து மலையின் அடிவாரத்தை அடைந்தோம்.

"அட! மோட்டார் பிரயாணம் தானே! இதில் என்ன சிரமம்?"

என்று சுலபமாகக் கேட்டு விடலாம். மோட்டாரில் 'ஜம்' மென்று உட்கார்ந்து கொண்டு போவது சிரமமில்லைதான். ஆனால்... மோட்டாருக்கு டிக்கட் வாங்குவதைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன். பயில்வான்கள், சர்க்கஸ் வித்தை போன்ற நிபுணர்கள், செப்பிடு வித்தைக்காரர்கள்— இவர்களைப் போன்றவர்களின் கலை நிபுணத்துவம் இந்த விடத்தில் ஒன்றுமே பயன் படாது. இவ்வளவிற்கும், இந்த டிக்கட் கொடுக்கும் ஆசாமியோ ஒரு நோஞ்சல் பேர்வழி! அவரைச் சுற்றி ஏக காலத்தில் அறுபது எழுபது ஆட்கள் சூழ்ந்து கொண்டு ஆளுக்கொரு பக்கமாக பந்து போல் (இந்த இடத்தில் வாசகர்கள் 'Basket Ball' என்னும் பந்து விளையாட்டை சற்று கவனத்திற்குக் கொண்டு வரவும்.) உருட்டினால். யாருக்குத்தான், எப்படித்தான் அவர் டிக்கட் கொடுக்க முடியும்? அவரை நெருங்குவதென்றால் அவ்வளவு ஆட்களையும் விலக்கிக் கொண்டல்லவா போக வேண்டும்? இந்த நெருக்கடியைக் கண்டதும், சிலர் இங்கேயே உண்மையில் டிக்கட் வாங்கி விடுவார்களோ என்று எங்களுக்கு இரக்க முண்டாகி விட்டது!

இரண்டே பஸ்கள் கோயமுத்தூருக்கும், ஆலந்துறைக்கும் ஓடுகின்றன. ஆகையால் மூன்றாவது முறையாக வரும் பஸ்ஸுக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு காத்திருந்தோம். இரண்டு மணி நேரம் டிக்கட் வாங்குவதற்குப் போராடிய பிறகு, நான்கு மணி நேரம் பஸ்சுக்கு காத்திருக்க வேண்டியதாயிற்று. எனவே, டிக்கட் வாங்கிக்கொண்டு, பஸ்ஸில் ஏறுவதற்கு, ஒரு பகலில் பாதிப் பொழுது கஷ்டத்துடன் கழிந்து விடுகிறது. பொறுமைசாலிகளுக்கும் கூட, ஆரம்பத்திலேயே 'திரும்பி விடலாமா' என்று தோன்றிவிடும். ஒருவிதமாக பஸ்ஸில் ஏறி, மாலை ஐந்து மணிக்கு ஆலந்துறை வந்து சேர்ந்தோம். இங்கிருந்து ஒரு இரட்டை மாட்டு வண்டியை (நபர் ஒருவருக்கு எட்டணா வீதம்) அமர்த்திக் கொண்டு, இரவு எட்டு மணிக்கு வெள்ளியங்கிரி மலையின் அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தோம்.

அலை யலையாக உருண்டோடும் மேகங்களின் அழகிய காட்சி

பிரதி வருஷமும் பங்குனி, சித்திரை மாதங்களில்தான் இம் மலைக்கு யாத்திரை போவார்கள். ஆகையால் அதுசமயம் ஜன நெரிசல் அங்கு அதிகமாக யிருந்தது. மலையடிவாரத்தில் திருவிழாக் காலங்களில் சகஜமாகக் காணப்படும் காக்ஷிகள் போல் சில்லரைக் கடைகள், ஓட்டல்கள், பித்தளை கிலிட் நகைக் கடைகள், சோடா, ஷர்பத்

கடைகள் முதலியன நிறைந்திருக்கின்றன.

மேடு பள்ளம் நிறைந்த, ஒழுங்கில்லாத குறுகிய பாதையில், கட்டை வண்டியில், ஆடியசைந்து செய்த பிரயாண அலுப்பினால் எங்கள் கட்டைகளையே இரண்டு மணி நேரம் கீழே போட்டு விட்டோம். பிறகு, மலையேறப் போவதால் குறைந்த அளவு ஆகாரம் புசித்துவிட்டு, இரவு பத்து மணிக்கு மலை ஏற ஆரம்பித்தோம். அடிவாரத்தில் இருக்கும் மூங்கில் கழிகள் விற்கும் கடைகளிலொன்றில், மற்ற யாத்திரிகர்களைப் போலவே நாங்களும், ஆளுக்கொரு மூங்கில் தடிகளை வாங்கிக் கொண்டோம். மலை மீது ஊன்றி, ஊன்றி ஏறுவதற்கு இவை உதவியாகின்றன. சிரமத்தையும் கொஞ்சம் குறைக்கின்றன.

மலையின் ஒரு புறம்

முதல் மலை

பௌர்ணமி நிலவு நன்கு காய்ந்து கொண்டிருந்த போதிலும் இம்மலையில் மரங்கள் அடர்ந்திருப்பதால், வழி நெடுகிலும், இருளும், ஒளியும் கலந்து கோலம் போட்டிருப்பது போல் தோன்றுகிறது. சிறிது தூரம் ஏறியதும் வெள்ளை விநாயகர் கோவில் இருக்கிறது. 'யாதொரு இடையூறும் நேராமல் திரும்பி வர வேண்டும்' என்று இங்கு ஆரம்பத்திலேயே மக்கள் பிரார்த்தனை செய்து கொண்டு போவது வழக்கமாம்! மற்ற ஆறு மலைகளைவிட இது செங்குத்தானது. பாதி வழி சென்றதுமே களைப்புத் தட்டி, கால் வலி எடுக்க ஆரம்பித்து விட்டது. மற்ற மலைகளையும் எப்படிக் கடப்பது என்ற எண்ணம் மனதில் உதித்து விடுகிறது. பலருக்கு, திரும்பி விடலாமா என்னும் எண்ணம் மேலோங்கி நிற்கும்.

எறும்புகளைப் போன்று மனித கூட்டங்கள் சாரை, சாரையாக ஏறிக் கொண்டும், இறங்கிக் கொண்டுமிருக்கும் காட்சி மனதிற்கு உற்சாகமளிப்பதால் வழியில் இடையிடையே தோன்றும் சலிப்பு உடனுக்குடன் மறந்து விடுகிறது. பழனி, திருப்பதி, திருத்தணி முதலிய ஸ்தலங்களுக்குச் செல்லும் கிராம ஜனங்களின் ரகத்தைச் சேர்ந்தவர்களைத்தான் இங்கு பெரும்பாலும் கண்டோம். இரண்டொரு பள்ளி மாணவர்கள் மட்டும் எங்களைப் போல் உல்லாசப் பிரயாணிகளாக வந்திருப்பதைக் கண்டோம்.

கீழே இருக்கும் புத்தகக் கடைகளில் விற்கும் பக்தி ரசப் பாட்டுப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு, பகற் காலங்களில், அதிலுள்ள பாட்டுக்களைப் பாடிக் கொண்டே மக்கள் மலையேறுகிறார்கள். இராக் காலங்களில் தங்களுக்குத் தெரிந்த பாடல்களை – சினிமா பாட்டுக்கள் உள்பட – பாடிக்கொண்டே ஏறுவதும் இறங்குவதுமான காட்சி கவனிக்கத் தக்கதாகும்.

பலர் "வெள்ளியங்கிரி நாதனுக்கு ஹர ஹரா," "முருகனுக்கு ஹர ஹரா" என்பது போன்ற பலவித கோஷங்களை உரக்க உச்சரித்துக்கொண்டு போகிறார்கள். மேல் நோக்கிச் செல்லும் கூட்டமோ அல்லது கீழ் நோக்கி வரும் கூட்டமோ ஒன்றை யொன்று சந்திக்கும் பொழுது இக் கோஷங்களை அதிகமாகக் கிளப்பி, ஒருவருக் கொருவர் உற்சாக மூட்டிக் கொள்ளுகிறார்கள். சிரமத்தையும், கால் வலியையும் மறந்தோ அல்லது பொருட் படுத்தாமலோ நடப்பதற்கு இது ஒரு சிறந்த மார்க்கம். பாடல்களும், கோஷங்களும் அவர்களுக்கு இது விஷயத்தில் மிகவும் உதவி செய்கின்றன. இதுவுமல்லாமல், இக் கோஷங்களினால் ஏற்படும் பேரொலி அங்கிருப்பதாகக் கூறப்படும் மிருகங்களையும், சிறு ஜந்துக்களையும் அப்புறப்படுத்த முன்னெச்சரிக்கையாகவும் உதவுகிறது.

இரண்டாவது மலை

முதல் மலை ஏறி முடிந்ததும் இரண்டாவது மலை ஆரம்பமாகிற இடத்தில் இளைப்பாறும் பொருட்டு ஆங்காங்கு, சிற்சில இடங்களில் சம தரைகளும், நிழலடர்ந்த மரங்களும் இருக்கின்றன. இவ்விடத்தைச் சேர்ந்ததும் நாக்குலர்ந்து தாக மெடுத்தது. ஆனால் இங்கு ஜலம் கிடையாது. அநேகமாக ஒருவரும் கையுடன் தண்ணீர் கொண்டு வருகிறதில்லை. செங்குத்தாக ஏற வேண்டிய சிரமமும், படிகளில்லாத கஷ்டமும், சறுக்கும் பாதையுமாயிருப்பதினால் எவ்விதமான பளுவையும் சுமந்து செல்ல ஒருவரும் இஷ்டப்படுவதில்லை. தவிர, மேலே போகப்போக நீர்ச் சுனைகள் இருப்பதால் கீழே யிருந்து தண்ணீர் சுமந்து செல்ல வேண்டிய அவசியமில்லை. ஆயினும் ஒவ்வொரு மலையாகக் கடந்து செல்லும் சமயம் தாகத்தை அடக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இது விஷயத்தில் நாங்கள் முன் எச்சரிக்கையோடு எலுமிச்சம் பழங்களைக் கொண்டு போனது எவ்வளவோ நல்லதாக இருந்தது. அதனால் எங்களுக்கு ஏற்படும் சோர்வை அடிக்கடி குறைத்துக் கொண்டோம்.

இம்மலையில் போகும் பொழுது முதல் மலையைப் பார்க்கிலும் ஒரு வித மாறுதலை இயற்கையில் காணலாம். மரங்களின் அடர்த்தி சிறிது குறைகிறது. கரடு முரடான பாறைகள் அங்கங்கே தென்படுகின்றன. குளிர்ந்த காற்று வீசி உடலுக்குச் சுகத்தைக் கொடுக்கிறது. ஆனால் கால் வலி மட்டும் குறையவில்லை. காற்றில் மிதந்து வரும் கோஷங்களும், சுற்றிலும் பச்சைப் பசேலென்றிருக்கும் மலைச்சரிவுகளும், அவைகளின் மீது வெண்ணிலவின் ஒளி வீச்சால் தோன்றும் பளபளப்பும், எங்கள் உள்ளத்தைக் கவர்ந்து விட்டதால், நாங்கள் எங்களுடைய கால்களுக்கு கொஞ்சங் கூட அநுதாபம் காட்ட முடிய

வில்லை. இம்மலை முடியும் தருணம் எல்லாருக்கும் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கிக் கொண்டிருக்கும். ஆனாலும் மூன்றாவது மலையைக் கிட்டி விட்டோம் என்ற சந்தோஷமும், இரண்டாவது மலையைத் தாண்டி விட்டோம் என்ற திருப்தியும் ஒன்று சேர்ந்து சோர்வை விரட்டி, புதிய உற்சாகத்தைக் கொடுக்கிறது.

மூன்றாவது மலை

கால்களுக்கு ஓய்வு கொடுக்கவும், களைப்பாற்றிக் கொள்ளவும் ஆங்காங்கு உட்காருவதே மிகச் சிரமமாகத் தோன்றும். ஏனெனில், நடையோடு நடையாக நடந்து கொண்டே போனால் கால் வலி அவ்வளவாகத் தோன்றுவதில்லை. ஓய்வுக்காக உட்காரும் சமயத்தில் சிரமத்தின் மீது சிந்தனை ஓடுகிறது. பொதுவாக இம் மலைப் பிரயாணத்தின் இன்பமும், கஷ்டமும் அவர்களுடைய ரசிகத் தன்மையையும், மனப் பண்பையும் பொருத்தது. கூட இருந்த நண்பர்களின் சுவாரஸ்ய சம்பாஷணைகளும் எங்கள் சிரமத்தைக் குறைப்பதற்கு மிகவும் உதவி செய்தன.



மலையைத் தழுவிக் கொண்டு உறங்கும் மேகக் கூட்டங்கள்

இம்மலையில் ஒரு சுனை இருக்கிறது. இதைப் பாம்பாட்டிச் சுனை என்று அழைக்கிறார்கள். அடிவாரத்திலிருந்து புறப்பட்ட பிறகு இங்கு வந்துதான் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள முடிகிறது. இடையில் எங்கும் தண்ணீர் கிடையாது. செங்குத்தான இரு மலைகளை ஏறி வந்து நா உலர்ந்து தவிக்கும் சமயம், மக்கள் ஓடோடியும் வந்து இச்சுனையருகில் பரபரப்புடன் நீர் அருந்தும் ஆனந்தமும், ஒவ்வொருவர் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியையும் காணும் பொழுது, பாலைவனத்திடையே பலநாள் பிரயாணம் செய்து 'ஓயஸிஸ்' என்னும் நீர் ஊற்றைக் கண்டது போன்ற இன்பம் உண்டாகிறது.

இரு பாறைகளின் இடுக்கு வழியாகத் தரை மட்டத்திற்கு இரண்டு அடிகளுக்குக் கீழே, சிறிய தொட்டியில் நிரப்பப்பட்டதைப் போல் தண்ணீர் மிகவும் குளிர்ச்சி யுடையதாய் இருக்கிறது. அதன் ருசி சொல்லி முடியாது. இரவில் சீதோஷ்ண ஸ்திதி குளிர்ச்சியாய் இருந்தாலும், புழுக்கத்தால் உடைகளைக் கழற்றி விட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது.

நான்காவது மலை

இம்மலை அவ்வளவு செங்குத்தாக இல்லை. மரங்களின் அடர்த்தி குறைந்து; சிறு சிறு செடி கொடிகளும், புதர்களும் அடர்ந்து பாறைகள் நிறைந்திருக்கின்றன.



கடைசி ஏழாவது மலைச் சிகரம்

பெரும் பாறைகளின் பற்பல தினுசான அமைப்புகளும், உருவ வேறுபாடுகளும், அவற்றின் நிற பேதங்களும், தண்ணொளி நிலவின் எழிலில் ஒரு புதிய கற்பனைப் பிராந்தியத்தில் மிதந்து போவது போன்ற இன்பம் தட்டுகிறது. பசுமையான மலைப் பிரதேசக் காட்சிகள் மனதிற்கு எவ்வளவு இன்பத்தையும், சந்துஷ்டியையும் அளிக்கின்ற தென்பதை நேரில் அனுபவித்துத்தான் அறிந்து கொள்ள முடியும்.

இம்மலையில் பந்து போன்ற பிரம்மாண்டமான ஒரு பாறை இருக்கிறது. இதன் சுற்றளவு ஏறக்குறைய எண்பது அடி இருக்கும்! இதனை பீமன் களி உருண்டை என்று சொல்லுகிறார்கள். இவ்வளவு பெரிய பெரிய உருண்டைகளாகத்தான் பீமன் சாப்பிட்டதாக எண்ணுகிற மக்கள், அவனை எவ்வளவு பிரம்மாண்டமான மனிதனாகக் கற்பனை செய்திருக்கக் கூடுமென்பதை என்னால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை!

ஐந்தாவது மலை

நாங்கள் இம்மலையை அடைந்த பொழுது பனிரண்டரை ஆகி விட்டது. எங்களுக்கு முன் சென்றவர்களில் பலர் இம்மலையிலுள்ள வட்டமாகவும், சதுரமாகவும், மேல் பரப்பு சமமாகவுமுள்ள பெரிய பெரிய பாறைகளில் கால்களை நீட்டி உட்கார்ந்து கொண்டும், பாடிக்கொண்டும், சுகமாகத் தூங்கிக் கொண்டுமிருந்தார்கள். ஒவ்வொரு பாறை மீதும் இருபது அல்லது முப்பது ஆட்கள் தாராளமாகப் படுத்துக் கொள்ள வசதியாயிருக்கிறது. மக்களின் சௌகரியத்திற்காகவே ஏற்பட்டது போன்ற படுக்கும் பாறைகள் இவ்விடத்தில் இயற்கையாகவே அமைந்திருப்பதைக் கண்டு வியப்படைந்தோம்.

மேற் கொண்டு மலையேறச் சக்தியற்றவர்கள் தூங்குவதற்காக இரவை இங்கேயே கழித்து விட்டு, விடியற் காலையில்தான் பிரயாணத்தை ஆரம்பிக்கின்றார்கள்.

ஆனால் எங்களுக்குத் தூக்கம் எப்படி வரும்?

நீல வானக் கடலில் வெள்ளி ஓடமெனத் தோன்றும் பூர்ணச் சந்திரன் மேக அலைகளின் இடையே மிதந்தோடும் ஒப்பற்ற காட்சியையும், கடல் நீரின் ஆழத்தைப் போல் கருத்திருக்கும் கீழுள்ள மலைச் சரிவின் தொடர்களும், அவைகளின் இடையிடையே உள்ள கணவாய்களின் கவர்ச்சி மிக்க தோற்றத்தையும் வர்ணிக்க இயலவில்லையே.

சுதந்திர தினம்

[சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்]

உலகத்தில் பல நாடுகளிலுள்ள மக்கள் விடுதலை அடைந்ததைக் குறித்து சரித்திரத்தில் சில முக்கிய நாட்கள் உண்டு. 1784-ம் வருஷம் ஜுலை மாதம் 4-ம் தேதி, அமெரிக்கா தேசத்து மக்கள் விடுதலை அடைந்த தினமாக கொண்டாடி வருகிறார்கள். அவ்விதமே 1789-ம் வருஷம் ஜுலை மாதம் 14-ம் தேதி பிரான்சு தேச மக்களுக்கு முக்கிய தினம். 1917-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ம் தேதி ருஷ்ய நாட்டு மக்கள் பெரிய புரட்சியின் காரணமாக விடுதலை பெற்றார்கள். இந்த தினங்களுடன் ஒப்பிட்டு சிறந்து விளங்கும் தினம், ஆகஸ்ட் 15-ம் தேதியாகிய இன்றைய நாள்.

உலக சரித்திரத்தில் இந்த நாளானது ஒரு மேம்பட்ட நாள் என்று எந்நாளும் கருதப்படும். நம் நாடு விடுதலை அடைந்த நாளானது பிரத்தியேகமாக பெருமையும் மேன்மையும் கொண்ட ஒரு நாள் என்று நான் கருதுகின்றேன். மேற் குறிக்கப்பட்ட மூன்று நாடுகளிலும் லட்சக்கணக்கான மக்களுடைய ரத்தம் சிந்தப்பட்டு அந்த ரத்த வெள்ளத்தில் நீந்தி அந்நாட்டு மக்கள் சுதந்திரக் கரையை அடைந்தார்கள். இவ்விதமான கொடுமை ஒன்றும் ஏற்படாமல், நாம் விடுதலை அடைந்தது மிகவும் குறிப்பிடத் தக்கது. நம்முடைய விடுதலைச் சரித்திரத்தில் இன்னுமொரு விசேஷமுண்டு. இந்திய நாட்டு விடுதலை இவ்வுலகில் வசிக்கும் மக்களின் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு தொகையுள்ள மக்கள் அடைந்த விடுதலை என்பதை நாம் நினைவு கூட்ட வேண்டும். போர்க்களத்தில் மடியாமலும், மக்கள் ரத்தம் சிந்தாமலும் நாற்பது கோடி மக்கள் விடுதலை பெற்றது சரித்திரத்தில் பொன்னெழுத்தில் பொறிக்கத் தக்க சம்பவமாகும்.

நம் நாடு இன்று விடுதலை அடைந்த தென்றால் உண்மையில் இந்த விடுதலை சாமான்ய ஏழை மக்கள் அடைந்த விடுதலை என்பதை நாம் மறக்கக்கூடாது. எதிர் காலத்தில் நம் நாட்டு ஏழைமக்களின் நிலைமை எவ்வாறு இருக்கிறதோ அதைப் பொருத்துத்தான் நாம் அடைந்த விடுதலையின் பயனும் தோற்றமளிக்கும். 'பசியும், பிணியும், பகையும் நீங்கின நாடே உயர்வு பெற்ற நாடெ'ன்று இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே தமிழ்க் கவியாகிய இளங்கோ அடிகள் மிக அழகாக எடுத்துக் காட்டினர். பசியும், பிணியும், பகையும் நாட்டில் உலவும் வரை மக்களுக்கு உண்மையான விடுதலை இல்லை. இந்த அரிய உண்மையை அறிந்து தான் பாரதியாரும்,

"இனி யொருவிதி செய்வோம் — அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று ஆவேசத்துடன் கதறினர். நம் நாட்டிலுள்ள நாற்பது கோடி மக்களுக்கும் உணவைக் கொடுக்கும் பொருளாதார நிலைமை நம் நாட்டில் உண்டு என்பதற்கு ஐயமில்லை. 'இனிய பொழில்கள், நெடிய வயல்கள், எண்ணரும் பெரு நாடு' நம் நாடு. 'கனியும், கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரும் நாடு' நம் நாடு. ஆனல், நம் நாட்டிலுள்ள அழியாச் செல்வத்தை மக்களுக்குப் பயன்படச் செய்ய எல்லோருடைய முயற்சியும் வேண்டும். நெல்லும், கனியும், கிழங்கும் தானகை விளையாது. இரும்பு, தானக உருக்காகவும், யந்திரமாகவும் மாருது. பஞ்சு, தானகத் துணியாகாது. நாம் அடைந்த செல்வத்தை அனுபவிக்க ஊக்கமும், உழைப்பும், ஆவலும் வேண்டும்.

இந்நாளில் விடுதலைக் கோட்டையின் மூலைக்கல் நாட்டிய பெரியோர்களை நாம் பக்தியுடன் நினைத்து வாழ்த்த வேண்டும். கோகலே முதலிய பெரியார்கள் தோல்வியினல் தான் தாங்கள் நாட்டு சேவை செய்ய முடியும் என்று துக்கத்துடனும் மன திடத்துடனும் ஆறுதல் அடைந்தார்கள். நாம் அவர்களைவிட பாக்கிய

சாவிகள். நம் கண் முன் சுதந்திரக் கொடியைப் பார்த்தோம். இந்தியத் தாய் விடுதலை பெற்றதைக் கண்டோம். தாயின் விடுதலை மக்களின் விடுதலையே. தமிழ் மக்களாகிய நாம், நம் உடன்பிறந்த சகோதரருடன் விடுதலை அடைந்தோம். தமிழ் நாட்டில் காணப்படும் மறுமலர்ச்சியும், ஊக்கமும், புதிய விழிப்பும், தமிழ் மக்களுக்கு இந்திய சுதந்திர மண்டபத்தில் முதன்மையான ஸ்தானத்தை அளிக்கும் என்பதில் எனக்குச் சற்றும் ஐயமில்லை.

தமிழ்நாடு வாழ்க! இந்தியத்தாய் வாழ்க!

ஜெய் ஹிந்த்!

["வசந்தம்" கௌரவ ஆசிரியரும், சுதந்திர இந்திய நிதி மந்திரியுமாகிய சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்களுடைய இப்பிரசங்கம் சுதந்திர தினத்தன்று ரேடியோவில் விசேஷமாக ஒலிபரப்பப்பட்டது.]

★

முகப்புப் படம் உதவியவர்:

கே. முத்துராமலிங்கம், எம். ஏ., பி. எல்.

வர்ணம் தீட்டியவர்:

கே. மாதவம் பிள்ளை

'கிரேக்கப் பொன் மொழிகள்' உதவியவர்:

என். எஸ். சுப்பராயன்.

இந்திய சுதந்திரக் கொடி



இந்தியா சுதந்திரமடைந்து விட்டது. தியாகத்தின் சிறப்பாய், தூய்மையின் சின்னமாய், பசுமையின் நினைவாய் அழகிய மூன்று வர்ணங்களையும், மையத்தில் அசோக மன்னரின் அழியாப் புகழ் கொண்ட அன்புச் சக்கரத்தையும் கொண்ட இந்திய தேசியக் கொடி இனி வானளாவப் பறக்கும். அமரகவி பாரதியாரின்

"தாயின் மணிக் கொடி பாரீர் — அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்"

என்ற அமுத கீதம் அதோ காற்றில் மிதந்து வருகிறது!

★

புதிய தமிழுலகம்

[சுத்தானந்த பாரதியார்]

பழமை பழமையெனும்
பல்லவியே பாடேல்
புதுமை புதுமையெனப் போ.

இந்தியா இந்தியர் நாடானது. நாம் எதிர்பாராதபடி விடுதலை கிடைத்தது. நாடு இரண்டானது. என்றாலும் வீடு நமதுதானது. 1857 முதல் தொண்ணூறாண்டுகள் நாம் செய்த உரிமைப் போர், வெற்றியளித்தது. கத்தியுடன் தொடங்கித் தோற்ற போர், காந்தியின் சாந்த சக்தியால் வென்றது. இந்த நூற்றாண்டை காந்தி காலம் எனலாம். இந்த ஆண்டிலிருந்து காந்தி சகாப்தம் முதல் ஆண்டு தொடங்கலாம்.

சிறையும், துயரும், கண்ணீரும், தடியடியும், வேட்டும், புரட்சியுமாயிருந்த நம் அரசியல் வாழ்க்கை, புயல் அடங்கி ஒருவாறு கொந்தளிப்பில்லாமல் அமைதியாக நடக்கிறது. டில்லியிலும், சென்னையிலும் நமது பிரதிநிதிகளே ஆட்சிச் சக்கரத்தை உருட்டுகிறார்கள். இதோ நம்மவரே நமக்கு கவர்னர்களாகவும் வருகிறார்கள். மொழிப்படி மாகாணங்களை வகுப்பார்கள். பாகிஸ்தான் இந்தியாவுக்கு எல்லாப் பாதுகாப்புகளும் செய்ய ஜின்னா கிளம்பிவிட்டார். பச்சைக் கொடிக்கு கராச்சி கடற் காற்று 'அல்லாஹோ அக்பர்' போடுகிறது. உருது மொழிக்கும் இஸ்லாமியத்திற்கும் இனிச் செல்வாக்கிற்குமேல் செல்வாக்குத்தான். பாகிஸ்தான் சேனை காலத்திற் கேற்ற பலம் பெற்றுப் புலிப் பாய்ச்சலில் கிளம்பப் போகிறது.

இந்திய இந்தியா இந்தியை நாடெங்கும் பரப்பிப் பொது மொழியிலேயே நாட்டு விவகாரத்தை நடத்தப் போகிறது; நடத்துகிறது. காந்தியடிகள் கொண்ட விரதம் நிறைவேறி விட்டது. இனிப் புது இந்தியாவின் புதிய மனவுறுதி நிறைவேற வேண்டும். நமது நாடு இனி

எந்த அன்னியரும் வந்து புகுந்து வாலாட்டாதபடி, வீறு பெற்ற வீரர் கொண்ட நாடாக வேண்டும். அதற்கேற்ற படியே ஜவாஹர்லாலும் மற்ற தலைவர்களும் புதிய திட்டங்கள் வகுத்து வேலை தொடங்குகிறார்கள்.

இப்போது ஆங்கிலேயருக்கும் நமக்கும் ஆண்டான் அடிமை யுறவில்லை. இருவரும் சரிநிகர் தோழர். இன்றிருக்கும் நிலையில் நமக்கு உலக வல்லரசுகளின் துணை வேண்டும்.

அமெரிக்காவின் பொருட் செழிப்பையும், ரஷ்யாவின் சேனை பலத்தையும், இங்கிலாந்தின் கட்டுக் கோப்பையும் பார்க்கும் போது, நமது நாட்டின் மெலிவு நன்றாகத் தெரியும். அங்கே நூற்றுக்குத் தொண்ணூறு படித்தவர்கள். இங்கே நூற்றுக்குத் தொண்ணூறு படியாதவர்கள். இவர்களிலும் காலத்திற்கேற்ற அறிவு பெற்றவர்கள் மிகச் சிலரே. அங்கே உலகை வென்று ஆட்சி கொள்ளும் கலையும் தொழிலும், படையும் பொறியும், கப்பலும் விமானமும், அணுகுண்டும் ராக்கெட்டுமா யிருக்கின்றனர். இங்கே இன்றுமட்டும் நாம் கட்டை வண்டி மனப்பான்மையிலேதான் இருக்கிறோம். நமது மாணவரும் கல்லூரியில் கிளேஸ்புரூக்கும், அலெக்சாண்டர் ஸ்மித்தும் படிக்கிறார்கள். ஆனால் நாம் செய்யும் தீக்குச்சி, விளக்கில் காட்டினாலே பற்றிக் கொள்ளுகிறது. நமது புலமையைச் சுடரோங்கத் தூண்டிச் செயலோங்க வளர்க்கத்தக்க முயற்சிகள் நடக்கவில்லை. நேற்று வரையில் நமது முயற்சி யெல்லாம் உரிமைப் போராட்டத்திலும் சிறைக்காவலிலும் சென்றிருக்கிறது. இப்போதுதான் நாம் கண் விழித்தெழுந்து புதிய சுதந்திரக் காலையைக் கண்டிருக்கிறோம். இன்று நாம் செய்யத்தக்க தென்ன, செய்யத்தகாத தென்ன என்பதைக் கருத வேண்டும்.

> செய்தக்கஅல்ல செயக் கெடும்; செய்தக்க
> செய்யாமை யானும் கெடும்

என்பது ஆணித்தரமான வள்ளுவர் செம்மொழி.

ஜான் ரஸ்கின் இங்கிலாந்தின் சிறந்த சிந்தனைச் சிற்பி அவன் எழுதுகோல் சிலை வடிப்பது போல் சொல்லோவியங்களைச் செப்பனிட்டளிக்கும். இலக்கியத்திலேயே விளையாடி ஆயுளைப் போக்கியிருந்தால், அவர் இப்போது ஒரு புத்தகசாலைக்கு வேண்டிய நூல்களை எழுதி வைத்திருப்பார். ரஸ்கின் ஒருநாள் ஸ்விஸ் மலைகளில் நடந்தார். அங்கே மலையாட்கள் வேலை செய்வதைப் பார்த்தார். 'இந்த ஏழைகளுக்கு நான் என்ன உதவி செய்கிறேன். சும்மா ஓர் அறையில் பேனை ஓட்டுவதா வாழ்க்கை? ஒரு

நாடு உருப்பட வேண்டுமானல் முதலில் அது உண்டுடுத்து வீறு பெற்றுத் தலைநிமிர்ந்து வாழ வழி செய்ய வேண்டும்' என்ற எண்ணம் உதித்தது. உடனே தமது அரிய நண்பர் கார்லைலைக் கண்டார். கார்லைல் பிரஞ்சுப் புரட்சியைப் பற்றி அரிய ஆவேச நூல் தயாரித்திருந்தார். அதை ரஸ்கினிடம் காட்டி மகிழ்ந்தார்.

ரஸ்கின் : நண்பா, புரட்சியால்மட்டும் மகிழ்ச்சியுண்டா?

கார்லைல்: புரட்சியால் தலை நிமிரலாம்; முயற்சியால் முன்னடக்க வேண்டும்; முன்னேற்றமே மகிழ்ச்சி.

ரஸ்கின் : வந்தனம் நண்பா, அந்த முயற்சியைப் பற்றியே நான் சிந்திக்கிறேன்.

கார்லைல் : சிந்திப்பதென்ன. தெருவழியே நடந்தாலே கண்ணைரக் காணலாமே நாட்டு நிலையை. பெரும் போர் செய்து ஹெலினக் கைதியாக மாண்ட நெப்போலியனுக்குப் பிறகு பிரான்ஸ் என்ன நிலையிலிருந்தது.......?

இந்தக் கேள்வி ரஸ்கின் நினைவுகளைக் கிளறிவிட்டது. நாட்டில் உணவில்லாமல், படிப்பில்லாமல், தற்காப்புத் திறனில்லாமல், வருந்தும் மக்களை நினைத்தார். எங்கும் பகற் கொள்ளையும் வழிப்பறியுமா யிருக்கும் சமுதாயத்தை நினைத்தார். உடனே எழுதினர்:

"வாழ்க்கையே உயர்ந்த செல்வம்; வாழ்வைச் செழிப்பாக்குவதே சிறந்த தொண்டு. வாழ்வு எல்லாத்துறையிலும் நிறைவோங்கி வளரவேண்டும்—அன்பும் இன்பமும், பொருளாதாரமும் அருளாதாரமும், தொழிலும், கல்வியும் செழித்தோங்க வேண்டும். மனிதன் தன்னை நிறைவாக்கிக் கொண்டு, தன்னவரையும் இன்புறுத்தப் பொது நல உணர்ச்சியுடன் வாழ வேண்டும். ஒவ்வொரு காலையிலும், நீ புதுப் பிறவியடைகிருய். ஒவ்வோர் இரவிலும் உறங்குமுன் இன்று மனித சமுதாயத்திற்கு என்னல் என்ன பயன் என்று நினைத்துப்பார். மனிதா, வருங்கால மக்கள் போற்றும்படி உன் வாழ்வு மாளிகையைக் கட்டு. ஒவ்வொரு செங்கல்லையும் அளந்து ஒழுங்காக வைத்து, மாளிகை எழுப்பு. ஏனெனில், பிற்காலத்தவர் நீ செய்த செயல்களையே நோட்டம் பார்ப்பார்கள்."

ரஸ்கின் பெரும் செல்வர். தகப்பனல் அவருக்கு இரண்டு லட்சம் பவுன் (முப்பது லட்சம் ரூபாய்) வைத்துச் சென்றூர். ரஸ்கினே "நான் அப்பா பணத்தில் ஹாயாய் வாழப் பிறக்கவில்லை. மனிதன் உழைத்தே பிழைக்க

வேண்டும். உழைக்காதவனுக்கு உண்ண உரிமையில்லை. என் பேனுவால் உழைத்தே நான் பிழைப்பேன். என் பரம்பரைச் செல்வத்தைக் கொண்டு எனது நினைவுகளைச் செயலாக்குவேன்" என்று கிளம்பினர். தமது செல்வத் திரளை யெல்லாம், ஏழைகள் உழைத்துப் பிழைக்கத்தக்க தொழில்களாக மாற்றினர். மாணவருக்கு நல்ல கல்வி யளித்தார். முதிய கிழவிகளுக்கு ஒரு விடுதி கட்டி உண வுக்கும் வகை செய்தார். நினைப்பைச் சொல்லாக்கி, சொல்லைச் செயலாக்கல் — இதுவே ரஸ்கின் கருத்து. இவையே நமது காந்தியடிகளின் கருத்தாகும் — வாழ்வை ஊருக்கு ஊழியமாக்குவது. டால்ஸ்டாய், ரஸ்கின் இருவ ரும் காந்தியடிகளுக்குப் புதிய வழி காட்டிய புலவர்.

இனி நமது நாட்டுக்கு வருவோம். இன்று தமிழகம் புதிய உணர்ச்சி பெற்றிருக்கிறது. மறுமலர்ச்சி இளந் தென்றல் வீசுகிறது. நேற்றிருந்த இந்தியா இன்றில்லை. நேற்றிருந்த தமிழகம் இன்றில்லை. திலகர் கட்டத்தில் நமது வீரர் செய்த உரிமை முழக்கம் இன்று சுதந்திர பேரிகையாக எதிரொலிக்கிறது. காலச் சுழலில் அடி-மைச் சிறையில் வெந்து, நொந்து, அடிபட்டு, இடிபட்டு அழுது; தவித்த பயங்கரமான மாரிகாலம் போய் விட்டது. இன்று நாம் வசந்தகாலத்தில் இருக்கிறோம். இந்த இளவே னிலை நாம் ஆடிப் பாடிக் கழித்து விடுவதா? கதை பேசிக் கழிப்பதா? அல்லது சுறுசுறுப்பான ஆக்க வேலைகளிற் பயனுகுவதா? நேற்று நாம் செய்ததெல்லாம் அற்பம். இனி நாம் செய்ய வேண்டியதோ அபாரம்.

ஞாலம் கருதினும் கைகூடும்; காலம்
கருதி இடத்தாற் செயின்

என்பது பொய்யாமொழி. இந்தப் புதிய வசந்தகாலத்தை நாம் புதிய பலம்பெற்று, உலகில் ஒரு வல்லரசெனத் தலை நிமிர்ந்து வீர நடைபோடப் பயன்படுத்த வேண்டும்?

அதற்கு என்ன செய்ய வேண்டும். எந்தெந்தத் துறைகளில் புதிய தமிழகம் வேலை செய்ய வேண்டும். உலகில் அது சீர்சிறந்து விளங்கும் வழியென்ன என்பதை அடுத்த தடவை ஆராய்வோம்.

★

பூமண்டலத்திற்கும், வான மண்டலத்திற்கும் இடையே விவரிக்க முடியாத இன்பமயமான ஒரு சொப்பன உலகில் இருப்பதாகவே தோன்றுகிறது. என்ன ரமணீயமான காட்சி!

இங்கு ஒரு இடத்தில் காரையினால் நிர்மாணிக்கப்பட்ட சதுர மேடை ஒன்று இருக்கிறது. இதை ஒட்டன் சமாதி என்று சொல்லுகிறார்கள். ஒரு காலத்தில் இவ்விடத்தில் இறந்து போன ஒருவருக்கு, அவருடைய உறவினர் ஞாபகார்த்தமாக இம் மேடையைக் கட்டுவித்ததாகக் கேள்விப்பட்டோம்.

இன்னொரு இடத்தில், 'பீமன் களி உருண்டை' பாறையைவிட ஒன்றறை மடங்கு பெரியதாகவும், யந்திரக்கல் வடிவமாகவும் உள்ள பாறை ஒன்று இருக்கிறது. இது சரிபாதியாகப் பிளவு பட்டிருக்கிறது. எனவே இதை ராகிக் கல் என்று சொல்லுகிறார்கள்.

"பீமனுக்குக் களி உருண்டை தயாரிக்க ஏற்ற யந்திரந்தான் இது" என்றார் ஒரு நண்பர் ஹாஸ்யமாக!

இம்மலையின் இறுதிப் பாகத்தில் ஓர் குறிப்பிட்ட இடத்திலிருந்து கீழ் நோக்கிப் பார்த்தோம். வெகு தூரத்தில் ஒரு நட்சத்திர மண்டலம் காட்சி யளித்தது. ஆயிரக் கணக்கான நட்சத்திரங்கள் 'பளிச், பளிச்' சென்று மின்னிக் கொண்டிருந்தன. அவ்வழகிய காட்சி எங்களை பிரம்மிக்கச் செய்தது. அருகிலிருந்த நண்பர் என்னிடம், "அங்கு ஒரே நட்சத்திர மண்டலமாகத் தோன்றுகிதே! நாம் ஒரு வேளை நட்சத்திர மண்டலத்தையும் தாண்டி விட்டோமோ என்னவோ" என்று கூறினர்.

அந்த நட்சத்திர மண்டலந்தான் கோயமுத்தூர்!

ஆருவது மலை

கீழுள்ள மற்ற ஐந்து மலைகளைக் காட்டிலும் இம்மலை மிகவும் விசேஷம் வாய்ந்தது. ஜனக் கூட்டத்தை எந்த நேரத்திலும் இங்குதான் அதிகமாகக் காண முடிகிறது. ஏனெனில் கடைசீ மலையாகிய ஏழாவது மலையை அடைவதற்கு முன், எல்லாரும் இங்குதான் குளிக்க வேண்டியிருக்கிறது. தவிர, கடைசீ மலையாகிய சுவாமி மலைக்கு இரவு காலங்களில் ஒருவரும் போகக் கூடாதென்றும், இரவில் அங்கு தங்கக் கூடாதென்றும் சொல்லப் படுகிறது. ஆகையால் இரவை



வெள்ளியங்கிரியில்
சூரியோதயம்

இங்கேயே கழித்து விட்டு, அதி காலையிலேயே மலையேற ஆரம்பித்து விடுகிறார்கள்.

இங்கிருக்கும் நீர்ச்சுனை விசேஷம் வாய்ந்தது. இதனை ஆண்டிக் கனை என்றழைக்கிறார்கள். குடைந்தெடுத்தாற் போல் பத்து அல்லது பனிரண்டடிகள் உட்புறமாகக் கவிந்த ஒரு பாறைக் கடியிலிருந்து நீர் சுரந்து வருகிறது. இதற்குச் சில கெஜ தூரம் வெளிப்புறத்தில்தான் குளிப்பதற்கு வசதியான இடமிருக்கிறது. நீரின் விறுவிறுப்பு சொல்லி முடியாது. இந்த நீரில் பல மூலிகைச் சத்துக்களும், உலோகச் சத்துக்களும் கலந்திருப்பதால் தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது. குடிப்பதற்கு மிகவும் ருசியாயிருக்கிறது.

இந்த இடம் வெகு அழகிய காட்சியாக விளங்குகிறது. நீர்ச் சுனையைச் சுற்றிலும் ஆங்காங்கு உயர்ந்த பாறைகள்; அவைகளின் மேல் பலவித பெரிய காட்டு மரங்கள்; அவைகளைச் சுற்றிப் படர்ந்திருக்கும் வித விதமான கொடி, செடிகள்; குளிர்ச்சியான காற்று; பறவைகளின் இனிய குரல்கள், முதலியவை நம் உள்ளம் கவர்ந்து விடுகின்றன.

ஆண்டிக் கனை என்னும் இந்த நீர்ச் சுனையை நாங்கள் அடைந்த பொழுது இரவு மூன்று மணியாகி விட்டது. விடியும் வரை இங்கு தங்கி, அதிகாலையில் குளித்து விட்டு கடைசி மலை ஏற வேண்டியிருப்பதால், நாங்கள் படுப்பதற்கு இடங் கண்டு பிடிக்க முயற்சித்தோம். அருகில் தங்குவதற்கு ஒரு சாலை யிருப்பதாகக் கேள்விப் பட்டு, அச்சாலையை அடைந்தோம். இதன் மேல் பாகம் ஓலையால் வேயப்பட்டு, சுமார் இருபதடி நீளமும், பனிரண்டடி அகலமுமிருக்கிறது. இதற்குள் ஏறக் குறைய நூற்றைம்பது ஆட்கள் அடைக்கப்பட்டுக் கிடந்தார்கள். பலர் உட்கார்ந்த நிலையிலும், மேற் கூறையைக் கையால் பிடித்துக் கொண்டு நின்ற வண்ணமும் குளிர் தாங்க முடியாமல், பற்கள் தந்தியடிக்க. அரை குறைத் தூக்கத்திலிருந்தனர். விளக்கில்லை. சந்திரனின் மங்கிய ஒளி கூடச் சாலைக்குள் சரியாக பரவாததால் இருட்டில், ஒருவர் கால் மற்றவர் தலையில் மோதி இடி படுவதால் ஏற்படும் சண்டையும், பூசலும் அடிக்கடி கிளம்பிக் கொண்டிருந்தன. உடலைக் குறுக்கிப் புழுப் போல் நெளிந்து சென்றாலும், உள்ளே புக முடியாத ஜன நெருக்கம்! நான் மட்டும், ஒவ்வொரு அங்குலமாகத் தவழ்ந்து முன்னேறி ஓர் மூலையில் குறுகிய ஒரு சாண் இடத்தை ஆக்கிரமித்து, அவ்விடத்தில் குந்திட்டு உட்கார்ந்தேன். இந்தச் சகிக்க முடியாத நெருக்கடியைக் கண்ட என் நண்பர்கள் சற்று தூரத்திலிருக்கும் ஒரு பெரும் பாறையின் அடியில், நடுங்கும் குளிரில் இரவைக் கழித்தார்கள்.

நானிருந்த சாலையின் முன்புறமாகப் பத்து கெஜம் சென்றால் செங்குத்தான பெரும் பள்ளத் தாக்கு இருக்கிறது. அங்குள்ள மலைச் சிகரங்களை மேகக் கூட்டங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன. என் கண்களுக்கு முன்னே சில கெஜ தூரத்தில், பூரண சந்திரன் ஆட்சி புரியும் இரவில், மேகக் குவியல்கள் பஞ்சு போல் சிதறி, மலைகளைத் தழுவிக்கொண்டு உறங்கும் அழகிய காட்சியில் அப்படியே மனம் லயித்து விட்டேன்! பொழுது விடிந்ததே தெரியவில்லை!

ஏழாவது மலை

காலையில் ஐந்து மணிக்கு நாங்கள் ஒன்று கூடி சுனையில் குளித்து விட்டு, கடைசி மலையாகிய ஏழாவது மலை யேற ஆரம்பித்தோம். இம்மலை மற்றவைகளைவிட உயரக் குறைவாக இருப்பதுடன், செங்குத்தாக இல்லாமல் சுலபமாக ஏறுவதற்கு முடிகிறது. நிலம் மணற் பாங்காகவு மிருக்கிறது. அரை மணி நேரம் நடந்து மலை உச்சியை ஆறு மணிக்குள் அடைந்து விட்டோம். அங்கு, மலைச் சிகரங்களில் மோதிக் கொண்டு அலை அலையாக உருண்டோடும் மேகங்கள் ஒப்பற்ற அழகிய காக்ஷியாகத் தோற்ற மளித்தன.

இம்மலையிலுள்ள பாறைகளில், மிகப் பெரிய பாறை யொன்றின் அடிப்பாகத்தில் உட்கவிந்த வண்ணமாக குகை போல் தோற்ற மளிக்கும் இடத்திற்குள் ஒரு லிங்கமும், நாகரும் பிரதிஷ்டை செய்து வைக்கப் பட்டிருக்கிறது. இக்குகைக்குள் சென்று பூஜை

வரிசையாக நின்று, ஆவலுடன்
காத்துக்கொண்டிருக்கும் பெண்கள்

ஏககாலத்தில் நூற்றுக் கணக்கான வெண்கல மணிகளின் ஓசையும், கோஷங்களும் கிராமிய ஜனங்களின் கூச்சலும் கலந்த பேரிரைச்சலும் காதுகளைத் துளைத்து விட்டன. நண்பர்கள் அக்காக்ஷிகளைக் காணப் புறப்பட்டு விட்டார்கள். நான் மட்டும் சற்று தூரத்திலுள்ள ஒரு உயர்ந்த தனிமையான இடத்திற்குச் சென்று சூரிய உதயத்தைக் கண்டு இன்புற்றேன். சூரிய ஒளி பட்டதும் மேகக் கூட்டங்கள் மெதுவாக மேலெழும்ப ஆரம்பித்துவிட்டன!

செய்துவிட்டு வெளியே வருகிறார்கள். குகை வாயிலின் முன் ஜன நெருக்கமும், ஒருவரை யொருவர் உந்திக்கொண்டு தரிசனத்திற்காக உள்ளே நுழையப் போட்டியிடும் காக்ஷியும் அருகிலிருக்கும் பெரிய உயரமான இரும்பு வேலில் பிரார்த்தனைக்காகப் பலர் கட்டித் தொங்க விட்டிருக்கும், நூற்றுக் கணக்கான பெரியதும், சிறியதுமான வெண்கல மணிகளை ஆட்டிக் கொண்டிருப்பவர்களின் உற்சாகமும் சூழ்ந்துள்ள தோற்றங்களும் பார்க்கத் தகுந்தவையாகும்.

தரிசனமும், பூஜையும் முடிந்த வுடன், மக்கள் ஆங்காங்கு கூட்டங் கூட்டமாகப் புல் தரை யில் உட்கார்ந்து கொண்டு, அவரவர்கள் கொண்டு வந்திருக்கும் ஆகாரங்களை உண்டு, போதிய அளவு ஓய்வெடுத்துக் கொண்டு இருட்டுவதற்குள் கீழ் மலைக்கு வந்து விடுகிறார்கள். இரவில் இங்கு தங்காததற்குக் காரணம், ஒருவித குளிர்ச்சியான விஷக் காற்று எங்கிருந்தோ வீசுவதாகவும் அது உடலுக்குக் கெடுதலுண்டு பண்ணி விடுவதாகவும் சொல்லப்படுகிறது.

இங்கிருந்து திரும்புகிறவர்கள், முன் கூறிய ஆறாவது மலையில் ஐந்து அல்லது ஆறடி உயரமாக வளர்ந்திருக்கும் புற் செடிகளை ஒவ்வொரு கைப் பிடியாகப் பிடித்து முடிச்சுப் போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துக் காரணம் என்னவென்று விசாரித்தேன். அவர்கள் நினைத்துக் கொண்டு போகும் காரியம் கை கூடினால், மறு வருஷம் வந்து அந்த முடிச்சை அவிழ்த்து விடுவதாக வேண்டிக் கொள்வது வழக்கமென்று சொன்னார்கள். அந்த இடம், 'சர்வம் முடிச்சு மயம் ஜெகத்' தாயிருக்கும் பொழுது, அதே ஆசாமி, அதே முடிச்சை அடுத்த வருஷம் எவ்விதம் அடையாளங்கண்டு அவிழ்க்க முடியும்! மற்றொருவர் போட்ட முடிச்சைத்தான் அவிழ்க்க நேரிடும்!

இங்கு வரும் யாத்ரீகர்கள் திரும்பும் பொழுது, வழியிலுள்ள பலவிதத் தழைகளையும், வலம்புரி, இடம்புரி என்னும் காய்களையும் பறித்துக் கொண்டுவந்து, தங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மலைப் பிரசாதமாகக் கொடுக்கிறார்கள். வலம்புரி என்னும் காய் வலது பக்கம் சுருண்டும், இடம்புரி என்னும் காய் இடது பக்கம் சுருண்டுமிருக்கிறது. இக்காய்களைக் குழந்தைகளின் அரைஞாண் கயிற்றில் கட்டினால் தோஷம் நீங்கும் என்ற நம்பிக்கையாம்.

வரும் வழியில், சிலர் அங்குமிங்குமாக ஓடிப் பல இடங்களில் குழி தோண்டி, எதையோ தேடிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சென்று விசாரித்தேன். சீதை மஞ்சள் தேடுவதாகச் சொன்னார்கள். சீதை, சிறை மீட்கப்பட்டுத் திரும்பி வரும் வழியில், இம்மலையில் தங்கி, தான் தேய்த்துக் குளித்த மஞ்சள் கிழங்கு ஒன்றைப் போட்டுவிட்டுச் சென்றதாயும், அதனால் அத்தகைய கிழங்குகள் இங்கு முளைப்பதாகவும், பெண்டுகள் இதைப் பூசிக் கொள்ளுவது நல்லது என்றும் விவரித்தார்கள்.

வெள்ளியங்கிரி சிகரத்தில் மூன்று மணி நேரம் தங்கிவிட்டு நாங்கள் கீழிறங்கி வந்தோம். அடிவாரத்தை அடைந்ததும், அங்குள்ள படிக்கட்டுகளில் பல சுமங்கலிப் பெண்கள் கையில் நீர் மோருடனும், குடத்தில் ஜலத்துடனும் வரிசையாக நின்று கொண்டு ஆவலுடனும், பக்தி சிரத்தையுடனும் எதையோ எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதை அறிந்து கொண்டேன். எங்களுடன் வந்த கோஷ்டியொன்று இப்பெண்களைக் கண்டவுடன், ஏதோ ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள ஓடுவது போல் வேறு ஒரு குறுக்கு வழியாக இறங்கிப் போய் விட்டார்கள். "இப்பெண்களைக் கண்டு அவர்கள் ஏன் இவ்வாறு மிரண்டோடுகிறார்கள்?" என்று அருகி

விருந்த ஒரு பெரியவரைக் கேட்டேன். அவர் கூறிய காரணத்தைக் கேட்டதும் எனக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

வீட்டுக்கு விலக்கமாகும் பெண்கள் இம்மலைக்குப் போகக் கூடாதாகையால், அவர்கள் அடிவாரத்திலேயே தங்கியிருந்து, மேலிருந்து வருபவர்களை உபசரித்துக் கால்களைக் கழுவி, பாத பூஜை செய்தால், வெள்ளியங்கிரி மலைக்குப் போய் வந்த பலனை தாங்கள் அடைந்து விட்டதாக ஐதீகமாம். ஆனால், மலையேறிக் கஷ்டப்பட்டுத் தாங்கள் அடைந்த புண்ணியத்தின் பலனை அப்பெண்களுக்குத் தானம் செய்ய ஒருவரும் விரும்ப மாட்டார்களாம். அதற்காக அப்பெண்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு குறுக்குப் பாதையைச் சிருஷ்டித்து அவ்வழியாக அடிவாரத்தை அடைந்து விடுகிறார்கள்!

மலை மேலிருந்து கீழே வந்து குறுக்கு வழியாக யாராவதொருவர் திரும்பி விட்டால், இப்பெண்களின் முகத்தில் உண்டாகும் ஏமாற்றத்தைக் கண்டு நாங்கள் மிகவும் பச்சாதாப மடைந்தோம். பாத பூஜை செய்வதற் கென்றே பெண்கள் சில சமயங்களில் இரண்டு, மூன்று நாட்கள் கூட அடிவாரத்தில் தங்கியிருப்பது வழக்கமாம்!

நாங்கள் மட்டும் மற்றவர்களைப் போலல்லாமல், அப்பெண்மணிகளின் சிச்ருஷைகளுக்கு உட்பட்டு, (தன்னலம் கருதாத முன் காலத்து முனிவர்கள் தங்கள் தபோ பலத்தைப் பிறருக்குத் தானம் செய்ததைப் போல்) இடையில் வந்தடைந்த புண்ணியத்தை வழியிலேயே அவர்களுக்குத் தத்தம் செய்து விட்டுப் புறப்பட்டு வந்து விட்டோம். இதைக் குறித்து என் நண்பர், "என்ன சார், யுத்த காலத்தில் திடீரென்று பணக்காரனாகி உடனேயே பாப்பராகி பழைய ஸ்திதியை அடைந்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறதோ?" என்று கேட்டார் தமாஷாக.

அதற்கு நான், "எப்பவும் உள்ள நிலைதான் ஸ்திரமாக இருக்கும். அதோ பாருங்கள், புண்ணியத்தை தானம் செய்ய விரும்பாமல், குறுக்கு வழியாக விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்த அந்த மனிதனுக்குப் புஷ்பக விமானம் கிடைக்கவில்லை போலும்! அவனும் கட்டை வண்டியில் தானே போகிறான்! பாவம்! நாமும் அந்த வண்டியிலே ஏறிக் கொள்ளலாம்" என்றேன்.

வண்டியில் ஏறினுல் கைத் தடியை கீழே வைக்க மனம் வருவதில்லை. எல்லோரும் கையில் மூங்கில் தடியுடன் சாந்த மயமான முகத்தோடு செல்லும் காட்சியே காட்சி! இந்த மூங்கில் தடிகளின் கிராக்கியை நினைத்தால் எனக்குச் சிரிப்பு வருகிறது.

இப்பிரயாணம் கஷ்டமாக இருந்த போதிலும், வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிஷமும் அநுபவமாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இந்த யாத்திரை சுலபமாகவும், சுமுகமாகவும்தான் தோன்றுகிறது.

[புகைப் படங்கள்:— எஸ். பாலசுந்தரம்.]

ஒரு சபையில் பலர் கூடி விவாதிக்கும் போது, விவாதத்திற் குரிய விஷயத்தில் தத்தமக்கு உடலோடு ஒட்டிய கொள்கையை எப்படியாவது புகுத்தி விடுவார்கள். சங்கங்களில் சபைகளில் நடக்கும் ஓர் நித்திய உண்மை. காதலும் மணமும் என்ன பாடு படுகிறது இந்த க. கா. கி. குழுவி ல்பார்க்கலாம்.

காதலும் மணமும்

['சுகி']

[கலை, காவ்யக், கிளர்ச்சிக் குழுவில் கூட்ட ஆரம்பம். தலைவர் தம்பட்டம் அவர்கள் முடிவுரை சொல்ல எழுகிறார்.]

தலைவர்: அன்புமிக்க சோதர, சோதரிகளே, இன்றைய விவாதத்தில் 'காதலுக்குப் பின் மணம்' என்பதை ஸ்ரீமான் பிரம்மச்சாரியும், 'மணத்திற்குப்பின் காதல்' என்பதை ஸ்ரீமதி கிருகதர்மியம்மாளும் வெகு அழகாகப் பேசினார்கள். அந்த அழகின் சோபையை, இங்கு குழுமியுள்ள சோதர, சோதரிகள் கேட்டதோடு, அடியேன் முடிவுரையையும் கேட்கக் காத்திருக்கின்றீர்கள். என் முடிவுரைக்கு முன் சோதர, சோதரிகள், இவ்விவாத சம்பந்தமாக, தத்தமக்குத் தோன்றுவதை எடுத்துரைத்து, இவ்விவாதத்திற்கு புனர் ஜீவன் கொடுப்பதை நீங்கள் வரவேற்பீர்கள் என எதிர்பார்க்கிறேன். எந்த விஷயத்திற்கும் — ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது போல – இருக்கிறது. ஒரு பக்கம் தேய்ந்தாலும் நாணயம் செல்லுபடியாகாது என்ற நாணய முறையில்... காதலுக்குப் பின் மணமா? மணத்திற்குப் பின் காதலா? என்ற விஷயத்திற்கு, கௌரவம் கொடுக்க சோதர, சோதரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[கை தட்டல். தோழர் ஆண்டியப்பன், பிரம்மச்சாரி மேடைக்கு வருகிறார்.]

ஆண்டி: அன்பர்களே, இந்த விவாகத்தை...

தலைவர்: ஊஹூம்! இந்த விவாதத்தை—

ஆண்டி: ஆமாம்! விவாதத்தை என்றுதானே சொன்னேன்.

தலைவர்: சரி அப்படியே சொல்லுங்கள்.

ஆண்டி: அன்பர்களே, இந்த விவாதத்தை, நடத்திவிக்குமிடத்தில் டார்வின், இருந்திருந்தால், ஸ்ரீமதி கிருஹதர்மியம்மாள் காலத்தின் கோலத்தை இவ்வண்ணம், வாய் புளித்ததோ, புளியம் பழம் புளித்ததோ எனப் பேசியிருக்க மாட்டார். அவ்வம்மையாரவர்கள்.

காடம்பூ கவின் எஞ்ஞிரங்காள்
பாடகப் பெருமாள், நிதி சுரக்கும்
கோலோ, குறுக மன்னி பைத்தில்
தாழும் பெட்டாய், தம்மனமே...

என்று சொல்லிய ஒரு சங்க காலச் செய்யுளில், காதல் தத்தி தவளைபோல் பாய்வதாகச் சொன்னார்கள். தவளையை எல்லோரும் பார்க்கிறோம். அது தத்திப் பாய்வதும் இயல்பு. ஆனால், அக்காலத்தில் காதல் இருந்தது. காதலுக்குப் பின் மணம் இருந்தது என்பதை,

**கனமும் காதல் செய்வான் – உலகிற்கு
நிணமாம் காதல் மணம்.**

என்ற மேற்கோளுடன் காட்டினார். இதெல்லாம் சரி, எந்த நூற்றாண்டில் என்பதைச் சொன்னாரா? சொல்லத்தான் முடியுமா? கி. மு. 16–ம் நூற்றாண்டா? கி. பி. 77-ம் நூற்றாண்டா? அந்தக் காலம் என்றால் இன்ன வருஷம், இன்ன தேதி, இன்ன மாதம், என வேண்டாமோ? ஐயகோ...

கி. பி. 18-ம் நூற்றாண்டிலோ, அல்லது 19-ம் நூற்றாண்டிலோ, டார்வின் பரிணும தத்துவத்தை விளக்க வந்தவர், குரல்கள் உற்பத்தியைப் பற்றியும் தேவாங்கின் ஜனனத்தைப் பற்றி சரியான காலவரை கொடுத்துள்ளாரா, என்பது சந்தேகாஸ்பதமான கட்டங்கள். டார்வின் ஆராய்ச்சியைப் போலவே, காதலுக்குப் பின் மணம் என்பதை காலவரையறை கச்சிதமாகக் கொடுக்காமல், இருந்தார் என்பதற்கு, நன்னய பொருள்மாலையிலிருந்து சொன்ன,

ங்கிய ஏம்மை டோக்தும் – பாந்தள்
ந்தன தோள்மா புலிக்குத் தோய்.

என்ற இந்த அடிகளே சான்று. அந்தக்காலம் என்றால், நாளையா? நேற்றா? போன வாரமா, போன யுகமா? என்பது குழந்தைகளும் கேட்கக் கூடிய கேள்வி. ஆகவே, ஸ்ரீமதி கிருஹதர்மினி அம்மையார், இனியாவது, காலவரையறை அறிவுறுத்திவிட்டு, விஷயங்களைச் சாங்கோபாங்கமாகச் சொல்ல வேண்டுமென்பது என் சிற்றுரை.

[கை தட்டலுக்கு ஊடாக கிருஹதர்மிணி அம்மாள் மேடைக்கு வருவதும், ஆண்டியப்பர் இறங்குவதும் நடக்கின்றன.]

கிருஹ: தாய்மார்களே, சோதர சோதரிகளே...

நேற்றுப் பாருங்கள், எங்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில், மோர்க்குழம்பு சமையல். 'தான்' சேப்பன் கிழங்கு... இதனால் அடுத்த வீட்டம்மணியின் முதுகு கருணை கருணையாக வீங்கி விட்டது. மோர்க் குழம்பு வீட்டுக்காரருக்குப் பிடிக்காது. அத்தோடு வேகாத சேப்பங் கிழங்கு, போதாக் குறைக்கு உப்புப் போடவில்லை. எல்லாவற்றையும் விட அத்தம்பதிகள் மணமோ காதல் மணம்.

[கை தட்டல்]

சேப்பங் கிழங்கில் வைடமின்கள் இருக்கின்றன. அது கண்ணிற்குப் புலப்படுமா? அப்படித்தான் காதலும். மோர்க் குழம்பு செய்ய, நல்ல தயிரில் உப்புப் போட்டு வைத்துக் கொள்க... பெருங்காயம், சீரகம், தேங்காய், அரைத்து இதைக் கூட்டுமாவோடு கலக்க வேண்டும். கூட்டுமா – பொரி கடலை மாவோ, கடலை மாவோ. இல்லை, எந்த மாவு கிடைக்கிறதோ அந்த மா–கிடைத்ததைக்

கூட்டுமா வெனக் கூட்டுக. வெந்த தானே, இந்தக் கூட்டு மாவில் கொட்டி, இதைக் கொண்டு உப்புப் போட்டுத் தயிரில் கொட்டி ஒரு கொதி வந்ததும் தாளித்துக் கொட்டிஞல், வேண்டாத பேருக்கும் வேண்டியிருக்கும். வேண்டிய பேருக்கு, வண்டி வண்டியாகக் கொட்டலாம். 'தான்' எது வேண்டுமானுலும் போடலாம். முருங்கைக்காய் தவிர.

ஸ்ரீமான் பிரம்மச்சாரியவர்கள், காதல், மனோரதத்தைத் தட்டி, மாயாஜாலங்களை உதிர்க்கும் கற்பக விருக்ஷமல்ல. அது உணவுப் பதார்த்தத்தோடு கூடிய, சமையல் சாஸ்திரமும், பின்னிய நிகழ்ச்சி என்பதை அறிவாரா?

[ஹியர்! ஹியர்! சபாஷ்! சபாஷ்! குரல்கள்.]

அறியாவிட்டால் இப்போதாவது அறிந்து கொள்ளட்டும்.

[கை தட்டல்.]

தலைவர்: இன்னும் யாராவது. பேச விரும்பினுல்... பேசலாம்.

[பண்டிதர் ஒருவர் மேடையில் ஏறுகிருர்.]

பண்டிதர்: சபையோர்களே, அவைத் தலைவர் அவர்களே, என் மனமார்ந்த வந்தனம். அறிஞர்களும், கல்விப் புலமை செறிந்த முதியோர்களும், நிறைந்த புலமை செறிந்த இவ்வவையின் கண், சிற்றறிவும், சிறு தொழிலும், அறிமை விளக்குமுடைய, யான், யாது பகர வந்துள்ளேன் யெனில், அது வெள்ளிடை விலங்கல் போல் தெள்ளிடையாக இருப்பது உணர்க.

இன்றைக்குச் சற்றேறக் குறைய 2500 ஆட்டைக்கு முன்னர், நந்தமிழகத்தில், ஐந்திணை நிலத்திலும், மக்கள் காதல் வாழ்வு வாழ்ந்து, இறும்பூதுற்று வந்த காலத்தின் கண், மேலை நாட்டில், உடுக்க உணவும், உண்ண உடையுமின்றி, ஐயறிவு மாக்கள் போல மக்கள் வாழ்வராயினர்.

நிலமக்களின், கடல் சூழ்ந்த வையத்தில் வதியும் மாந்தர்கள், சந்தி இலக்கணப் பிழை, குழுக்குறி, ஏகார அசை, பிறவினை, எதிர்மறை வினையெச்சம் இஃதின்றி கமறுதல் அறிவு எனக் கடாவுகின்ருேம்.

திருமதி மணவாழ்க்கையம்மணி (கிருஹதர்மினி) அம்மையாரும், திருவாளர் துறவியார் (பிரம்மச்சாரி) அவர்களும் பற்பல இடங்களில் சிற்சில மொழிகள், திரிவு, மயக்கம், உள்படப் பேசுவது தவறு என்றும் கொள்க.

ஏழரை நாட்டுச் சனி தவறு, ஏழரை யாட்டைச் சனி.

தீவட்டி தவறு, தீவர்த்தி எனச் சொல்லவும்.

ஒருவள் தவறு ஒருத்தி எனக் கொள்க.

கண்டராவி தவறு கண்ணராவி என்பதே சாலப் பொருந்தும்.

இப்படி, எத்துணை பிழைகள் அம்மம்மா... காதலுக்குப் பின்னர் மணமோ? மணத்திற்குப் பின்னர் காதலோ, யாது எவ்வாராயினும் ஆகுக. பிழைபடப் பேசல், காதலுக்கும் மணத்திற்கும் பெருந் தீங்கு பயப்பிப்பதாகும் என்பது யாம் சொல்ல வந்தோம். திருச்சிற்றம்பலம்.

[பண்டிதர் இறங்கு முன் வாலிபர் மேடைக்குப் பாய் கிருர்.]

வாலிபர் : மாணுக்கர்களே, மாண விகளே, கிழடுகள் எது சொன் ஞலும் நமக்கென்ன? வருங் காலம் நம்முடையது. நாம் உலகத்தின் சிண்டைப் பிடித்து ஆட்டுகிரும். என் கட்சியை ஆதரிப்பவர்கள், தயவு செய்து தங்கள் ஆமோதிப்பைக் கை தட்டல் மூலம் காட்டும்படி வேண்ட உரிமை யுண்டு.

[கைதட்டல்]

இரண்டு கை தட்டினல் ஓசை... ஆம் காதலுக்கும், மணத்திற் கும் இருவர் தேவை. அவர் களில் ஒருவர் ஆண்பாலாக இருந்தால், எதிர்க் கட்சியில் பெண்பால்தான் இருக்க வேண் டும். இது, உலகத்தின் நியதி. நாம் வருங்கால உலகத்தின், சொந்தக்காரர்கள். கிழடுகள், எக்கேடும் கெடட்டும். அது முக்கியமா?

ஔவையார் ஒரு சமூகவாதி. அவர் பிரம்மச்சாரி. அவர் கண்ணுடி போட்டுக்கொண்டு– ஆம் வேதாந்தக் கண்ணுடி மூலம் வாழ்க்கையைப் பட்டை யிட்டுப் பரிசீலனை செய்ததில், நாம்–வீடின்றி வாழ முடி யாது.என்று பார்த்தார். 'வீடு பெற நில்' என்ருர். இன்னும் வீடு இல்லாமலா நிற்க வேண் டும். எத்தனை கோடிப் பேர் வீடின்றித் தவிக்கிருர்கள். வீடு என்ருல் இருபொருள். புருஷன் மனைவி, 'மடக்கொடி இல்லா மனை பாழ்' என்றதும் ஔவை யார்தான். காதல் கொண்ட வர்களும், கலியாணம் செய் தவர்களும் அல்லது இரண்டுமே அனுபவிக்க இயலாதவர்களும் வீடின்றி வாழ்தல் அரிது. இன்றைய வாழ்வில் காதல், கலியாணம் இரண்டும் அநாவ சியம். வீடு, ஒரு வீடு கிடைத் தால், அப்படிக் கிடைக்க இளை ஞர்களாகிய நாம்–வருங்கால உலகத்தின் சக்கரவர்த்திகளா கிய நாம்! இளைஞர்கள்! இளஞ் சிங்கங்கள்!! செய்ய வேண்டு வது என்ன? இப்பிரசங்கத்தின் விவாதமல்ல. வீடு வேண்டும். ஒவ்வொருவரும் முயற்சி செய் வார்களா? முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். வருங் காலம் இளைஞர்கள் கையிலிருக் கிறது. வீடே கட்டி முடிக் காத நாம் உலகத்தைக் கட்டித் திண்டாட முடியுமா?

என்னை ஆதரிப்பவர்கள் மீண் டும் ஒருமுறை கைதட்டி ஆதரி யுங்கள். வந்தனம்.

[கைதட்டலுக்கு ஊடே குதிக் கிருர்.]

தலைவர் : இன்னும் யாராவது தங் கள் அபிப்பிராயம் கூற விரும் பினல் தயவு செய்து மேடைக்கு வரலாம்.

[ஆவேசம் வருகிருர்.]

ஸ்ரீமதி ஆவேசம் : அன்பர்களே, நண்பர்களே...

[கைதட்டல்]

நம் சமூகம் இப்படி எதற் கெடுத்தாலும் கை தட்டிக் கை தட்டித்தான் இந்தக் கேவல நிலைமைக்கு ஆளாவது. ஆண் களிடமிருந்து என்று விடுதலை கிடைத்ததோ பெண் மகளிர் சுதந்திரம் பெற்றனரோ, அன் றுதான் நமக்கு மோக்ஷம். எங்கு நோக்கினும் ஆணின்

ஆட்சி; ரயில், மோட்டார், ஆபீஸ், நீதி மன்றம் நடுத்தெருவில் நிற்கும் போலீஸ் – எங்கும் ஆணின் ஆட்சி. பெண்ணிற்குப் பெருமை யளிக்க – வாய் விட்டு வாசா கோசரமாய் வானளாவப் பேசும் அன்பர்கள் உத்தியோகங்களில் அசைந்து கொடுக்கிறார்களோ. 1919-ம் வருஷம் இதே இடத்தில் கூடிய பாட்டிகள் மகாநாட்டில் பெண்கள் சுதந்திரம் என எத்தனை பேர்கள் கர்ஜித்தார்கள் தெரியுமா? எங்கே இன்னும் பெண்கள் அடுப்பு ஊதிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படியிருக்க மேடைப் பிரசங்கமாம். காதலாம் கத்தரிக்காயாம். பேச்சில் என்ன இருக்கிறது? இந்தக் கூட்டத்திற்கு வந்துள்ள சோதரர்கள் தங்கள் சோதரிகளை, மனைவிமாரை, என்று அடுப்பூதுவதி விருந்து, கல்வி, நாகரிகம், சொல்லி வைக்க அனுமதிக்கிறார்களோ, அன்றுதான் காதல் வளரும், கல்யாணம் செழிக்கும். மணம் மகிழும். காதல் மணம் கரை புரண்டோடும். மணக் காதல் மகிழ்ச்சியுடன் அலறும். அதற்கு நீங்கள் செய்யப் போவதென்ன? ஆம் உங்களையே – உங்கள் கல் நெஞ்சையே தொட்டுப் பாருங்கள். நீங்கள் ஜடங்களா?

[கைதட்டல்]

தலைவர்: இந்த அம்மையாரின் வீராவேசப் பேச்சுக்குப் பின் யாரேனும் பேச முடியுமா!

[தமாஷ் வாலா ஒருவர் மேடையில் நின்று புன்னகை பூக்கிறார்.]

கேலிக்கூத்து: அடியேன், கேலிக்கூத்தன் ஒரு வார்த்தை சொல்ல வந்துள்ளேன்.

நந்த வனத்தில் ஓராண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி –
அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்
தாண்டி.

என்னடி ஒரு பைத்தியக்காரன் தோண்டியை உடைத்தான் என்றால், அதைப் போய் ஒருவன் எழுதினான் என்றால் அதை வந்து ஒருவன் பாடுகிறானே என்பது உங்கள் சந்தேகம்.

[கைதட்டல்]

கைதட்டுகிறது என்பது 'சபாஷ்' என்றும், 'உட்காரு' என்றும் பொருள். நான் உட்காரவா? இல்லை பேசவா?

தலைவர்: பேசுங்கள்.

கேலிக்கூத்து: நடுத் தெருவிலே, குடம் வைத்து கூத்தாடிக் கூத்தாடி உடைப்பது பைத்தியக்காரத்தனம். அதுபோலத்தான் உங்கள் விவாதமும். அதற்கு– நிலாச் சொரியும் நிழல் மரங்கள் அணியும், கிருகிருக்கும் குளிர் ஓசையும், கீச்சல் காட்டும் தென்றல் ஸ்பரிசம் நிறைந்த ஒரு பூம்பொழிலில் நம் விவாத மேடையை ஆரம்பிக்க வேண்டும். எங்கணும் மலர்ப்பந்தல்; புஷ்ப விதானங்கள். அதை விட்டு, வௌவாலும் பல்லியும் பளிங் கிடு கிடு ஆடும் உயர்ந்த மோட்டைப் பாருங்கள். பாசையும் பல்லியும், சிலந்தியும் நர்த்தனமிடும் சுவர்கள். வானக் கடலிலே வெடித்தெழுந்த வெண்முத்துக்களா, தெரிகின்றது. செல்லரித்த மண் உதிருகிறது. கட்டிய குழவிக் கூடுகள் பொரிந்து விழுகின்றன. இது காதல் –

197255

மணம் இரண்டையும் விவாதிக்கும் மேடையாம்.

காதல் – அது வீழ்க
மணம் – அது ஒழிக
மணமே நீ காதலை விழுங்கு
காதலே, நீ மணத்தை நசுக்கு
மரத்துள் மறைந்தது மாமதயானை
இருளும் ஒளியும் போல
சட்னிக்குத் தேங்காய்
சாம்பாருக்குப் பருப்பு
காதலும் மணமும்,
மாங்காயும் எலுமிச்சையும்
போல
அவை வாழ்க,
சபை கலைக...

[கை தட்டல்]

தலைவர் : அன்பர்களே, நண்பர்களே, என் முடிவுரையை...

[அப்போது குழல் வாய் மொழி வருகிறது.]

குழல் : நான் ரெண்டு வார்த்தை சொல்லிக் கூட்டத்தை முடித்து விடுகிறேன்.

தலைவர் : முடித்து விட வேண்டாம். என் முடிவுரைக்குக் கூட்டத்தைக் கலைக்காமல் வைத்திருங்கள்.

குழல் : நான் சொல்வது என்னவென்றால், வீராவேசமாகப் பேசிய பேச்சியம்மையாரும், விவாதத்தின் பெருந்தலைச் செல்வி கிரஹதர்மணி அம்மையாரும் பெண்களைக் குழலூத வைத்து விட்டதாக ஒரு குரல் வாய்விட்டுப் பிரலாபித்தார்கள். பகவான் ஸ்ரீமந் நாராயணன் கையில் இருப்பது என்ன? புல்லாங்குழல். அது கேட்டு சகல பிராணிகளும், நாங்களும்கூட பசு வேர்த்தி ஈசு வேர்த்தி ...உம்... இன்னம் ஒரு வேர்த்தியும் உண்டு. அது நிற்க, அப்படித் தலை சிறக்கும் தலை சிறந்த வாத்யம் குழல். நம் பெண் மக்கள், அதை ஊதப் பழகிக் கொள்வது மகிழ்ச்சிக் குரியதே. எனக்குக்கூட இதில் பக்கம் உண்டு. இந்த வாத்தியத்தை வண்டு கண்டு பிடித்ததாகக் கதை. அது தப்பு என்பது என் ஆராய்ச்சி. அது சம்பந்தமாக நான் ஒரு நூல் எழுதி வருகிறேன். அதை அரங்கேற்ற இச்சபை ஒரு நிதி வசூலித்துத் தந்தால்......

தலைவர் : சரி... சரி... இவ்வளவு தானே... இன்னும் ஏதாவது...

குழல் : இன்னும் ஒரு வார்த்தை-எனக்குப் புல்லாங் குழலில் பரிச்சயம் உண்டென்றேன். அந்த கானமிர்தத்தை......

[ஊத ஆரம்பிக்கிறார்.]

ஆண்டி : வாசிக்காதே......

வாலிபன் : மேடையை விட்டிறங்கு......

மைனர் : விஷயத்திற்குப் புறம்பான அம்சம்......

பெண்மணி : தலைவர் தலையிடுவாரா?......

[கூட்டத்தில் கைதட்டல், விசில் அடிப்பு.]

தலைவர் : அன்பர்களே, என் முடிவுரையைச் சொல்ல சந்தர்ப்பம் அளித்து விட்டீர்கள். அட என்ன... எவனோ எழுந்திருக்கிறானே......

[விசிறி அங்கவஸ்திர சாரி எழுகிறார்.]

ரஸிகன் : சபையோர்களே, ரஸிகன் என்ற முறையில் சில வார்த்தைகள். ஸ்ரீமதி கிருஹதர்மிணி அம்மாள் அவர்களும், ஸ்ரீமதி வீராங்கனை அவர்களும், ஸ்ரீமான் புல்லாங் குழலாரும், புல்லாங்குழலை உயர்த்திப் பேசி விட்டார்கள். அது எப்படியிருக்கிறது என்றால் உயர்ந்த கோதுமை இருக்க, அரிசிச் சாதம் உண்பதைப் போன்றதே......

வாத்தியங்களில் சிறந்ததை, சரஸ்வதிதேவி மீட்டுகிருள். அதிலுள்ள கமகமும் குழைவும், கண்டத்தோடு சேர்ந்து பிகுக் கொடுத்து மெருகு ஏற்றி ஜாலவித்தை பண்ணுகிற போது, நாமெல்லாம் மேலே மேலே அந்தரகாந்தாரத்திற்கும் மேலே சஞ்சாரம் செய்கிருேம்.

என் குழந்தை சஞ்சலதாக்ஷி வீணையைக் கையாளுவதில் — பெருமைக்குச் சொல்லவில்லை — கண்டமும், வீணையும் இணைந்து, உருகியோடும் தங்க வார்ப்படங்கள்போல, அப்படி அப்படி அங்கங்கே சிருஷ்டிக்கும் மனோதர்ம சிற்ப சித்திரங்கள், உன்னத பாவ வளைவுகள். அடடா...... சொன்னால், மிகையாகப் படலாம். சஞ்சலதாக்ஷி இப்படி மேடைக்கு வாம்மா...

[கூட்டத்திலுள்ள ஒரு பெண் எழுகிறது. தலைவர் கை உயர்த்துகிருர்.]

தலைவர் : போதும்... போதும்... அம்மா சஞ்சலதாக்ஷி, அப்படியே இருங்கள். நண்பர்களே, தாய்மார்களே, இக்கூட்டத்திற்கு விஜயம் செய்த குழந்தைகள்—பால்மணம் மாறுதவை தவிர, மற்ற யாவருக்கும் காதலுக்குப்பின் மணமா? மணத்திற்குப்பின் காதலா? என்னும் விஷயம் பற்றிப் பேச எல்லாரும் ஆவலுள்ளவர்களாய் இருக்கலாம்.

தூங்கிவிட்ட குழந்தைகளை எழுப்புகிறது என்பது தவருன காரியம். நிற்க, இன்றைய விவாதத்தில் – ஸ்ரீமான் பிரம்மச்சாரி, ஆண்டியப்பன் அவர்களும், திருமதி கிருஹதர்மிணி அம்மையார் அவர்களும் தத்தம் கட்சியை, எவ்வளவு ஆணித்தரமாக விவாதித்தார்கள் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. இதன் பின்னர் 'காதலுக்குப் பின் மணமா? மணத்திற்குப் பின் காதலா?' என்ற விஷயம் பற்றி பல அன்பர்கள் கருத்தும், காவ்யமும், கற்பனையும், ஹாஸ்யமும் கலந்த முறையில் பேசி 'காதல்' 'மணம்' என்ற இரண்டையுமே பலமாக விவாதித்தனர். என் கருத்துக்களை இரு பக்கமும் வெட்டியும் ஒட்டியும் பேசிய பெரியார்கள் அழகு சொட்டப் பேசிவிட்டபடியால், நான் காதலுக்குப் பின் மணமா? மணத்திற்குப் பின் காதலா என்பது பற்றி ஏதும் குறிப்பாகச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

முடிவாக, சோதர சோதரிகளே ஒன்று. மணமானவர்கள் காதல் செய்கிருர்கள். காதலர்களுக்கு மணம் ஆகிறது. இதுதான் என் கருத்து.

நமஸ்காரம். [கைதட்டல்.]

[க. கா. கி. குழு காரியதரிசி புன் சிரிப்புடன் மேடையில் நிற்கிருர்.]

காரியதரிசி : நான் பேச வரவில்லை. [கைதட்டல்]

நன்றி கூற வந்துள்ளேன்.

[கை தட்டல்]

தம்முடைய பல வேலைகளையும் சீட்டாட்டம், சினிமா இவைகளை விட்டுவிட்டு, தலைவர் அவர்கள் தலைமை தாங்கி, செவ்வனே நடத்தித் தந்ததற்கு இரட்டிப்பான சந்தோஷத்தையும், மும்மடங்கான கருத்துப் பொறிகளையும் தந்த அன்னாருக்கு, இச்சங்கம் சார்பாக, மலர்மாலை (விலை ரூ. 1—8—0) என் நன்றி.

[கை தட்டல்]

காதலே மணம் நிறைந்தது என வாதாடி, மணத்தின் மேல் ஏங்கிக் கிடக்கும் ஸ்ரீமான் பிரம்மச்சாரியின் சொற்பொழிவு — (பல புத்தகங்களிலிருந்தும் திருடப்பட்டது) என்றாலும் நம் மனமார்ந்த மாலை (விலை ரூபாய் ஒன்று.) அன்பர்களே மணத்திலே காதல் கமழுகிறது என்பதை நமக்கு நிதர்சனம் செய்த திருவாட்டி அம்மையாருக்கு இச்சங்கத்தின் சார்பாக எங்கள் நன்றி. இந்த இடத்தை இலவசமாகக் கொடுத்து (மின்சாரச் செலவை மட்டும் பெற்றுக்கொண்ட) சொந்தக்காரருக்கு எம் வாழ்த்துக்களும், நன்றியும். [கை தட்டல்.]

அன்பர்களே, நமக்கெல்லாம் அறிவுத்தாகம் ஏற்பட்டதோடு இருக்க, பேச்சாளர்களுக்கு ஏற்பட்ட திரவ தாகத்திற்கு—சோடாக் கலர் வழங்கிய முனியாண்டிக்கு எம் வந்தனங்கள்!

முடிவாக இதுவரை இடையிடையே ஒலித்தும், வலித்தும், கெலித்தும், கந்தர்கோளம் செய்த ஒலிபெருக்கி உலகளந்த பெருமாள் கம்பெனியாருக்கு, அவர்கள் உதவியது போலவே, எமது இலவச நன்றி.

[கூட்டம் கலைகிறது.]

★

நியதிகள்

பெற்றவருக்கும் குழந்தைக்கும் ஊடாக அன்பு இருக்க வேண்டும்; அரசனுக்கும் பிரஜைகளுக்கும் இடையே நியாயம் நிலவவேண்டும்; கணவனுக்கும் மனைவிக்கும் ஊடாக கடமைகள் இருக்க வேண்டும்; முதியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் நடுவே கட்டளை நிலவ வேண்டும்; நண்பர்களுக்குள் உண்மை இருக்க வேண்டும்.

— கன்பூஷியஸ் —

அரசியலும் சாமியாரும்

"வில்லன்"

ஜோசப் (1577—1638) இளமையிலேயே மிகவும் சூட்டிக்கையானவரெனப் பெயரெடுத்தார். சிறு வயதிலேயே அவருக்குச் சமயப்பற்று ஏற்பட்டது. ஏசுநாதர் சிலுவையில் பட்ட வேதனைகள் மனத்தில் ஆழ்ந்து பதிந்து விடவே, அவர் சதா காலமும் அதே சிந்தனையாக இருந்தார். வைராக்கியம் துளிர்த்து வளர்ந்தது. ஜகத்குரு வீற்றிருக்கும் உரோமாபுரிக்குப் பிரயாணஞ் செய்தார். கப்புசேன் சாது சங்கத்தில்சேர்ந்து துறவறம் பூண்டார். கடுந்தவம் புரிந்து, ஆத்மீக ரகசியங்கள் பலவற்றுள் ஆழ்ந்தார். இறுதியில் கடவுள் மனிதர் என்னும் புகழையடைந்தார்.

அச்சமயம், பிரான்ஸில், கர்தினல் ரிஷ்லியோ (1585—1642) பெரிய ராஜதந்திரியாக விளங்கினர். அவர் சூழ்ச்சி செய்து மன்னனின் பிரதம மந்திரியானர். ஜமீன்தார்கள் செல்வர்களின் கொட்டத்தை அடக்கவும், கத்தோலிக்க சமயத்தினின்று பிரிந்திருந்த யுகினேட்ஸ்ஸை நசுக்கவும், பிரான்ஸின் ஒற்றுமையையும் மன்னனின் சர்வாதிகாரத்தையும் நிலைநாட்டவும், ஐரோப்பாவில் ஹாப்ஸ்பர்க் ராஜவம்சத்தினரின் வலிமையைக் குறைத்து பிரான்ஸின் ஆதிபத்தியத்தை ஸ்தாபிக்கவும் பெரிதும் உழைத்தார்.

துரதிருஷ்டவசமாக, நம் சாமியாருக்கு ராஜதந்திரி ரிஷ்லியோவின் தொடர்பு ஏற்பட்டது. சாமியாருக்கும் தாய் நாட்டின் மீதும், மன்னனின் மீதும் அளவு கடந்த அன்பு இருந்தது. நாட்டில் ஒற்றுமையும் ஒழுங்கும் ஏற்பட வேண்டுமானல், வலுவான மன்னனாட்சி ஏற்பட வேண்டுமென்பதும், ஆண்டவனின் அம்சமேயான மன்னன் தன் அதிகாரத்தைக் கடவுளிடமிருந்தே பெற்றவன் என்பதும் அவரது கொள்கை. ஆண்டவனின் திட்டத்தில் பிரான்ஸுக்குத் தெய்வீகப் பணியொன்று காத்துக் கொண்டிருக்கிறதென்று அவர் நம்பினர். அப்பணி நிறைவேறத் தாம் அரசியலில் புகுந்து வேலை செய்வது கடவுளின் திருவுள்ளக் கருத்தேயாகுமெனக் கொண்டார். அந்த நிலையில்தான் அவர் ரிஷ்லியோவுடன் சேர்ந்து பூர்போன் மன்னனின் சிறப்புக்காகவும், ஐரோப்பாவில் பிரான்ஸின் ஆதிபத்தியத்திற்காகவும் உழைக்க முன் வந்தார்.

சாமியார் அயல் நாட்டு இலாகாவின் அதிகாரத் தோரணையற்ற தலைவராகிச் சந்தடியில்லாமல் ரிஷ்லியோவுடன் வேலை செய்யலானர். முற்றும் ராஜீயவாதியாகிவிட அவருள்ளம் சம்மதிக்கவில்லை. ஒரு புறம் கடவுள் நலனையும் மற்றொருபுறம் அரசியல் நலனையும் வைத்து, ஒரே சமயத்தில் சாமியாராகவும், ராஜதந்திரியாகவும் விளங்க விரும்பினர். ஆனல், அது இயலுமா? அரசியல் ஒரு சதுரங்கம்; தந்திரமும் சூழ்ச்சியும் சந்தர்ப்ப வாதமும், அறமும் மறநெறியும் களி நடனம்

புரியும் ஒரு சூழல்; அதிகாரம் பெறுவதற்கான ஒரு சூதாட்டம். இவற்றில் சிக்கிக் கொள்ளும் ஒரு சாமியார் தம் நெறிக்குக் களங்க மின்றி மீள முடியுமா?

ஆயினும் ஜோசப் சாமியார் முயன்றார். அவர் முயற்சி பலி க்கவில்லை. அரசியலின் பொரு ட்டு ஆத்மீக நலனைக் கைவிட நேர்ந்தது. ராஜாங்கச் சூழ்ச்சி களில் சிக்கிய அவருடைய திருஷ்டி மெல்ல மெல்ல மழுங்கியது. முப் பது வருஷ யுத்தத்தில் பங்கெடுத் துக் கொள்ள வேண்டியிருந்த அவர், கொலை, களவு, சூறை, சித் திரவதை முதலிய யுத்த பயங்கரங் கள் விஷயத்தில் அலட்சியமாயி ருக்க வேண்டி வந்தது. இவை யாவும் பிரான்ஸின் நலத்திற்காகத் தானே என்று தம்மைத்தாமே சமாதானப் படுத்திக் கொண் டார். பிரான்ஸின் நலனும் சிறப் பும் ஆண்டவனின் திருவுள்ளமே யன்றோ? லட்சியத்தின் பொரு ட்டு எச்சாதனத்தையும் கைக் கொள்ளலாமன்றோ?

துறவி அற நிலையிலிருந்து வீழ்ந் தார். ஆண்டவனும் தம்மிட மிருந்து மெல்ல மெல்ல விலகி யதை உணர்ந்தார். தம் அந்திய காலத்தில்தான் தம் பெருந்தவறை உணர்ந்தார்.

ஜோசப் கடவுள் மனிதர்தாம். கடவுளுடன் சிறிது தொடர்புடை யவர்தாம். ஆனால், அவர் எப் போதும் கடவுள் உணர்வில் தோய்ந்திருக்கவில்லை. புத்தர் ராமகிருஷ்ணர் போன்ற முனிவர் களுக்கு ஆண்டவனுடன் பூரண, இடை விடாத தொடர்பு இருந் தது. இவரிடம் அது இல்லை. இதனாலேயே இழிவது சாத்திய மாயிற்று.

துறவி இப்புவியில் கருமஞ் செய்யலாகாது என்பதில்லை. ஆனால் அரசியலைத் தவிர வேறு கருமமில்லையா? ஒரு லட்சியத்தை அடைவதற்கான சாதனமும் லட் சியத்தைப் போலத் தூய்மையான தாய் இருக்க வேண்டும். செய லில் ஈடுபடுவோன் தன்னலத் தியாகியாயும், பற்று ஒழிந்தவனா யுமிருத்தல் வேண்டும். அகங்கார மமகாரங்கள் விட்டவனாயிருத்தல் வேண்டும். அவன் கருமமே விழுமிய கருமம். ஆத்மீக விழி யற்ற, பண்பற்ற மனிதனின் செயல் விழுமிய பயனையளிக்காது. ஜோசப்பின் வாழ்க்கை இவ்விழு மிய போதனையை நமக்களிக் கிறது.

"கிரே எமினென்ஸ்" என்ற தலைப்பில் அல்டுஸ் அக்ஸ்லி இவ்வர லாற்றை அற்புதமாகவும் ரத்தினச் சுருக்கமாகவும் எழுதியிருக்கிறார். இந்நூல் வெறும் வாழ்க்கை வர லாறு அன்று. பதினேழாவது நூற்றாண்டில் ஐரோப்பாவின் உள்ளப் பாங்கை விளக்கும் ஒரு நூலுமாகும். நாம் சாமானியமா கப் படிக்கும் சரித்திரம் சதை யற்ற எலும்பு போன்றது. ஆனால் நம் ஆசிரியர் கையில் அது சதை யும் சீவனும் பெற்று துடி துடிக் கிறது. அன்றியும், ஜோசப்பின் வாழ்க்கையை விவரிப்பதன் மூலம் ஆசிரியர் மிகவும் சிக்க லான வாழ்க்கைப் பிரச்னைகளை யும் விமர்சனம் செய்கிறார். அவர் விமர்சனத்தில் கலையழகும் ஆராய்ச்சியும் மிளிர்கின்றன.

அல்டுஸ் அக்ஸ்லி விஞ்ஞான முறையில் நன்கு பயின்ற மனத் துடன் 1941ல் யுத்தம் நடந்து கொண்டிருந்த போது அமெ ரிக்கா சென்றார். அங்கே, அமை தியாக பழைய புதிய சரித்திரங் களையும், பௌத்த, இந்து, கிருஸ்

துவ, சீன, சூபி சமயங்களையும் ஆழ்ந்து ஆராய்ந்தார். இது காறும் மன அறிவு கொண்டே யாவற்றையும் நோக்கி வந்த அவர் மன அறிவுக்கு அப்பாற்பட்ட உண்மையைத் தாழ்மையுடன் நாடினார். ஆத்மீக ரகசியங்களை அறிய விரும்பினார். அவற்றை உயரிய உணர்வில் நிலைத்து ஆண்டவன் உணர்வுடன் தோய்வதன் மூலமே அறிய முடியுமெனக் கண்டார். இந்நாட்டத்தின் பயனுகவே 1942ல் இந்நூல் எழுந்தது. விழுமிய மானிடரின் உள்ளப் போராட்டங்களையும் வெற்றி தோல்விகளையும் விவரிக்கும் வரலாற்று நூல்கள் மிக அபூர்வம். மேலை நாடுகளில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக இத்துறையில் ஆறு நூல்களே வெளி வந்துள்ளன. ரிச்சார்டு டெய்லர் எழுதிய யெயனுர்தோ தெவேன்ஸியின் வரலாறு, சல்லிவன் எழுதிய இசை மன்னன் பீதோவன் வரலாறு, ஸ்தெபான்ஜ்வெய்ச் எழுதிய இராஸ்மஸ் வரலாறு, எமில்லுட்விச் எழுதிய சதே வரலாறு, ரெனே புல்வர்வே அவை. ஜோசப் சாமியாரின் வாழ்க்கை, உள்ளம், எண்ணங்கள் இவை எவ்வாறு படிப்படியாக மலர்ந்தன என்பதையும், அரசியல் சேற்றில் சிக்குண்டு எப்படி ஆத்மஹத்தி செய்து கொண்டார் என்பதையும் உணர்ச்சியுடன் கலையழகு ததும்ப விளக்கும் "கிரே எமினென்ஸ்" மேலே சொன்ன நூல்களுடன் ஏழாவது ஸ்தானம் பெறத் தகுந்தது என்பதில் சிறிதும் ஐயமேயில்லை.

★

தலையங்கம்

குதிரையினுடைய துடுக்கும், கம்பீர்யமும், மிடுக்கும் கழுதையினுடைய வலுவு பொறுமை கூச்சல் இவை இணைத்த சிருஷ்டி தலையங்கம். அதேபத்திரிகையின் இடப்பத்தியிலோ வேறு பத்திகளிலோ உள்ள நிருபர்களின் செய்தியை வலப் பக்கத்தில் கொடுப்பது தலையங்கம். இலக்கியத்தின் தரத்தை விட சற்றுத் தாழ்வும், செய்தியின் தரத்தை விட சற்று உயர்வும் கொண்ட கோவேறு கழுதை அது.

— ஷோ —

தொடர் கதை:

மல்லிகைமொக்கு

த. நாகலிங்கம்

அத்தியாயம் பதினேழு

தேய்த்து விளக்கிய பாத்திரங்களை யெல்லாம் ஒழுங்காக அடுக்கி வைத்ததும், ஊரிலிருந்து வந்திருப்பவர்களுக்கு காப்பியாவது போட்டுத் தரலாம் என்று பறக்கப் பறக்க அடுப்பை மூட்டிக் காப்பிக்குத் தண்ணீர் வைத்தாள் சுமதி. தண்ணீர் கொதி வருவதற்குள் கூடத்தை விட்டு சமையலறைக்குள் நுழைந்த காமாக்ஷியம்மாள் காப்பிக்குத் தண்ணீர் கொதிப்பதை அறிந்து கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். வீடு தூசி தும்பு இல்லாமல் சுத்தமாக இருந்தது. சாமான்கள் ஒழுங்காக, அதனதன் இடத்தில் வைக்கப்பட்டிருந்தன. காமாக்ஷியம்மாளுக்கு சுமதி இன்னரென்று தெரிவதற்கு முன்னலேயே அவள் மேல் ஒருவித அபிமானமும், நல்ல அபிப்பிராயமும் ஏற்பட்டன. சுமதியின் அருகில் வந்து "தண்ணி இன்னும் கொதிக்கவில்லையா?" என்ருள்.

"இதோ...... கொதிக்கிறதுக்கு ஆச்சு" என்று டப்பாவிலிருந்து பொடியை எடுத்து தயாராக வைத்துக் கொண்டாள் சுமதி. வாங்கி வந்திருந்த பாலில் பாதிக்கு மேல் மீதியிருந்தது. ஆகையால் தண்ணீர் கொதி வந்ததும் பொடியைப் போட்டு இறக்கி, கலக்குவதற்குள், புவனவும் சமையல் வீட்டிற்குள் நுழைந்து தன் பார்வையைச் சுமதியின் மேல் பூரணமாகத் திருப்பினள்.

தான் முன்பின் அறியாத ஒரு பெண் தன் வீட்டில் சர்வ சுதந்திரமாய்க் காப்பி போடவும் வைக்கவும் இருந்தது புவனவுக்கு வியப்பாய் இருந்தது. அது மாறுவதற்குள் ஒரு சின்ன செம்பில் முக்கால் பாகம் காப்பி நிறைத்து அதையும் இரண்டு டம்ளர்களையும் புவனவின் கையில் கொடுத்து, "இந்தாங்க அக்கா, அவர்களுக்குக் காப்பி கொண்டு போய்க் கொடுத்து

விட்டு வருகிறீர்களா?'' என்றாள் சுமதி, புவனாவின் முகத்தைப் பார்த்தபடி.

சுமதியின் முக விலாசத்தையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த புவனாவுக்கு சுமதி சொன்னது காதில் விழுந்தது. ஆனால் அதற்கான பதில் சொல்ல அவள் வாயிலிருந்து ஏனோ வார்த்தைகளே வெளி வரத் தயங்கின. கடைசியில் 'சரி' என்ற இரண்டு எழுத்துக்கள் அவள் வாயிலிருந்து மிகுந்த சிரமத்துடன் வெளி வந்தன. செம்பையும், டம்ளர்களையும் எடுத்துக் கொண்டு முத்துசாமி, சேகரன் முதலியோர் இருந்த இடத்திற்குச் சென்று அவர்களுக் கெல்லாம் காப்பி வழங்கிவிட்டுத் திரும்பினாள்.

புவனா திரும்பி வந்த போது சமையலறைக்குள்ளே ஒரு சிறு பாயில் உட்கார்ந்து கொண்டு காமாக்ஷியம்மாள் காப்பி ஆற்றிக் கொண்டிருந்தாள். காப்பி நிறைந்த ஒரு பெரிய டம்ளரையும், ஒரு காலி டம்ளரையும் புவனாவின் கையில் கொடுத்து, ''நீங்கள் சாப்பிடுங்கள் அக்கா, சர்க்கரை வேண்டுமானால் இதோ இருக்கிறது'' என்று சொல்லி சர்க்கரை டப்பாவையும் அருகில் எடுத்து வைத்தாள்.

''சர்க்கரை சரியாய் இருக்கிறது. இதற்குமேல் இனிப்பு இருந்தால் காப்பி பானகம்தான்!'' என்றாள் காமாக்ஷியம்மாள். காப்பியைக் கொஞ்சம் சுவைத்துப் பார்த்த புவனாவும் காமாக்ஷியம்மாள் கூறியதை ஆமோதித்தாள்.

''அதெல்லாம் சரிதான். நீ எப்பம்மா காப்பி சாப்பிடறது?' என்று காமாக்ஷியம்மாள் சுமதியைப் பார்த்துக் கேட்டாள்.

''நான் முதல்லேயே சாப்பிட்டாயிற்று'' என்று சொன்னவளை வற்புறுத்தி, மீண்டும் ஒரு டம்ளர் சாப்பிட வைத்து விட்டாள் காமாக்ஷியம்மாள். காப்பி சாப்பிட்டு முடிவதற்குள் மூவரும் ஒருவரையொருவர் நன்றாக அறிந்து கொண்டார்கள், இரவுச் சாப்பாட்டுக்கான வேலைகளில் இறங்க முயன்ற சுமதியைக் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்து விட்டு, ''நீங்கள் உட்காருங்கள். வீட்டுக்காரி நான். காப்பிதான் போட்டீர்கள் என்றால் சமையலுக்கும் ஆரம்பித்து விட்டீர்களே! வந்த விருந்தாளியாகிய உங்களுக்கு நாங்களல்லவா சமையல் செய்து போட வேண்டும்? அதெல்லாம் முடியாது. பேசாமல் உட்காருங்கள்'' என்று சொல்லி விட்டு அடுப்பருகில் சென்று விறகைத் தள்ளி விட்டவள், அடுப்பில் பருப்பு வெந்துகொண்டிருந்ததைப் பார்த்து, ''அடடா, பருப்புக்கூட வெந்து விட்டதே'' என்று சொல்லி ஒருதரம் கரண்டியால் துளாவி விட்டுவிட்டு காய்கறி என்ன இருக்கிறது என்று பார்க்கலானாள் புவனேஸ்வரி. எப்போதோ வாங்கின சில கத்திரிக்காய்களும், சேனைக் கிழங்கும் உருத் தெரியாமல் வாடி வதங்கிக் கிடந்தன. சரி ஏதாவது வாங்கி வரச் சொல்லுவோம் என்று கூடத்தை நோக்கி வருவதற்குள் சேகரன் கையில் ஒரு பையுடன் சமையலறையை நோக்கி வந்து, ''காய்கறி ஒன்றுமில்லையே, வாங்கி வந்து விடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

''சீக்கிரம் வந்து விடுங்கள்' என்று புவனா சொன்னது அரை

குறையாக அவன் காதில் விழுந்தது.

காப்பி சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்து வர கூடத்துக்குச் சென்ற புவனா, கண்ணனின் மணி மணியான மழலை மொழிகளைக் கேட்டு அயர்ந்து நின்றாள்.

அந்தப் பால்வடியும் முகமும், துறுதுறுத்த கண்களும், அவன் பேசிய அழகும் சேர்ந்து அவனை அப்படியே வாரி யணைத்துக் கொள்ளத் தூண்டின. ஆனால் கண்ணன் சுந்தரேசன் மடியில் உட்கார்ந்து கொண்டிருந்தது தான் அதற்குத் தடையாக இருந்தது. அந்த உணர்விலிருந்து விடுபட்டு, "அண்ணா, அந்தத் டம்ளரையும், செம்பையும் தருகிறாயா?" என்றாள் முத்துசாமியைப் பார்த்து.

"இதையா?" என்று சொல்லிக்கொண்டே அவற்றை எடுத்துக் கொடுத்தான் முத்து.

ராஜம்மாள் இப்பொழுது தெம்புடன் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். இத்தனை நாளும் தனிமையில் பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இல்லாமல் இருந்தவளுக்கு இன்று மூன்று நான்கு பேர் வரவும் அதனாலேயே அவள் வியாதியெல்லாம் பறந்து ஓடிப் போய் விட்டது போல் இருந்தது அவளுக்கு.

"ஏம் புவனா, விளக்கேத்தர நேரமாச்சே, விளக்கேத்தலையா?" என்றாள்.

"இதோ போறேனத்தே" என்று சொல்லிக் கொண்டே கையிலிருந்த பாத்திரங்களுடன் சமையலறைக்குள் நுழைந்தாள் புவனேஸ்வரி.

காமாக்ஷியம்மாளுக்குச் சற்று தூரத்தில் உட்கார்ந்து கொண்டு ஏதோ பேசியபடியே விளக்குகளைத் துடைத்து எண்ணை யூற்றிக் கொண்டிருந்தாள் சுமதி. காமாக்ஷியம்மாள் முறத்தில் அரிசியை எடுத்து வைத்துக் கொண்டு கல்லும், நெல்லும் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு சமையல் அறையிலிருந்த பத்துப் பாத்திரங்களையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்று ஒரு 'பக்கெட்' தண்ணீர் இழுத்து வைத்துக் கொண்டு பாத்திரங்களைத் தேய்க்க ஆரம்பித்தாள்.

சுமதியை நினைக்க நினைக்க அவளுக்கு வியப்பு மேலிட்டது. 'முன்பின் அங்கு வந்திராத அவளுக்கு தன் வீட்டின் மேல் இவ்வளவு ஆசையும், பந்தமும் எப்படி ஏற்பட்டன? பிறர் வீட்டுக் காரியத்தைத் தன் வீட்டுக் காரியமாக நினைத்துச் செய்யும் மனோ பக்குவம் இயற்கையிலிருந்தே அவளுக்கேற்பட்டதாக இருக்குமோ? எவ்வளவு உரிமை பாராட்டி என்னை "அக்கா" என்று அழைத்தாள்? கணவனும் மனைவியும் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்.

அந்தப் பையன் — அட அவன் பேச்சில்தான் என்ன இனிமை!! அவனைக் கொஞ்ச நேரமாவது வைத்துக் கொள்ள வேண்டும்' என்று இப்படி யெல்லாம் ஏதேதோ சிந்தனைகளில் மூழ்கியிருந்த புவனா பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவிவிட்டு எழுந்தாள்.

(தொடரும்)

கடமை

எச். விஜயகுமார்

சேனு: அன்பானந்தரே! இவைகளைவிடப் பெருத்த பேரிடியொன்று காத்திருக்கிறது என்று தங்களுக்கு இன்னும் தெரியாது.

அமை: இன்னும் பேரிடியா? அஃது என்ன? கூறுங்கள். நான் தான் இடிகளைத் தாங்குவதற்கு இடிதாங்கி போல நிற்கின்றேனே!

சேனு: அசோகர் கலிங்க நாட்டின் மீது படையெடுத்துவரப் போவதாயும் அடுத்த ஆறு மாதங்களுக்குள் சேனைகளுடன் சித்தமாக இருக்கும்படியும் தூதர்கள் மூலம் செய்தி அனுப்பியுள்ளார்.

அமை: (திடுக்கிட்டு) ஆ...! இது தான் ஒன்று குறையாக இருந்ததா? அதுவும் இந்தச் சமயத்திலா? மகளைப் பிரிந்த மனத்துயரால் மன்னர் பித்துப் பிடித்தவர் போலக் காணப்பட்டார். இனி இறந்த துக்கத்தில் என்ன ஆகப் போகிறதோ தெரியவில்லை. என்னதான் நாம் இருந்தாலும் அரசர் இல்லாமல் ஆட்சி எங்ஙனம் நடக்கும்? மகளைப் பிரிந்த மனக்கவலையில் ஆழ்ந்து கிடக்கும் மன்னர் அரசாட்சியை அலட்சியம் செய்துவிட்டால் அப்புறம் நாட்டின் கதி என்னவது?

சேனு: ஆம் அன்பரே! அது மிகவும் கவனிக்க வேண்டிய விஷயம்! கடுந்துயரை மறப்பதற்குக் காலத்தைத் தவிர சிறந்த மருந்து வேறில்லை. ஆனால் காலத்திற்காகக் காத்திருக்க முடியாது. அசோகர் படையெடுத்து வரப் போவது உறுதியே!

அமை: இவ்விதம் எவ்வித சச்சரவும் இல்லாமல் படையெடுத்து வருவதற்குக் காரணம்...?

சேனு: அரசாளும் ஆசையே!

அமை: (அலட்சியமாக) ஹூம்! புத்தமதப் பித்துக் கொண்ட அவர் புத்திரி சங்கமித்திரை எங்கே? அடக்கியாளும் ஆசை கொண்ட அசோகர் எங்கே?... அதிருக்கட்டும் வீர சேனரே! அரசரின் மனக்கவலையை மாற்றுவதற்கு அரியவழி ஏதேனும் உண்டோ?

சேனு: அமைச்சரே! அறிவிற் சிறந்த தங்களுக்குத் தோன்ருத வழியா அடியேனுக்குத் தோன்றிவிடப் போகிறது? தாங்கள்தான் ஏதேனும் உபாயம் செய்ய வேண்டும். கலிங்கத்தின் உயிர் இப்போது தங்கள் கையில்தான் இருக்கின்றது

அமை: ஆம்! ஏதேனும் ஒரு வழி செய்துதானகவேண்டும். மன்னருக்கோ குடிகளைப் பற்றிய

ஒரே கவலைதான் உண்டு. ஆனால் மந்திரிக்கு மன்னன் குடிகள் இருவரைப் பற்றிய கவலையும் பொறுப்பும் தலைமேலிருக்கிறது (சிறிது யோசித்து) சரி வீர சேனரே! நீங்கள் பாட்டுக்குச் சேனைகளைச் சித்தப்படுத்துங்கள். மன்னரை நான் பார்த்துக் கொள்கிறேன்!

சேனு: எனக்கு வேண்டியதும் அவ்வளவே! நான் வருகிறேன்.

(செல்கிறார்.)

அமை: (தனியே) ஆம்! அதுதான் சரியானவழி! இன்றிரவே அமரனைச் சிறையில் சந்திக்கிறேன்.

[பணிப் பெண்கள் வெளியே வருகின்றனர். அவர்களில் உதய தாராவுமிருக்கிறாள். அவள் கண்கள் அழுதழுது சிவந்து போயிருக்கின்றன.]

உதய: (மிகவும் தீனமான குரலில்) மகாப்பிரபோ! அரசர் தெளிவடைந்திருக்கிறார். இளவரசியாரை நினைத்து ஏங்குகின்றார். இனி எங்கள் வேலை முடிந்தது. அவரை ஆற்றுவது உங்கள் பொறுப்பு. அரசிளங்குமரியின் தகனக் கிரியைகளுக்கும் ஏற்பாடு செய்யுங்கள். (துக்கம் பொறுமல் விம்மி அழுகின்றாள்)

அமை: அழாதே உதயா! அனைத்தும் அவன் செயல். சேவகரை அனுப்பிச் சிதை வளர்க்கச் சொல்! அதற்குள் மற்ற சடங்குகளுக்கும் ஏற்பாடு செய்! நான் சென்று அரசரை கவனிக்கிறேன்.

உதய: உத்தரவு மகாப்பிரபு!

[செல்கின்றனர். அன்பாநந்தர் அறைக்குள் நுழைந்து பார்க்கையில் அரசர் கைகளில் முகத்தைப் புதைத்து அழுது கொண்டிருக்கின்றார்.]

அமை: (பதைத்து) இதென்ன மகாராஜா! கலிங்க நாட்டரசர் குழந்தையைப் போல கலங்கி அழுகின்றாரா! அவனியை அடக்கும் அரசர் அழுகையை அடக்க முடியாமல் அதற்கு அடிமைப் பட்டாரா?

அர: (அழுதுகொண்டே) அமைச்சரே! இனிநான் உலகில் யாருக்காக உயிருடன் இருப்பது? மனைவி மாண்டாள்! மகளும் மறைந்தாள்! இனி எனக்கு இவ்வுலகில் என்ன வேலை?

அமை, அரசே! உணர்ச்சி மிகுதியால் உண்மையை மறந்து பேசுகின்றீர். அரசர்கட்கு நாடே மனைவி! குடிமக்களே புதல்வர்கள். அதுதவிர, இப்போது கலிங்கத்தின் மீது பெரிய ஆபத்து காத்திருக்கின்றது. அசோகர் ஆறு மாதங்களுக்குள் கலிங்கத்தின் மேல் படையெடுத்து வரப் போகின்றார். தூதர்கள் கொண்டுவந்த செய்தி இது!

அர: யார் வந்தாலும் வரட்டும்! அன்பரே! இந்நாட்டை இனிமேல் என்னால் ஆள முடியாது! அசோகரே அரசாளட்டும். நான் துறவியாகப் போகப் போகிறேன்.

அமை: அரசே! இது என்ன கோழைத்தனம்? சேனைகளைச் சித்தம் செய்ய உத்திரவிடுங்கள் வாயிலுக்கு வரும் எதிரியை வறிதே விடுவதா?

அர: இனிமேல் என்னால் ஒன்றும் முடியாது! நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என்னை வருத் தாதீர்கள்.

[உதயதாரா உள்ளே வருகின்ருள்]

உத: வாழ்க மன்னர்! வாழ்க அமைச்சர்! அமைச்சரே! இள வரசியாரின் தகனக் கிரியை களுக்கு வேண்டிய யாவும் முடிந்தன. அரசகுமாரியின் சவத்தைக் காண ஆயிரக் கணக் கான மக்கள் அரண்மனைக்கு வெளியிலும், அரச வீதிகளி லும், ஈமக்காட்டிலும் கூடி யிருக்கின்றனர்! கட்டளைக்காக காத்து நிற்கின்ருேம்!

அமை: (அரசரை நோக்கி) அரசே! நடந்தது நடந்து விட்டது! நடக்கவேண்டியதைப் பார்ப் போம். இளவரசியைக் கடைசி முறை கண்டுவருவோம் வாருங் கள்!

அர: அந்தோ மிருணு! பூக்களா லும் புது மணிகளாலும் அலங் கரித்து அழகு பார்த்த உன் தேகம் வெந்தணலின்வேகத்தை எப்படித்தாங்கும்? பட்டு மஞ் சத்தின்மேல் படுத்த நீ கட்டை களின் மேல் கிடக்கப் போகின் ருயா? ஐயோ! விதி விதி! எல் லாம்விதி! வாரும் மந்திரியாரே!

(திரை)

4

[சிறைச் சாலையில் அமரன் அழுத கண்களுடன் அமர்ந்திருக்கிறன். எங்கும் இருள் சூழ்ந்து கிடக்கின்றது. உச்சி வானிலே ஒளிரும் உடுக் கணங்களின் ஒளி, சிறையின் பலகணிகள் வழியாக உள்ளே பாய்ந்து இருளுடன் போராடுகின்றது. ஆனல் கிடைப்பதென்னவோ தோல்வி தான். தடாலென்று சிறைக்கதவு திறக்கப்படும் சப்தத்தைக்கேட்டுத் திடுக் கிடுகின்ருன் அமரன். ஒரு உருவம் வந்து நிற்கின்றது அவன் எதிரில். யார் எனத் தெரியாமல் அமரன் விழித்து நிற்கையில்............]

உரு: அமரா! என்னைத் தெரிய வில்லையா?

அம: ஆ! யார்? அமைச்சரா?

உரு: ஆம்! இப்பொழுதில் வேறு யார் சிறைக்குள் நுழையமுடி யும்?

அம: அமைச்சரே வணக்கம்! எதிர் நோக்கா விதமாக இவ்வி டம் எழுந்தருளிய தங்களை எவ் விதம் வரவேற்பதெனத் தெரி யாமல் வருந்துகின்றேன். என் குடிலில் தங்களை வரவேற்கும் பாக்கியத்தைப் பெருவிடினும் சிறையிலாவது அப்பாக்கியம் கிட்டியதே என மகிழ்கிறேன்.

அமை: உபசார மொழிகள் ஒரு புற மிருக்கட்டும். அமரா! பெரியதொரு இழி தொழிலைச் செய்து கலிங்கத்தைக் களங்கப் படுத்திவிட்டாய்.

அம: காதலை இழிவென்று கருது பவர் கலிங்கமன்னர். அந்நாட் டிற்குக் களங்க மேற்படாம லென்ன செய்யும்?

அமை: அமரா! சிறைப்பட்டிருப் பினும் துணிச்சல் குறைய வில்லையா?

அம ; ஸ்வாமி! சிறைப்பிடித்தது என்னை யன்றி என் மனதை யல்ல என்பதை அறிவீரோ? எல்லை மீறினல் மன்னிக்க வேண்டுகிறேன்.

அமை : நெருக்கடியான நிலைமை யில் உன்னுடன் தர்க்கம் செய் வதில் பயனில்லை. அமரா! உனது ஆலோசனையற்ற செய் கையால் அரசரது வாழ்க்கை சின்னுபின்ன மாகிவிட்டது. அவரது வறண்ட வாழ்வில் வற்ருத ஊற்றுப் போலிருந்த மிருணுவை நீ அவரிடமிருந்து பிடுங்கிக்கொண்டாய். அரசரது துயரை நீ அறிவாயோ?

அம : பிரபோ: என்னை மீறிச் சொற்கள் வெளி வருகின்றன. அரசருக்குக் கவலை யேற்பட் டால் அவனி முழுதும் ஆர்த் தெழுகின்றது. ஆனல் இவ் வேழை அமரன் எங்கே ஏங்கிக் கிடக்கின்ருன் என்பதையறிய யாருக்குக் கவலை? கலையைப் போற்றும் மக்கள் கலைஞனை...

அமை: வீண் வார்த்தையாட நான் இங்கு வரவில்லை. காரியங் கரு தியே காரிருளில் வந்தேன்.

அம : கட்டளை யாதோ? எதுவா யினும் செய்ய எளியேன் சித்தமாக இருக்கிறேன்.

அமை : அமரா! பலபேசிப் பய னில்லை. அரசகுமாரி ஆவி துறந்தாள். அரசர் துயரக் கட லினின்றும் மீள வகையறியாது துடிக்கின்ருர். அரசாட்சியை அலட்சியம் செய்து அறையி லேயே அடைந்து கிடக்கின்ருர். இத்தருணத்தில் அசோகர் படையெடுத்து வருவதாக செய்தி அனுப்பியுள்ளார். அர சரைத் துயரத்தினின்றும் மீட்க நீ தான் வழி செய்ய வேண்டும்.

அம : மகாப்பிரபு! நான் அறி ஞனு? அல்லது வீரனு? என்னல் சமரில் என்ன செய்ய முடியும்? காதலியைப் பிரிந்து கடுந்துய ரில் ஆழ்ந்திருக்கின்றேன் நான். கலிங்கரை எங்கேதேற்றுவது?

அமை : சிற்பி! இத்தருணத்தில் அலட்சியம் செய்வது அடுக் காது! கலிங்கத்தின் உயர்வும் தாழ்வும் இப்பொழுது உன் கையில் தான் இருக்கின்றன. நீ நினைத்தால் அரசரை ஆற்ற முடி யும். அது உன் கடமையாகும்.

அம : அடியேன் என்ன செய்ய வேண்டுமென்று கூறினல் அத னைச் சிரமேற்கொண்டு செய்து முடிக்கச் சித்தமாக உள்ளேன்.

அமை , நல்லது. நாளை மறுநாள் சபையில் விசாரணை நடக்கும் பொழுது உனக்கு என்ன தண் டனை கிடைக்கும் என்பதை நீ அறிவாயோ?

அம : அறிவேன் பெரியீர்! கடுந் துயரை நீக்கும் கழுமரம் தானே எனக்குக் கதி,

அமை : அதற்கு நீ அஞ்ச வில்லையா?

அம : அஞ்சியிருப்பின் அரசகுமா ரியின் பிணத்தைத் தோளின் மீது போட்டுக் கொண்டு இங்கே வந்திருப்பேனு?

அமை : உனது ஆண்மை மெச்சத் தகுந்ததொன்றுதான். தவருக உபயோகித்து விட்டாய்! அது நிற்க. நாளை மறுநாள் விசாரணை யின் பொழுது உனக்குக் கழு மரத் தண்டனை விதிக்கும் கட் டளை பிறக்கும். அப்பொழுது உன் கடைசி விருப்பம் யாதா யினும் இருப்பின் நிறைவேற் றப்படுமென அறிவிக்கப்படும்.

அப்போது நீ என்ன கேட்கப் போகிறாய்?

அம : மதிப்பிற்குரிய பெரியீர்! காதலியைப் பிரிந்த எனக்குக் காசினியில் வேறு என்ன இருக்கிறது? கழுமரத் தண்டனையைக் கணமேனும் தாமதியாது நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்வேன்.

அமை : காதலிலேயே மூழ்கிக் கடமையை மறந்துவிடாதே அமரா! நீ ஒரு கைதேர்ந்த சிற்பி. அரிதாகக் கிடைக்கும் அத்தருணத்தில் நீ சற்று அறிவுடன் நடந்து கொண்டால் அரசரைத் துயரினின்றும் மீட்பதோடு உனதுயிரையும் மீட்டுக்கொள்ளவும் வழி யேற்படலாம்.

அம : அறிஞரே! தங்கள் கருத்தை அடியேனால் அறிந்து கொள்ள முடியவில்லையே! தெளிவாகக் கூறத் தயை செய்ய வேண்டும்.

[அமைச்சர் லேசாகச் சிரித்து அமரனின் செவிகளில் ஏதோ சொல்லுகின்றார். அமரனின் முகம் மலர்கிறது]

அம : ஆஹா! அமைச்சரே உய்ந்தேன்! அரிய வழி! அவசியம் முடிப்பேன். இக் காரியத்தை வெற்றிபெற முடிப்பேனாகில் உற்றதுயர் யாவும் நீங்கி உயர்வடைவேன். மாளாத் துயர் கொண்ட என்மனம் சாந்தியுறும், இவ்வரியதோர் வழியைக் கூறிய தங்களை ஆயிரம் முறை போற்றி வணங்குகின்றேன்.

[அமைச்சரது பாதங்களில் விழுகின்றான்.]

5

[சில நாட்கள் அதன் பின் கழிந்தன. மன்னர் இன்னும் கவலையிலேயே மூழ்கினவராகக் காணப்படுகின்றார். அரசைக் கவனியாது அல்லும் பகலும் அருமைப் புதல்வியைப் பிரிந்து ஆற்றொணாத் துயரில் ஆழ்ந்து கிடக்கின்றார். அமரன் வழக்கு விசாரிக்கும் நாள் நெருங்குகின்றது. அமைச்சர் அரசரை ஒருவாறு தேற்றி அரச சபைக்கு அழைத்து வருகின்றார். வழக்கு விசாரித்துக் கொண்டிருக்கையில்..........]

அரசர் : கலைஞன் என்று எண்ணி உன்னைக் கௌரவித்தோம், சிற்பி எனக் கருதி சீரும் சிறப்பும் அளித்தோம்; அநாதையாகத் திரிந்த உன்னை அன்புடன் அரண்மனையில் கொண்டு வந்து ஆதரித்தோம். அதற்குத் தகுந்த பலன் கிடைத்து விட்டது. பாம்பிற்கு பால் வார்த்தாலும் பலன் விஷம் தானே!

சிற்பி : மகாராஜா! தேவகலைஞன் என என்னைப் போற்றிய தாங்களே இன்று என்னைப் பாம்பு என்று பகர்ந்து இகழ்கின்றீர்கள். கலையமுதை அள்ளி வீசும் கற்பனைக் கடலே என்று என்னை வாயாரப் புகழ்ந்தீர்கள் இன்று அதேவாயால் நஞ்சைக் கக்கும் நன்றி யறிவில்லா நல்ல பாம்பே! என அழைக்கவும் துணிந்தீர்கள்! எல்லாம் விதி!

அர : விதியின்மேல் பழி சாற்றி விடுதலைபெற முடியாது அமரா!

செய்த குற்றத்துக்குத் தண்டனை அனுபவித்துத் தானே தீர வேண்டும்!

அம : குற்றமா பிரபோ! என் மனமறிய ஒரு குற்றமேனும் செய்திருப்பதாக எனக்குத் தெரியவில்லையே?

அர : ஒரு குற்றமல்ல அமரா! ஓராயிரம் குற்றங்கள் செய்துள்ளாய்! அரசகுமாரியை அணுகியது குற்றமல்லவா? அணுகி அவளை – யாதுமறியாப் பேதையை மயக்கியது குற்றமல்லவா? காரிருளில் அவளைக் கட்டுக் காவல்களினின்றும் கடத்திச் சென்றது குற்றமல்லவா? அரச போகத்தில் ஆழ்ந்து அல்லல் என்பதே அணுவளவுமறியாத அரச குமாரியைப் பாழ்மண்டபத்தில் படுக்கச்செய்தது குற்றமல்லவா?... எது குற்றமல்லவென்கின்றாய்?

அம : நாங்கள் காதல் புரிந்தது தான் அரசே! எங்கள் காதல் குற்றமல்ல! காதல் குற்றமல்லவெனில் அதன் விளைவுகளும் குற்றமாகா! காதல் குற்றமென்று தாங்கள் கருதினால் அதன் விளைவுகளும் குற்றங்களாகவே படும்...

அர : போதும் நிறுத்து அமரா! நிலையறியாது பேசுகின்றாய்! வானத்து மீனுக்கு வன் தூண்டிலிட நினைத்தாய்! அது உன்னை இக்கதிக்கு உள்ளாக்கியது... பல பேசிப் பயனில்லை... என்னருமைக் கண்மணி உயிருடனிருந்து நீ அகப்பட்டிருந்தால் உன் குற்றம் மன்னிக்கக்கூடியதாக இருந்திருக்கும்... ஆனால் அவள் இன்று இல்லை. அவள் சாவுக்குக் காரணமாக நீ இருந்தனை. ஆகவே உனக்குக் கழுமரமே கதி! உனக்குக் கழுமரத் தண்டனை விதிக்கின்றேன். உன் கடைசி விருப்பம் – உயிர்ப் பிச்சையைத் தவிர – ஏதேனுமிருப்பின் உரைக்கலாம்.

அம : (கண்களில் நீர் வழிய) மன்றாதி மன்ன! உயிர்ப்பிச்சை தாங்கள் கொடுத்தாலும் எனக்கு வேண்டாம். காதலியைப் பிரிந்தபின் இக்கட்டையை வைத்துக் கொண்டு என்ன செய்வது? ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள் மகாராஜா! கழுமரத்தண்டனையை யான் அடைவதற்கு முன் சில நாட்களை எனக்குப் பிச்சையாகத் தர வேண்டுகின்றேன்... அந்நாட்களில் என் இதயக்காதலியின் என்னருமைக் கண்மணியின் உருவத்தை வாடா வசந்தம் போன்ற அவ்வெழில் மங்கையின் அற்புத உருவத்தை என் கரங்களாலே சிற்பத்தில் செதுக்க விரும்புகிறேன். இதற்குத் தங்கள் சம்மதம்......

அர : (துணுக்குற்று, திடீரென ஓடிச் சிற்பியை அணுகி ஆவேசத்துடன்) ஆஹா! என்ன சொன்னாய் சிற்பி! என் ஆவியைப் போன்ற அருமைப் புதல்வியை அரியதோர் சிற்பமாக்கப் போகின்றாயா? காலன் கவர்ந்து சென்றவளைக் கண்கள் காண விரும்பும் கன்னிகையாக்கப் போகின்றாயா? சொல் சிற்பி! உண்மையாகவா?

அம : (பணிவுடன்) ஆம் அரசே! அச்சிலை உங்களுக்கு அருகில் நிற்கும்போது அரசகுமாரி தானோ என அனைவரும் ஐயுற்று அதனை அடிபணியச் செய்யும் அரியதொரு சிற்பமாக அவ் வாரணங்கை உருவாக்கப் போகின்றேன்.

அர: அப்படியானால் சம்மதித்தேன் அமரா! சம்மதித்து விட்டேன்! சில நாட்கள் என்ன? எவ்வளவு நாட்கள் வேண்டுமாயினும் அளிக்கச் சித்தமாக இருக்கிறேன். உன் சிற்பத்தில் உலகிலுள்ள கலைகளின் அழகெல்லாம் சொட்டட்டும்; பண்ணிசைக்கும் கலைச் செல்வியின் பாவம் அவள் முகத்தில் தோன்றி ஒளிரட்டும்! கண்டார் காதலுறும்படி இருக்கட்டும் உன் சிலை! அமரா! உன்னிடம் கெஞ்சிக் கேட்கிறேன்.

அமை: (குறுக்கிட்டு) அரசே! இதென்ன? இது அரசசபை என்பதை மறந்து விட்டீரா? மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? ஏன் இவ்வளவு ஆவேசம்?

அர: அமைச்சரே! என் மகளைத் திரும்பிப் பெற்று விடுவேன்!... அமரா! இன்றே உன் வேலை ஆரம்பமாகட்டும்.

அம: உத்திரவு மகாப்பிரபோ! என் திறமை முழுதையும் கொண்டு அச்சிலையைச் செய்து முடிப்பேன்! அதன் ஒவ்வொரு அணுவிலும் ஜீவகளை சொட்டும் என் துயரமே எனக்குத் தூண்டுகோலாயிருந்து உதவும். வணக்கம்.

6

[ஒரு மாதம் கடந்தது. இரவும் பகலும் ஊணுறக்கம் மறந்து சிற்பி அமரன், கையும் உளியுமாக அமர்ந்து சிற்பத்தைச் செய்து முடித்து விட்டான். சிற்பத்தின் திரையை நீக்கும் வைபவம் இன்று நடக்கப் போகின்றது. ஊரை யடுத்த வெளியில் மக்கள் கூட்டமாகத் திரண்டு நிற்கின்றனர். மக்கள் கூட்டம் கடல் போல ஆரவாரம் செய்து கொண்டு நிற்கின்றது. சிற்பத்தின் மேல் சிவந்த திரை ஒன்று மூடப் பட்டிருக்கிறது. அமரன் கைகளில் விலங்கு பூட்டப்பட்டு சேவகன் காவல் செய்ய, சிற்பத்தின் அருகில் நிற்கையில்...........]

சேவகன்: (மற்றவனைப் பார்த்து) ஏன் அரசர் இன்னும் வரவில்லை? சிலையைக் காணத் துடிதுடித்துக் கொண்டிருந்தாரே!

மற்றவன்: வந்துவிடுவார்! அதோ நம் சேனாதிபதி வீரசேனர் வருகின்றார்.

கூட்டம்: வீரசேனர் வாழ்க!

வீர: மக்களே! அமைதியாக இருங்கள். இறந்த உங்கள் இளவரசியை இப்போது காணப் போகிறீர்கள். சிறிதாவது பய பக்தியுடன் நடந்து கொள்ளுங்கள். அதோ அரசரும் அமைச்சரும் வந்து கொண்டிருக்கின்றனர்.

[அமைச்சர் பின் தொடர அரசர் வருகின்றார்]

சேவ: ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட கலிங்க மன்னர் பராக்! பராக்!!

கூட்டம்: மன்னர் வாழ்க! அமைச்சர் வாழ்க!

[கூட்டத்தின் ஆர்ப்பரிப்புச் சற்றே அடங்குகிறது]

அரசர் : குடிகளே! காலன் வாய்ப் பட்ட உங்கள் இளவரசியைக் கண்ணாரக் காணும்படி இச் சிற்பத்தின் திரையை அகற்றும் படி சிற்பியை உங்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன். காவலா! விலங்கை அகற்று! சிற்பி! திரையை நீக்கு!

அம: தங்கள் சித்தப்படி ஆகட் டும்!

[திரை விலகுகிறது!.......... ஆஹ்ஹா! இதென்ன? அதுயார்! இளவரசிதானா? ஆனால் கண்கள் இமைக்கவில்லை! கற்சிலையா அது? அல்லது கன்னிகையே தானா? அற் புதம் அற்புதம்! இளவரசி ஒரு கையில் வீணையேந்தி இன்னொரு கையில் ஓலைச்சுவடியுடன் வீற்றி ருப்பது கலை மகளை நினைப்பூட்டு கிறதே! அரசர் சொக்கிப் போகி ரார் அதனெழிலில். திரைவிலகி யதும் அன்பு பெருக மனமுருக ஓடிப்போய், "மிருணா! என் கண்ணே! என் அமுதே! என் உயிரே!" என்று அழைத்து அச் சிலையை மெய்யாரத் தழுவிக் கொள்கிறார். சிலையின் கையிலி ருந்து ஓலை கீழே விழுகிறது. அர சர் அதைக் கவனியாமல் சிலையின் அழகினைப் பருகிய வண்ணமுள் ளார். குடி மக்கள் பேசிக் கொள் கின்றனர்.]

ஒருவர் : ஆஹா! அற்புதம் அற்பு தம்! அழகே அழகு! கலையே கலை! இளவரசியாரே உயிரெ டுத்து வந்தது போல இருக்கின் றதே!

புதிதாய் வந்த அன்னிய நாட்டி னன் ஒருவன்: ஐயா! இங்கு ஏதோ சிலையின் திறப்பு விழா என்று சொன்னார்களே! சிலை யையும் காணோம் ஒன்றும் காணோமே!

குடிகளில் ஒருவன் : என்ன ஐயா அது? கபோதியா நீர்! அதோ பாருமையா சிலையை! நன்றாகத் தெரிகிறதே!

அன்னியன் : எங்கே ஐயா! அது அரசர். அருகில் இளவரசியார் வீணையோடு இருக்கிறார்! அவரு க்கருகில் அமைச்சர்! சிலையைக் காணோம்!

குடி : அடபோமையா! அவ்விள வரசி தான் சிலை!

அன் : (ஆச்சரியம் தாங்க முடியா மல்) ஆ! உண்மையாகவா! இளவரசியாகத் தோன்றுவது சிலையா! அப்படியானால் இள வரசி எங்கே?

குடி : அம்மையார் பாம்பு கடித்து பரலோக மடைந்தார்.

அன் : சிவ சிவ! இது என்ன கொடிய செய்தி?...... சிலை சிலையாகவே தோன்ற வில் லையே! என்ன கலை! என்ன அழகு! என்ன பாவம்! என்ன நளினம்.

குடி : சரிதான் ஐயா! அதோ! அரசர் சிற்பியுடன் பேசுகிறார், என்ன வென்று கேட்போம்.

அர : சிற்பி! உனக்கென்ன கைம் மாறு செய்யப் போகிறேன்! என் மிருணா புனர் ஜன்மம் எடுத்து வந்து விட்டாள்; நீயே உண்மைக் கலைஞன். (சிற்பி யைக் கட்டித் தழுவுகிறார்)

அம : (விழிநீர் பெருக) அரசே! என் உயிரைக் கொடுத்துச் சிலை யைச் செய்து வெற்றி பெற் றேன். ஆனால் அச் சிலையினுள் உயிரைத் தான் என்னால் வைக்க முடியவில்லை! அஃதிருக்கட்டும்

அரசே! இளவரசியாரின் கை யிலிருந்த ஓலைச் சுவடி கீழே விழுந்து விட்டது. இதோ! என்ன வென்று படியுங்கள்.

அர: (படிக்கிறார்) 'அருமைத் தந்தையே! இதோ நான் மறு படியும் வந்து விட்டேன். கவலையில் மூழ்கிக் கடமையைத் தவற வேண்டாம். அசோகர் படையெடுத்து வருகிறார். மக்களை அடிமைப் படுத்தி விடாதீர்கள். அசோகர் உம்மை வென்று என்னைக் கொண்டு போய் விட்டால் அதைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா? ஆர்த்தெழுங்கள் அமருக்கு! சேனைகளைச் சித்தம் செய்து ஜெய பேரிகை கொட்டுங்கள். வெற்றி யெட்டுத்திக்கும் எட்ட முரசம் கொட்டுங்கள்!'

அர: ஆஹா! என் அருமை மிருணா! என் கண்களைத் திறந்து விட்டாய்! இதோ எழுகிறேன் சண்டைக்கு! எனக்கு ஆண்மையூட்டும் அன்னமே! வெற்றிக்கொடி நாட்டுகிறேன். வீரசேனரே! சேனைகள் சித்தமாகட்டும்! சிற்பி! என் மகளை எனக்குத் திருப்பித் தந்த உனக்கு நான் கைமாறு என்ன செய்யப் போகிறேன். உன் தண்டனையை நீக்கி உனக்கு விடுதலை அளிப்பதைத் தவிர வேறு எதுவும் என்னால் இயலாது. போய்வா!

அம: அரசே! நன்றி! தங்களுக்கு வெற்றியுண்டாகப் பிரார்த்திக்கின்றேன். (அமைச்சரை நோக்கி) அமைச்சரே! நீர் சொல்லிக் கொடுத்த இரகசியத்தால் பெரியதொரு கடமையைச் செய்து முடித்தேன். என் குருதேவர் கூறிய கடமையும் இது தான் போலும்! இவ்வுலகில் என் வேலை முடிந்தது இனி என் குருவை நாடிச் செல்கிறேன்...... மங்களம் பொங்குக! பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

★

இதயம்

முட்டாளின் இதயம் அவன் வாயைப் பொறுத்தது; புத்திசாலியின் வாய், அவனுடைய இதயத்தில் இருக்கிறது.

— பிராங்லின் —

பிச்சைக்காரி

[வி. கிருஷ்ணன்]

பெண்கள் முன்னேற்றம், பெண்கள் சமத்துவம், பெண்கள் கல்வி, பெண்கள் ஐக்கியம் என்று மேடைகளில் சர மாறியாகப் பேசித் தள்ளும் சீர்திருத்தக்காரர்கள் அந்தப் பிச்சைக்காரியைக் கண்டு ஏன் அனுதாபப் பட வில்லை? அவர்கள் அனுதாபப் படுவதற்குக் கூடத் தகுதியற்றவளா அவள்?........

ஆமாம், அவள் சைனு பஜாரில் சுற்றித் திரியும் தரித்திரமே உருவாகக் கொண்ட பிச்சைக்காரி தான். சென்னை பட்டினத்திலே — நாகரீக மக்கள் நடமாடித் திரியும் வீதியிலே அலைந்து பெரிய மனிதர்களால் வெறுக்கப் படும் சைனு பஜார் பிச்சைக்காரியைப் பற்றின கதை தான் இது!

அவள் வாயால் அரை குறையாகக் கூறியவற்றை நன்ருக உங்களுக்கு விளங்கும்படி கூறுகிறேன்.

அவள் பிறக்கும் போது அவளுடைய பெற்றோர்கள் எங்கேயோ ஓடிப் போய் விட்டார்களாம். அவளுக்கு நினைவு தெரிந்த போது தன் அப்பா அம்மா யார் என்றே தெரியாதாம். அவர்கள் போகும் போது அவளை யாரோ முன் பின் தெரியாத ஒருவரிடம் வளர்க்கும் பொறுப்பை ஒப்புவித்து விட்டு சுதந்திரமாகப் போய் விட்டார்கள் போலிருக்கிறது. அவளை வளர்த்தவர்களாவது நன்ருக கவனித்தார்களா? அதுவும் இல்லை. ஒரு நாள் அவள் வெளியில் சுற்றி விட்டு தன் குடிசைக்குத் திரும்பி வந்த போது அந்தக் குடிசை பூட்டப்பட்டிருந்தது. அடுத்த குடிசையில் விசாரித்தாளாம். அதற்கு அந்தக் குடிசைக்காரர் — அவுங்க பெரிய கடன் காரர் ஆகிவிட்டாங்க. கடனைக் குடுக்க முடியாததினுலே திடீரென எங்கேயோ தன் சொந்த ஊருக்குப் போகப் போறேன்னு சொல்லிப் பிட்டு போயிட்டாங்க. உன்னைப் பத்தி ஒண்ணும் சொல்லலே — என்று சொன்ஞராம். இதைக் கேட்ட உடனே அவளுக்கு நெஞ்சு பகீர் என்று இருந்ததாம். பிறகு தைரியமாக பூட்டை உடைத்து குடிசையில் நுழைந்தாளாம். அந்தக் குடிசையில் ஒன்றுமேயில்லையாம். அடுப்புக்குப் பக்கத்தில் தண்ணீர்ப் பானை ஒன்று தான் அவர்கள் அந்தக் குடிசையில் விட்டு விட்டுப் போன சொத்தாம். பாவம் அவள் சிறுமி. அதோடு பசி வேறு கொன்று தின்னும் வேளை. குடிசையிலோ ஒன்றுமில்லை. அவளுக்கு ஒன்றுமே தோன்ற வில்லையாம் அந்த சமயத்தில். பக்கத்து குடிசைக்காரரிடம் போய்க்

கெஞ்சி அரை வயிற்றுக் கஞ்சி வாங்கிக் குடித்தாளாம்.

இரவு 10 மணியிருக்குமாம். இரண்டு பெரிய முரட்டு ஆத்மாக்கள் அந்தக் குடிசைக்குள் நுழைந்து அந்தச் சிறுமியை மிரட்டி — 'உன் அப்பா அம்மாவெங்கே? சொல்லு — சொல்லாவிட்டால் போலீசிலே ஒப்புவிச்சு விடுவோம். அவுங்க ஓடின இடத்தைச் சொல்லு' என்று கேட்டார்களாம். பாவம்! அவளுக்கு என்ன தெரியும்? தன்னை வளர்த்தவர்கள் ஓடிப்போன இடத்தைப் பற்றி அவள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அந்த முரடர்கள் விடவில்லையாம். பிறகு அடுத்த குடிசைக்காரர் வந்து நடந்த விவரங்களை சொன்னதும் தான் அவளை விட்டார்களாம். பிறகு அந்தக் குடிசையைவிட்டு அவளைத் துரத்திவிட்டு அவர்களே தங்கள் குடிசையாக ஆக்கிக் கொண்டார்களாம். கடன் கொடுக்க வேண்டியவர்கள் ஓடி விட்டால் கடன் கொடுத்தவர்கள் சும்மா விட்டு விடுவார்களா? ஆகவே அச்சிறு குடிசையை அவர்களே எடுத்துக் கொண்டதில் தவறு ஒன்றும் இல்லை அல்லவா? அந்தச் சிறுமி அடுத்த குடிசைக்காரர் தயவில் ஒரு வருடம் இருந்தாளாம். அந்தக் குடிசைக்காரர் வேர்க்கடலை வியாபாரம் பண்ணுகிறவர். ஆகவே அவர் இவளை தன் கீழ் வேலைக்கு அமர்த்திக் கொண்டு — தன்னுடைய வேலைகளைச் செய்யும் பணியாளாகவே வைத்துக் கொண்டார். ஆனால் சம்பளம் தான் ஒன்றுமில்லை. சாப்பாடு தான் போட்டார். அவளும் அதற்கு சம்மதித்தாளாம், வேறு திக்கில்லையே என்று.

தினமும் பிளாட் பாரத்தில் ஓதுப் புறமாக இருந்து வேர்க்கடலை வியாபாரம் பண்ணி வந்தாளாம் அவள். ஒரு நாள் அவள் அழகைப் பருகிய ஒரு போலீஸ்காரன் அவளிடம் வந்து "ஏ பொம்பளை, உனக்கு ஏன் இந்த உத்தியோகம்? உன்னுடைய அழகுக்கும் வயசுக்கும் நீ இப்படி தனியே குந்திக்கிட்டிருக்கலாமா? நீ என்னுடன் வந்துடு. நன்னு வச்சுக்கரேன் நான். நல்ல புடவை வாங்கித் தாரேன்" என்றானாம்.

அவளுக்கானால் ஒரே பயமாய்ப் போய் விட்டதாம். அப்போது நெஞ்சு பக் பக் என்று அடித்துக் கொண்டதாம். உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டி விட்டதாம். நடுங்கினாளாம். இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "போய்யா போ, உனக்கு வேறு வேலை கீலை இல்லே. தனியே முன் பின் அறியாத வேத்து மனுஷி கிட்டே என்னய்யா பேச்சு" என்றாளாம். அதற்கு அவன் — "அடியே குட்டி, என் பேச்சை கேக்காட்டி அப்புறம் என்னைகும் தெரியுமா? ஜாக்கிரதை. நாளைக்கு நான் வருவேன். சம்மதிக்காட்டா இன்ஸ்பெக்டர் ஐயா கிட்டே பிடுச்சுக் கொடுத்துடுவேன் தெரியுமா?" என்று எச்சரித்துக் கொண்டே அவள் வைத்திருந்த வேர்க்கடலைக் குவியலிலிருந்து அஞ்சு ஆறு கடலையை எடுத்துக் கொரித்துக் கொண்டே போனானும்.

மறு நாள் அந்த இடமே வேண்டாமென்று வேறு டிவிஷனிலே போய் விற்றுக் கொண்டிருந்தாளாம். அங்கேயும் எப்படியோ தெரிந்து கொண்டு அதே போலீஸ்காரன் வந்தானும். அவள் உயிரே அவளிடம் இல்லையாம். அப்போது என்னடா செய்வது என்று தயங்

கிக் கொண்டிருக்கும் வேளையில் அவன் நெருங்கி — ஏ பொம்பிளே சம்மதம் தானே? இன்னைக்கு என்னை ஏமாத்திப்பிடலாம்னு எண்ணமோ உனக்கு? எனக்குத் தெரியும்டீ உன் சமாஜாரமெல்லாம். எல்லாத்தையும் நா அறிஞ்சுண்டுட்டேன். சரி சீக்கிரம் சொல்லு சம்மதம் என்று — கேட்டவுடன் அவள் உடம்பெல்லாம் ஒரே அக்னிமயமாய் இருந்ததாம். கோபம் பொத்துக் கொண்டு வந்ததாம்.

"உன் பேச்சுக்கெல்லாம் மசியற ஆளு நான் இல்லே — போயிட்டு வாய்யா போ — உன்னைப் போல நூறு ஆளு பாத்திருக்கேன் — என்னமோ போலீஸ்காரன்னு மரியாதை பார்த்தா என்னென்னமோ வந்து உளர்றீயே. சரித்தான் அய்யா போ இந்த இடத்தை வுட்டு. இனிமே எங்கிட்டே வந்து பொம்பிளே, கிம்பிளேன்னு வாயைக் காட்டினா அவ்வளவு தான். நீ உயிரோடேயே இருக்கமாட்டே. தெரிஞ்சுதா. நடையைக் கட்டு ஹூம்" என்று சொன்னதுதான் தாமதம் உடனே அவன் அவளுடைய வேர்க்கடலையை யெல்லாம் பிடுங்கிக் கொண்டு 'வா ஸ்டேஷனுக்கு' என்று சொல்லி அவளை ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றனும். என்ன அக்ரமம். ஒன்றுமறியாத கிரபராதியான அவளை, பலவந்தமாக வந்த அவனே, தன் காரியம் கை கூடாததால் அவளைக் குற்றவாளியாக்கி கொடுமைக்கு ஆளாக்குகிறன். என்ன அதிகாரிகளின் ஊழல் ராஜ்ய பாரம்!

எங்கேயோ ஒதுப்புறமாக வைத்து விற்றுக் கொண்டிருந்தவளைப் பிடித்து வந்து — இவள் பொது இடத்திலே வைத்து 'பப்ளிக் நியூசென்ஸ்' ஸாக பொது ஜனங்களுக்கு இடஞ்சலாக விற்றுக் கொண்டிருந்தாள் என்று இன்ஸ்பெக்டர் கிட்டே சொன்னனும் அந்தப் போலீஸ்கார அக்கிரமக்காரன். அவள் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாளாம். அழுதாளாம். பெரிய இடத்திலே அவள் சொல்லையா நம்புவார்கள்? ரொம்பவும் அழுது கெஞ்சினதால் அவளை விட்டு விட்டார்களாம்! ஆனல் அவளுடைய வேர்க்கடலையை யெல்லாம் அவர்களே வைத்துக் கொண்டு விட்டார்களாம். விசாரித்ததில் அவள் பண்ணின பெரிய குற்றத்திற்காக அந்த சாமானை அவர்களே வைத்துக் கொண்டு விட்டார்களாம். எப்படியிருக்கிறது நியாயம்? எப்படியிருக்கிறது போலீஸ் இலாகாவின் விசாரணை? எப்படியிருக்கிறது போலீஸ் இலாகாவின் பொதுஜன சேவை? எப்படியிருக்கிறது அதிகாரிகளின் தேசத் தொண்டு?

பிறகு அவளால் என்ன செய்ய முடியும்? அழுது புலம்பிய வண்ணம் அந்தக் குடிசைக்காரரிடம் நடந்த விஷயத்தைச் சொன்னள். அதற்கு அந்தப் பாவி மனுஷன் அவளைக் கடிந்து கொண்டு இனிமேல் அவள் வேலைக்கே வேண்டாம் என்று சொல்லி வெளியிலே நிர்க்கதியாக அனுப்பி விட்டானும். என்னே அவள் கடுமையான பாதை?

நல்ல குறு குறுப்பான பார்வையும், எடுப்பான சரீரமும், கவர்ச்சியான அங்க அமைப்புகளும் கொண்ட அவளை யார் தான் பார்த்தால் சும்மா விட்டு விடுவார்கள். அவள் எங்கே வேலைக்குப் போனலும் அங்கே ஒரு சனியன் காத்துக் கொண்டிருக்கும். ஒரு நாள் எங்கேயோ காண்ட்

டிராக்ட் வேலையிலே மேஸ்திரியிடம் கெஞ்சி மூன்று நாள் வேலை பார்த்தாளாம். அங்கேயும் ஆபத்து வரவே அதையும் விட்டு விட்டாளாம். காரணம்: நல்ல ஒழுக்கத்துடனும் சீலத்துடனும் இருக்க வேண்டும் என்று அவளுடைய இளம் உள்ளத்திலே ஆழமாகப் பதிந்தது தான். எங்கே போனாலும் அவளுடைய அழகைக் கண்டு யாராவது தொந்தரவு கொடுக்க வந்தால் எப்படி அவள் நிம்மதியாக வேலை செய்ய முடியும்? எப்படிச் சுகமாக வாழ முடியும்?

அவள் தனக்குள்ளேயே நினைத்து நினைத்து அழுது கலங்குவாளாம்; பொம்பிளைங்களெல்லாம் நல்லா லெட்சணமா பொறந்துட்டா எப்பவுமே பயந்தான் போலிருக்கு. ஆம்பிள்ளைங்களெல்லாம் எந்த விதமாகவும் அக்ரமங்க செய்யலாம்னு கடவுள் சொல்லியிருக்காரா என்ன? நான் என்னத்தைச் செய்யறது? அழகா பொறந்து வளந்தது என் தப்பா? நான் அழகாக இருக்கிற தோஷத்தினலே தன்னந் தனியே இந்த ஒலகத்திலே சுதந்திரமாக் கூட வாழவே முடியாது போல இருக்கே. அப்படீன்ன ஒழுக்கங் கெட்ட நாரப்பிணமாகத் தான் இந்த உலகத்திலே சுத்தி வரணும் என்று என் தலையில் எழுதியிருக்கோ. அட ஈஸ்வரா! என்னை அழகாகவும் படைத்து — நாதியற்ற அநாதையாகவும் ஏன் சிருஷ்டித்தாய்? வஞ்சனையும், சூதும், ஏமாற்றுதலும் நிறைந்த இந்த உலகத்திலே நான் — எப்படி அழகு என்ற விஷத்தை வைத்துக் கொண்டு தனியே நடமாட முடியும்? என்றெல்லாம் நினைத்து நினைத்து நெஞ்சு புண்ணுகப் போய் விட்டதாம்.

என்ன செய்வாள் பாவம். ஒன்றும் வகை தெரியாமல் திண்டாடினளாம். அரை வயிறு கால் வயிறு உண்டாலும் பரவாயில்லை; வயிற்றுப் பிழைப்புக்காக தன்னையே அடமானம் வைத்து வாழ அவள் விரும்பவில்லை. பிச்சை எடுத்தாலும் கௌரவமாகவே வாழ விரும்பினள் அவள். இந்த எண்ணம் முளைத்தது முதல் அவள் பிச்சைக்காரியாக மாறினளாம். பட்டணத்திலே அரை நிர்வாண மாக ஏழெட்டு மாதமாகக் காணும் அந்தப் பிச்சைக்காரியை அநேகமாக பலர் பார்த்திருக்கலாம். ஒட்டி உலர்ந்த கன்னங்களையும், தூசி நிறைந்த உடலையும் கண்ட யாரும் அவளை இப்போது ஏறிட்டு கூட பார்ப்பதில்லை. இளமை முறுக்கேறிய அவளது அங்கங்கள் மட்டும் தன் இயற்கையான முறைப்படி பார்ப்பவர்களது கவனங்களை இழுக்கும்படியாக வளர்ந்து பிச்சைக்காரியானுலும் அவளும் இயற்கை நியதிலிருந்து தப்ப முடியாது என்பதை எடுத்துக் காட்டியது. அவளது அழகிய மேனியை மறைக்க ஒரு கிழிசல் துணி கூட பெரிய பெரிய மனிதர்கள் வாழும் இந்தப் பட்டணத்தில் இல்லை என்ருல் ஓங்கி உயர்ந்த நம் பழந் தமிழ்நாட்டின் பெருமை யெல்லாம் எங்கேயோ மூலையில் குழி வெட்டிப் புதைக்கப் பட்டு விட்டது என்று தான் சொல்ல வேணும்.

வித விதமான வர்ணச் சேலைகளைக் கட்டிக் கொண்டு பார்ப்பவர்கள் மனதை இழுக்கும்படியாக — பட்டணத்து வீதிகளிலே — நாலு பேர் உராய்ந்து செல்லும் முச்சந்திகளிலே உல்லாசமாக நடந்து செல்லும் நாரீமணிகளில் எவளாவது இந்தப் பிச்சைக்காரியை ஏறிட்டுப் பார்த்தாளா?

பெண்கள் முன்னேற்றம், பெண்கள் சமத்துவம், பெண்கள் கல்வி, பெண்கள் ஐக்கியம் என்று மேடைகளிலும் — சங்கங்களிலும் சரமாறியாகப் பேசித் தள்ளும் அந்த சீர்திருத்தக் காரர்களாவது இந்தப் பிச்சைக் காரியைக் கண்டு அனுதாபப் பட்டார்களா?

இப்படியெல்லாம் நினைத்தால் இன்று என் நம் நாடு வறுமையிலும், பஞ்சத்திலும், கொலை பாதகத்திலும் அமுங்கிக் கிடக்கின்றது?

பிச்சைக்காரியாயிருந்தாலும் சரி, பிச்சைக்காரனுகயிருந்தாலும் சரி அவர்களெல்லோரும் யார்? நம்மைப் போன்ற மனிதப் பிறவி யெடுத்தவர்கள் — தானே? பிச்சை யெடுப்பதற்குக் காரண பூதர்கள் நம் சமூகமும், சர்க்காரும் தான் அல்லவா?

அந்த சைனுபஜார் பிச்சைக்காரியைத் தான் நான் துணிந்து என் வீட்டு வேலைக்காரியாக வைத்துக் கொண்டேன். அவளும் நம் சமூகத்தில் வாழப் பிறந்தவள் தான் என்பதை உளுத்துப் போன நம் சமூகம் நம்ப வைத்து — புரட்சிகரமான இந்தச் செயலை நாமே செய்து காட்டிவிடுவோமே என்று நினைத்துத் தான் அவளை என் வீட்டிலேயே வேலைக்கு வைத்துக் கொண்டேன். பக்கத்து வீட்டுக்காரர்களும், என் நண்பர்களும் என்னை ஏசினுர்கள்.

"போயும் போயும் ஒரு அனுதை பிச்சைக்காரியைப் போய் வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிருனே உன் அண்ணு, அவன் மூளையை சீமைக்குத்தான் அனுப்ப வேண்டும். அவள் ஏதாவது நாளைக்கு சாமானைக் கீமானை தூக்கிக் கொண்டு ஓடினுல் அப்போ தெரியும் பிள்ளை சமத்து? " என்று என் தங்கையையும் என் காரணமாக இடித்துக் கூற ஆரம்பித்தனர்.

யார் எப்படிச் சொன்ன போதிலும் நான் ஒன்றும் பயப்படவேயில்லை. அந்தப் பிச்சைக்காரி என் வீட்டின் வேலைக்காரி சிவகாமுவாக மாறி விட்டாள். என் தங்கையின் அபிமானத்தையும் அபாரமாகப் பெற்றுக் கொண்டாள்.

அவள் வேலைக்கு வந்து இரண்டரை வருஷங்களாயிற்று. அவள் எங்கள் குடும்பத்திலேயே ஒருவளாக இருந்து வந்தாள். எங்களைக் குறை கூறினவர்கள் — இப்போது ஆச்சரியப்பட்டார்கள். அவள் தன் வாயால் முனகிக் கொண்டே பாடி — வீட்டுக்காரியங்களைச் செய்யும் அழகைச் சதா பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் தோன்றும். ஏற்கெனவே நல்ல அழகு. அதோடு கூட இப்போது நன்ருகவும் வேலை செய்கிருள். நன்ருகவும் சாப்பிடுகிருளாகையால் அவள் தேகம் செழித்து வளர்ந்து பருவ கால மங்கையாகி ஜெகஜ் ஜோதியாகத் திகழ்ந்தாள்.

அவளுக்கும் ஒரு கல்யாணத்தைக் கட்டிப் போட்டு விட்டால் ஊரார் கண்களுக்குப் பயப்பட வேண்டாம் என்று நினைத்து அவளுக்குத் தகுந்த கணவனுகத் தேடினேன்.

ஒரு வாரத்திற்கு முன் மூர் மார்க்கெட்டிலே ஒரு சாமான் வாங்கிவர என் தங்கை மூர் மார்க்கெட்டுக்கு அனுப்பியிருந்தாளாம் சிவகாமுவை. அவள் மூர் மார்க்கெட்டுக்குள் நுழைந்து சுற்றிக் கொண்டு வரும்போது அவள் கையைப் பிடித்து ஒரு

ஆத்மா இழுத்ததாம். அவள் திடுக்கிட்டுப் போய் திரும்பி பார்த்தால் — முன்பு தன் வேலே போனதற்கு காரணமாக இருந்த அந்த அக்ரமக்காரனை போலீஸ் காரன் — வேறு உடையில் நின்று கொண்டிருந்ததைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டதாம் அவளுக்கு. உடனே தூர ஒதுங்கி நின்று கொண்டு 'இங்கேயும் வந்து தொலேஞ்சியா சனி. போ போ' என்ருளாம். அதற்கு அவன் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு — சிவகாமு, நான் என் தவறை உணர்ந்து என்னேயே நொந்து கொண்டேன். அநியாயமாக ஒரு பெண்ணேத் துர் எண்ணமாக நினேத்ததுமல்லாமல், அவள் பிழைப்புக்கே உலே வைத்து விட்டோமே. என்ன பாதகம் செய்து விட்டோம் என்று எண்ணி எண்ணி ஏங்கி தவித்துக் கொண்டு பகவானிடம் மன்னிப்புக் கோரினேன். நிரபராதியான உன்னேக் குற்றவாளி என்று காட்டிக் கொடுத்தேனே பாவி அன்று — அதற்குப் பலன் உடனே கிட்டி விட்டது. மூணு மாசத்துக்கு முந்தி நானே ஒரு கேஸில் அகப்பட்டுக் கொண்டு வேலேயிலிருந்தே நீக்கப்பட்டேன். அப்புறமாக இதே மூர் மார்க்கெட்டிலே கடை வைத்து வியாபாரம் செய்கிறேன். அதன் பிறகு உன்னேக் காணவே யில்லே. என்ருவது ஒரு நாள் உன்னேக்கண்டு உன்னிடம் மன்னிப்பைப் பெற வேணும் என்று நினேத்துக் காத்துக் கிடந்தேன். அது இன்று கிட்டியது. என்னே மன்னித்து விடு – என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டானும்.

அதற்கு அவள் அவனே மனப்பூர்வமாக மன்னித்து முன்பு நடந்த செயல்களேயும் மறந்து விடுவதாகச் சொன்னுளாம்!

அந்த மாஜி போலீஸ்காரனுடைய முகம் மலர்ந்து விட்டதாம். சிவகாமுவின் மன்னிப்பைப் பெற்றவுடனே, 'இப்போதாவது என்னேக்கட்டிக்க உனக்கு ஆசை தானு?' என்ருனும் அவன். இதைக் கேட்ட சிவகாமுவுக்கும் ஏகப்பட்ட நாணம் உண்டாகி தலே குனிந்து விட்டாளாம். வாயிலிருந்து இரண்டு வார்த்தைகள் வெளிவர மறுத்து விட்டதாம். 'எதற்கும் நாளே வந்து சொல்கிறேன்' என்று சொல்லி விட்டு வீட்டிற்கு வந்து விட்டாளாம்.

அன்றிரவு பூராவும் இதைப் பற்றியே தான் நினேவாக இருந்து ஒரு முடிவுக்கு வந்தாளாம். "எத்தனே நாள்தான் இப்படித் தனியே இருந்து வாழறது? யாரையாவது ஒருவரைக் கட்டிக்கிட்டு குடியும் குடுத்தனமுமா இருக்கறதுதான் தேவலே. அதற்கு ஏற்ருற் போல் இப்போது அந்தஆளே வந்து மறுபடியும் ஆசையுடன் கேக்கருரு. அந்த ஆளும் வாட்ட சாட்டமாக களேயோடு தான் இருக்கருரு. நல்லாவும் சம்பாரிக்கராறு. வேறே என்ன வேணும்" என்ற முடிவுக்கு வந்தவளாய் மறு நாள் காலே மூர் மார்க்கெட்டுக்குப் போனுளாம்.

அங்கே இவளே எதிர் பார்த்துக் கொண்டிருந்த அந்த மாஜி போலீஸ் காரன் அவள் வந்தவுடன் அபார மகிழ்ச்சியுடனும், தீராத ஆவலுடனும் 'என்ன சம்மதந்தானே புள்ளே?' என்று கேட்டானும்.

அந்த சமயத்தில் சிவகாமுவுக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லேயாம். வெட்கம் பிடுங்கித் தின்றதாம்! ஒரு வழியாக 'உங்க சம்மதமே என் சம்மதம்' என்று

கூறி முகத்தைப் புதைத்துக் கொண்டாளாம்.

பிச்சைக் காரியாயிருந்து பின் வேலைக்காரியாக மாறின சிவகாமுவின் இயற்கை அழகைக் கண்டவர்கள் அவளை ஒரு கணம் பாராமல் திரும்பிப் போக மாட்டார்கள். அப்படிப் பட்டவளை அடையும் அந்த மாஜி போலீஸ் காரனுடைய பாக்யமே பாக்யம் என்று போலீஸ்காரனுயிருந்து இப்போது மூர் மார்க்கெட்டில் சிறு கடை வைத்திருக்கும் தங்கவேலுவினுடைய வீட்டிலே சிலர் பேசிக்கொண்டது அவள் காதில் விழுந்ததாம். சிவகாமுவை உடனே அவன் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போனனம். அவன் தன் மாமாவின் வீட்டிலே தான் இருக்கிறுனம். அவர் தான் கடை வைத்துக் கொடுத்தாராம் மூர் மார்க்கெட்டிலே.

தங்கவேலுவினுடைய மாமா சிவகாமுவைப் பார்த்ததுமே உள்ளம் குளிர்ந்து — மன மகிழ்ந்து – அவளை அன்போடு வரவேற்று உபசரிக்கத் தொடங்கி விட்டாராம். அவருடைய மனைவி சில வருஷங்களுக்கு முன் பர்மாவில் இருக்கும் போது இறந்து போய் விட்டாளாம். பிறகு அவர் தனியே சென்னைக்கு திரும்ப நேரிட்டதாம். அவருக்கு குழந்தைகள் இல்லாததால் தன் தள்ளாத வயதில் தன் மருமானை தங்கவேலுவைத் தன்னுடனேயே வைத்துக் காப்பாற்றி வருகிறுராம்.

பிறகு சிவகாமுவின் வரலாற்றைக் கேட்டாராம். அவளும் தன் வரலாற்றை ஒன்றையும் விடாமல், ஒளிக்காமல் கூறினளாம்.

ஒரு காலத்தில் பிச்சைக்காரியாக வாழ்ந்தது முதல் இப்போது உழைப்பாளியாகக் காலந்தள்ளும் வரை கூறியதைக் கேட்ட அவருடைய முகம் கறுத்ததாம். எதையோ யோசிப்பவர் போல் இருந்து விட்டு ஒரு கேள்வியைக் கேட்டாராம்; உன்னை வளர்த்தவங்க பேரு என்ன? என்பது தான்; அதற்கு அவள் ‘காத்தான்’ன்னு சொல்லிக்கிட்டாங்க! என்றுள். அவ்வளவு தான் அந்த கிழவர் சிவகாமுவை அவளுடைய முதுகைக் காட்டச் சொல்லி இரண்டு மச்சம் இருப்பதை அறிந்து கொண்டு — ஒரே ஆனந்தக் கண்ணீர் விட்டுக்கொண்டே ‘அம்மா சிவகாமு நீ வேறு யாருமல்ல. என்னுடைய அருமை மகள் தான். நான் போகும் போது உன்னைக் குழந்தையிலேயே காத்தான் என்பவனிடம் தான் விட்டு விட்டுப் போனேன். பகவான் கருணையால் இப்போது உன்னை உயிருடன் பார்க்கிறேன். பார்த்தது மட்டுமில்லாமல் உன்னை முறைப்படி உன் அத்தான் தங்கவேலுக்கே கட்டிக் கொடுத்து— என்றென்றும் சுகமாகவும், சந்தோஷமாகவும் வாழ வைத்துக் காணவும் போகிறேன். நான் உன்னை அனுதையாக யாரிடமோ விட்டுட்டுப் போனதற்கு பிராயச்சித்தமாக நான் சம்பாதித்த அவ்வளவு பொருளையும் நீயும், தங்கவேலுவுமே எடுத்துக் கொண்டு சந்தோஷமாக இருங்கள். — என்று ஆனந்தம் ததும்பச் சொன்னர்

கடைசியில் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு தான் என்னிடம் வந்து சேர்ந்தாள். ஒரு வாரத்தில் தங்கவேலுவால் அவள் கழுத்தில் தாலி கட்டப் பட்டது.

★

பர்ப்பர் கதை:

சுதந்திர வாழ்வு

'தேவிகா'

கண்ணனுக்கு நான்கு வயதிருக்கும் பொழுது அவனுடைய தந்தை இறந்து விட்டார்; தாய் மட்டும் உயிரோடிருந்தாள். அவள் பல இடங்களில் கூலி வேலை செய்து மகனைப் படிக்க வைத்துக் கொண்டிருந்தாள். கண்ணனும் தன் ஏழ்மை நிலையை உணர்ந்து காலத்தை வீணாக்காமல் நன்றாகப் படித்து வந்தான். எட்டாவது படித்துக் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று அவன் தாயும் இறந்து விட்டாள். அப்பொழுது அவன் அடைந்த துக்கத்திற்கு எல்லையில்லை!

ஆதரவற்ற கொடி போற் கிடக்கும் அவன் நிலையைக் கண்ட அவனுடைய தூர பந்துவான ஒரு மாமன், கண்ணன் மேலும் தொடர்ந்து படிக்க வேண்டிய உதவி செய்துவந்தார். கண்ணனும் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினான். மீண்டும் படிப்பதற்கு மாமனிடம் போதிய பணமில்லை. ஆக, படிப்பை நிறுத்தி விட்டு மாமனுக்கு வேண்டிய உதவி புரிந்து கொண்டிருந்தான். அத்தைக்கு இவனிருப்பது பிடிக்கவில்லை! வீட்டை விட்டு வெளியேற்ற கணவனுடன் அடிக்கடி சச்சரவு செய்து கொண்டிருந்தாள். மாமனுக்கு தன்னால் கஷ்டம் வேண்டாம் என்று கண்ணன் வீட்டை விட்டு வெளி வந்து விட்டான்.

அதிர்ஷ்ட வசமாக ஒரு மளிகைக் கடையில் சொற்ப சம்பளத்திற்கு குமஸ்தா வேலை கிடைத்தது கடைப் பாக்கிகளை வசூல் செய்ய கண்ணன் சுற்றுப்புறமுள்ள கிராமங்களுக்கு அடிக்கடி செல்வது வழக்கம். ஒரு நாள் அவன் பக்கத்துக் கிராமத்திற்கு வசூலுக்குப் போய் விட்டு, திரும்பி

வரும் போது ஆற்றங்கரையில் ஒரு பெரிய ஆலமர நிழலில் இளைப்பாற உட்கார்ந்தான். காற்று சில்லென்று வீசவே தன்னையும் அறியாமல் தூங்கி விட்டான்.

யாரோ தன்னை 'எழுந்திரு' என்று தட்டுவது போல் உணர்ந்தான். திடுக்கிட்டு விழித்துப் பார்த்தான் தன் எதிரில் ஒருவள் நிற்கக் கண்டான். இறந்து போன தன் தாயின் சாயலிருப்பதைக் கண்டான். ஒருக்கால், தன் தாய் இந்தக் கோலத்தில் புனர் ஜன்மம் எடுத்து வந்திருக்கலாமோ என்று நினைத்த வண்ணம் 'அம்மா' என்றான்.

"மகனே. நான் உன்னுடைய சொந்தத் தாயல்ல. இந்த ஆற்றிலிருக்கும் தேவதை. தன்னந்தனியாக உறங்கிக் கொண்டிருந்த உன்னைக் கண்டு இரக்கம் மேலிட்டது. உன்னுடைய க்ஷேமத்தைப் பற்றி விசாரிக்க வந்தேன்" என்று தேவதை சொல்லிற்று.

கண்ணன் தன்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைச் சொல்லும் பொழுது அடிக்கடி விசனப்படுவதைக் கண்ட தேவதை, "மகனே வருந்த வேண்டாம். உனக்கு வேண்டியதை நான் தருகிறேன்" என்று சொல்லிற்று.

"நினைத்தது முடியவேண்டும்" என்றான் கண்ணன்.

"அப்படியே ஆகட்டும். ஆனால், ஜாக்கிறதை. ஆபத்துகள் நேரிடும் போலிருந்தால் என் பெயரைச் சொல். மறந்து விடாதே. தக்க சமயத்தில் உதவி புரிவேன்" என்று சொல்லிவிட்டு தேவதை மறைந்து விட்டது.



தேவதை மறைந்த சில நிமிஷங்களுக்குள், வான வெளியில் இவ்வையத்தின் தொல்லையின்றிப் பறந்து செல்லும் கிளியைக் கண்டதும், "ஒரு கிளிகூட சுதந்திரமாக வாழ்கிறது. ஆனால், மனிதனாகப் பிறந்து அடிமைப் பட்டுக்

கிடக்க வேண்டியிருக்கிறது. சே, இந்த வாழ்க்கை வேண்டவே வேண்டாம்! கிளியாக வாழலாம்'' என்று கண்ணன் நினைத்தான்.

நினைத்த படியே கிளியாக மாறினன். அங்குள்ள கிளிக் கூட்டத்துடன் கலந்து கொள்ள விரும்பினன். ஆனல், அந்தக் கிளிகள் இந்தப் புதிய கிளியைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ள மறுத்தன. மறுத்ததோடு நில்லாமல் துரத்தவும் ஆரம்பித்தன. அவைகளிடமிருந்து தப்பித்துக் கொண்டுவரும் பொழுது வேடன் ஒருவன் தன்மீது அம்பு எய்வதைக் கண்டான். எற்கனவே வெகு தூரம் பறந்து வந்ததினல் எற்பட்ட களைப்பினல் அம்பினிடமிருந்து தப்புவதற்கு அதிக வேகத்துடன் பறக்கவோ, திரும்பவோ சக்தியில்லாமல் பெரிய ஆபத்திலிருப்பதை உணர்ந்து, தேவதையின் பெயரைச் சொன்னதும் அம்பு கீழே விழுந்து விட்டது.

"போதும், இந்தக் கிளியின் வாழ்க்கை! மனித வாழ்க்கையில் கஷ்டங்கள் நிறைந் திருந்தாலும் அதுவே மேலானது'' என்று பட்டது. உடனே, முன்போல் கண்ணனுக மாறி அவன் கண்ணயர்ந்தான். மீண்டும் யாரோ தன்னை எழுப்புவதை உணர்ந்தான். திடுக்கிட்டு விழித்துப் பார்த்தான்.

மளிகைக் கடைத் திண்ணையில் அவன் படுத்திருந்தான். அருகில் சாக்கடை இருந்தது. முதளாளி "எழுந்திரு கடையைத் திறக்க வேண்டும்'' என்று சொல்வதைக் கேட்டதும், தான் இது வரை கண்ட தெல்லாம் கனவென்று அறிந்து மகிழ்ந்தான்.

சூதாட்டம்

வாழ்க்கையில் ஒரு மனிதன் இரண்டு சந்தர்ப்பங்களில் சூதாடக் கூடாது. ஒன்று, அவனிடம் பணம் இல்லாத போது. இரண்டு, அவனிடம் பணம் இருக்கிற போது.

— மார்க் ட்வைன் —

பேராசையின் குழந்தை, அநியாயத்தின் சகோதரன், தொல்லைகளின் தந்தை சூது.

— ஜார்ஜ் வாஷிங்டன் —

சமையற்காரன்

[ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்]

நாடக பாத்திரங்கள் :-

நடராஜ ஐயர்
அவர் மனைவி காமாக்ஷி
அவர் பெண் மல்லிகா
அவர் பிள்ளை ஆனந்தன்
சமையற்காரன் சிவகுமார்

நிகழுமிடம்: அநேகமாய் நடராஜ ஐயரின் வீட்டில்தான்.

காலம்: இரவு ஒன்பது மணி சுமார்.

கூடத்தில் ரேடியோ அருகில் நாற்காலியில் அமர்ந்து ஆனந்தன் ரேடியோ நியூஸ் கேட்டுக்கொண்டிருக்கிறான். ஐயர் கொஞ்சம் தொலைவில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து பத்திரிகையைத் திருப்பிக் கொண்டிருக்கிறார். மல்லிகா விளக்கருகில் அமர்ந்து ஏதோ கதைப் புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறாள். காமாக்ஷியம்மாள் சமையல் அறை அலுவல்களை முடித்துக்கொண்டு வெற்றிலை பாக்குத் தட்டுடன் பாயில் வந்து உட்காருகிறாள். கணவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்து விட்டுத் தானும் போட்டுக் கொள்கிறாள்.

காமாக்ஷி:- என்ன, வரவர எனக்கு சுத்தமாகக் கையாலே ஆக மாட்டேன் என்கிறதே. ஒரு சமையல்காரியையாவது வைத்துக்கொண்டால் தேவலை போலிருக்கு.

ஐயர்:- நானா வேண்டாம் என்கிறேன். நீதானே சமையலுக்கு ஆள் வைத்துக் கொண்டால் இந்த ரேஷன் காலத்தில் கட்டி வருவதில்லை என்று நிறுத்தி விட்டாய்.

காமாக்ஷி:- பின்னே, என்னவாம்! மாதம் பிறந்தால் சுளை சுளையாக சம்பளம் எண்ணுவது போதாமல், அதுகள் கொட்டுவதும், சிந்துவதும், காணாமல் மொக்குவதற்குமே சம்பளத்துக்குமேல் இரண்டு மடங்கு சிலவு வைத்து விடுகிறார்கள். இந்த லக்ஷணத்தில் மாதம் முப்பது — முப்பத்தைந்து என்று கேட்கிறார்கள். போதாக் குறைக்கு இந்த பொம்மனாட்டிகளை வைத்துக் கொண்டாலோ 'மடி மடி'

என்று பிராணனை வாங்கி விடுகிறதுகள். முக்கால்வாசி வேலையும் நாமே செய்து தொலைக்க வேண்டியிருக்கு. இதல்லாமல் மாதம் மூன்று நாள் லீவ் வேறு! அல்லாமே நச்சுப்பிச் சென்று ஏதாவது சாக்குச் சொல்லிவிட்டு நடுநடுவில் வராமே நின்று விடுகிறதுகள்.

ஐயர்:— சரி ஒரு சமையற் காரனையே வைத்து விடுகிறேன்..

காமாக்ஷி:— அவன் மாத்திரம் வாழ்ந்தானு? வரும் பொழுதே துரை மாதிரி வருகிறுன். கூட ஆயிரம் நிபந்தனைகள் வேறு! "பகலில் பதினொரு மணிக்கெல்லாம் வேலையை முடித்துக் கொண்டு போய்விடுவேன். அதற்குள்ளாக சாப்பாட்டுக் கடையை முடித்துவிட வேண்டும். மறுபடியும் சாயந்திரம் ஆறு மணிக்குத்தான் திரும்பி வந்து அடுப்பை மூட்டுவேன். டிபன் செய்ய மாட்டேன், தோசைக்கு அறைக்கமாட்டேன், எச்சிலிடமாட்டேன்" என்று என்ன வெல்லாமோ நிபந்தனைகளுடன் வருகிறதுகள், வேலைக்கு வரும் பொழுதே.

ஐயர்:— சரி என்ன செய்யலாம்! சரி நமக்குக் கையிலாக வில்லை என்றுல் அவர்களுடைய காலைக் கட்டவேண்டி இருக்கு. இப்பொழுது, ஆட்களின் காலமடியம்மா, ஆட்களின் காலம்! எங்கப்பா காலத்திலனு பார்க்க வேண்டும். சமையலுக்கு ஆள் வந்தான்னு, அவனுக்கு ஆரம்ப சம்பளம் ஐந்தே ரூபாய்தான். ஏண்டா சிரிக்கிறே குறப் பயலே.

ஆனந்தன்:— போப்பா ஐந்து ரூபாய்க்கு ஆள் கிடைத்த மாதிரிதான்.

மல்லிகா:— பின்னே, அப்பா போய் பொய் சொல்வாராடா? நான் போய்ப்படுத்துக்கொள்கிறேன் (கொட்டாவி விடுகிருள்) தூக்கம் கண்ணைச்சுழட்டுகிறது. (மல்லிகா எழுந்து செல்கிருள்.)

ஐயர்:— பொய் இல்லேடா, மடப் பயலே நிஜமாகவே! எங்கள் அகத்துக்கு நாராயணன் சமையலுக்கு வந்த புதிதில் மாதம் ஐந்தே ரூபாய்தான் அவனுக்கு சம்பளம். மங்கு மங்குனு என்னவேலை செய்வான் தெரியுமா? குடும்பத்தில் அவனும் ஒருவன் போல் அல்லவா தோன்றும்? யஜமானர், யஜமானியம்மாள் என்றுல் அந்தக் காலத்து ஆட்களுக்கு அதெவ்வளவு நன்றி விசுவாசம் தெரியுமா? வீட்டுக் குழந்தைகளை இமைக்குள் வைத்துக் காப்பாற்றுவார்கள். யஜமானியம்மாளை ஒரு துரும்பு வேலை செய்ய விடமாட்டார்கள். எங்கம்மா ஒரு சின்னஞ் சிறு வேலை செய்தால் கூடப் பொருக்க மாட்டானே நாராயணன். வேலையென்றுல் சமையல் வேலை ஒன்றுதானு செய்வான் அவன்! குழந்தைகளுக்குக் குளிப்பாட்டுவது, சாதம் ஊட்டுவது, பள்ளிக் கூடத்துக்கு அழைத்துச் செல்வது, சமயம் வாய்ந்தால் கடை கண்ணிக்குப்போய் வருவது, போஸ்டாபீஸுக்குப் போய் வருவது, சமயம் பொழுது என்றுல் படுக்கை விரிப்பது, எடுப்பது எல்லாமே செய்வார்களே அந்தகாலத்து சமையல் காரர்கள்! இவ்வளவிற்கும் சம்பளம்

ரொம்ப உசத்தி என்றால் பதினைந்து ரூபாயிக்குமேல் போகாது.

காமாக்ஷி:— என்னவோ ரூபாய்கள் இந்த காலத்தில் முப்பது, முப்பத்தைந்து என்று கொடுத்தாலும் சமயலைச் செய்து இறக்கினால் போதாதா? சித்து வேலை அவ்வளவையும் நாமேதானே செய்து கொள்ள வேண்டியிருக்கு. ஒரு பண்டிகை பருவம்னா ஒரு பாயசம் வைடா என்றால் கூட "அதிகப்படி சமையல் சொன்னால் நான் மாட்டேன், நீங்களே செய்து கொள்ளுங்கள் என்கிறானே! சமையற்காரனும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம். நானே செய்து கொள்கிறேன். மல்லிகாதான் பாவம் பள்ளிக்கூடம் போகும் வரைக்கும் கூட மாட உழைத்து ஒத்தாசை செய்கிறாளே பாபம்.

ஆனந்தன்:— ஏம்மா நான் உனக்கு ஒத்தாசையே செய்கிறதில்லையா? வென்னீர் அண்டாவுக்கு ஜலம் கொட்டுவது யாராம்? வெடிகார்த்தாலே வென்னீர் அடுப்பு மூட்டுவது யாராம்? மல்லிகா செய்து கழட்ற வேலைக்கு அவளைப் பெருமை பீற்றிக் கொள்கிறாயே இந்த அம்மாமார்களுக்குப் பெண் என்றால் உசத்திதான். பிள்ளை எவ்வளவு வேலை செய்தாலும் தாழ்த்திதான்.

காமாக்ஷி:— இல்லேடா அப்பனே அதற்குள் மூக்குக்கு மேல் கோபம் வந்துவிட்டதே, அடேயப்பா, நீயும்தான் பாவம் பரீக்ஷைக்கு பணம் கட்டிவிட்டு படிக்க பொழுதில்லாமே, அம்மாவுக்கு ஒத்தாசை செய்ய வந்து விடுகிறாய். அதான் உங்கள் இருவருடைய பரீக்ஷை முடியும் வரைக்குமாவது ஒரு சமையற்காரனை வைத்து விடலாம் என்று பார்க்கிறேன், ஏன்னா? என்ன சொல்றயள்?

ஐயர்:— சரி, நாளையிலிருந்து வேட்டைக்குக் கிளம்பி விடறது. படுத்துக்கொள். அலுத்துப் போயிருக்கிறாய். பாவம், அதோ மல்லிகா தூங்கிவிட்டாள் போலிருக்கு. ஆனந்தனும் படுக்கட்டும்.

(ஆனந்தன் ரேடியோவை மூடிவிட்டுப் படுக்கச் செல்கிறான்)

[திரை விழுகிறது.]

2

காலம்:— காலை ஒன்பதுமணி சுமார்.

['டிப் டாப்' பாக மூக்குக் கண்ணாடியும், அடையார் ஜிப்பாவுமாக, வெள்ளை வெளேரென்று தும்பப் பூப்போல் சலவை செய்த வேஷ்டி உடுத்தி கையில் ஒரு 'கான்வாஸ் பையும்,' குடையும் பிடித்துக்கொண்டு ஒரு ஆள் பிரவேசிக்கிறான்.]

ஆள்:— சார்! சார்! இது மிஸ்டர் நடராஜய்யர் வீடுதானே?

ஆனந்தன்:— ஆமாம் சார்! அப்பா உள்ளே இருக்கிறார். யார் வந்திருக்கிறார் என்று சொல்லட்டும்? இப்படி நாற்காலியில் உட்காருங்கள்!

[நாற்காலியில் அமர்கிறான்.]

ஆள்:— அதான்! பாம்பே மங்கள பவன் ராமையரிடம் சமையலுக்கு ஆள் வேண்டும் என்று உங்கப்பா சொல்லி

இருந்தாராம். அதான் என்னை அனுப்பி இருக்கிறார் ராமையர்.

ஆனந்தன்:- ஒகோ, சரி, இரு வருகிறேன்-

[ஆனந்தன் வாயைப் பொத்திக் கொண்டு சிரிப்பை அடக்கிய வண்ணம் உள்ளே செல்கிறான்]

(திரை விழுகிறது)

3

ஐயர்:- காமூ! காமூ! சமையற்காரனைப் பார்த்தாயோன்னோ! வரும் பொழுதே ரொம்ப ஜோரில் இருக்கிறான். மாதம் முப்பது ரூபாய்க்குக் குறைய மாட்டானும். எச்சில் இடுவது, வென்னீர் அடுப்பு மூட்டுவது எல்லாம் நாம் செய்து கொள்ள வேண்டுமாமே!

காமாக்ஷி:- என்ன செய்யலாம். பத்து நாளைக்கு வைத்துக் கொண்டு பார்க்கலாம்.

ஐயர்:- அதெல்லாம் பத்து நாள் பதினைந்து நாள் என்று சொல்லி வைக்க முடியுமா? 'பர்மனென்ட்' டுனுதான் சொல்லணும் நாம்ப. காலம் கெட்டுக் கிடக்கு. பேசாமே அவன் செய்தது போதும் என்று இருக்க வேண்டியதுதான். மாதம் முப்பது ரூபாயே பேசி, ஏற்பாடு செய்து விட்டேன். டேய் ஆனந்து! மல்லிகா! சாயந்திரம் அந்த சமையல் காரன் வருகிறான் பேசாமே வாயை அடக்கிக் கொண்டு அவனிடம் மரியாதையாக நடந்து கொள்ளுங்கள். அவன் செய்தது லாபம் என்று சும்மா இருக்க வேண்டும் தெரியுமா? அதட்டி கிதட்டினேளோ ஒன்றரை நாள்கூட வாழ மாட்டான்.

ஆனந்தன்:- ஏதேது, அப்பா சொல்கிறதை பார்த்தால், அவனுக்கு மாப்பிள்ளை உபசாரம் நடத்தணும் போலிருக்கே!

ஐயர்:- வாயை மூடுடா அதிகப் பிரசங்கி. காமூ! அவனைச் சாயந் திரம் ஐந்து மணிக்கு வரச் சொல்லி இருக்கிறேன். அவன் வந்த தினத்தை டைரியில் குறித்துக் கொள்.

[ஐயர் செல்கிறார்.]

ஆனந்தன்:-அம்மா அவன் பெயர் என்ன தெரியுமா? சிவகுமார்!

மல்லிகா:- ஆளைப் பார்த்தாலே பகுஷோக்கில் இருக்கிறானம்மா. பயமா இருக்கே. அவன் என்ன வேலை செய்து கழட்டப் போகி றான். வெறும் தண்ட சம்பளம் தான்.

மல்லிகா:- அடேயப்பா!

ஆனந்தன்:- அப்பாவிடம் சொல் லிண்டு இருந்தாண்டி, நிஜப் பெயர் "சுப்பு" வாம். பெயர் நன்றாக வில்லை என்று "சிவ குமார்" என்று தானே திரு

த்தி வைத்துக் கொண்டானும். சங்கீதம் வேறு கற்றுக் கொள்கிருனும்! அதுதான் பகல்வேளையில் 'கம்ப்ளீட்டாக' மூன்று மணிப் பொழுதாவது 'லீஷர்' வேண்டுமாம், பாட்டு பயில்வதற்கு.

காமு:- சரி, சாப்பிட வாருங்கள். அப்பாவையும் கூப்பிடு, இலை போட்டிருக்கிறேன், பள்ளிக்கூடத்துக்கு நாழிகையாகவில்லையா?

[திரை விழுகிறது.]

4

காலம்;- பகல் இரண்டுமணி சமயம்.

[ஐயர் ஆபீஸ் அறையில் மேஜை அருகில் அமர்ந்து என்னவோ எழுதிக் கொண்டிருக்கிருர். காமாக்ஷி பலகாரமும், காப்பியும் கொண்டு வந்து மேஜைமேல் வைக்கிருள். ஐயர் பேனுவை மேஜைமேல் வைத்துவிட்டு வாழைக்காய் பஜ்ஜி ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொள்கிருர்.]

ஐயர்:- காமூ! சிவகுமார் எங்கே?

காமூ:- அவன்தான் ஞாயிற்றுக்கிழமை பூரா லீவு கேட்கிருனே.

ஐயர்;- இதுவேரையா, அவன் கெட்ட கேட்டிற்கு!

காமூ:- அவன் வேளைக்கு வந்த நாளே சொல்லி விட்டானே, "வாரத்தில் ஒருநாள் 'லீவ்' வேண்டும்" என்று. நான்தான் அதுமுடியாது பகல் ஒருபொழுதாவது சமைத்துப் பறிமாரி விட்டுப்போ! என்றேன்.

ஐயர்:- ஆனல் இரவு சமையல் உன்னுடையதா?

காமு:- ஆமாம்னு! நாளைக்குக் காலம்பரத்தான் வருவானும், போதும்னு, சமையற் காரன் வைத்துக்கொண்ட சுகம். அவன் இல்லாமல் இருக்கும் பொழுது வேளைக்கு இரண்டுபடி பால் வாங்கி விட்டால் பாலும் தயிரும் தாராளமாக இருக்குமே! இப்பொ என்னடா வென்ருல் வேளைக்கு மூன்று படி பால் வாங்கினுலும் போதாமல் போகிறதே! எல்லோருக்கும் பச்சைத் தண்ணி மோர்னு வார்க்க வேண்டி இருக்கு. தயிரைக் கண்ணுலேயே காண முடியவில்லையே. நாம் எல்லோரும் ஒரொரு டம்ளர் காப்பி சாப்பிட்டால் அவன் வேளைக்கு மூன்று டம்ளருக்கு மேல் தாராளமாகக் காப்பி குடித்தாகி விடறது. இதைத்தவிற காணுமல் போட்டுக் குடிப்பது வேறு. சாப்பாடோ, அறைக்கிண்ணி நெய்யை அப்படியே சாதத்தில் சாய்த்துக் கொண்டு விடுகிருன். இதைத்தவிற கண்டும் காணுதுமாய் பக்ஷணமும் பணியாரமுமாக தஸ்கரணம் செய்கிறது வேறு. இந்த ரேஷன் காலத்துலே பத்துத் தேய்ப்பவளுக்கு ஜோடுதவலை நிறைய ரசமும், சாதமும் மீத்து மீத்துக் கொட்டுகிருன்.

ஐயர்:- நீ சரியாகக் கவனித்துக் கொண்டால் அவன் ஏன் அப்படிச்செய்வான்? (பக்ஷணத்தை சாப்பிட்டு முடித்து விட்டு காப்பி அருந்துகிருர்.)

காமூ: அடராமா! எல்லாத் தப்பும் என் தலையில் வந்து வெடிந்ததா? ஆள்காரர்களிடம் அவ்வளவு கண்டிப்பாக இருக்க முடிகிறதா சொல்லுங்கள். நாம்பள் ரொம்பக் கண்டிக்கப் போனல்

ஓடிப்போய் விடுகிறதுகள். அப்புரம் நாம்தான் திண்டாட வேண்டும்.

ஐயர்:– இல்லே, செல்லம் கொடுத்துக் கொடுத்து குட்டிச்சுவருக்கு.

காமூ: ஏன்னு, உங்களுக்கு வரவர இப்படிக் கோபம் வருகிறது.

ஐயர்:– எங்கேயடி கோபித்துக் கொண்டேன்? சரி, நாளேக்கு வரட்டும் சொல்கிறேன். நன்ருக மிறட்டுகிறேன், படவாப் பயலே.

காமூ:– ஐயோ வேண்டாம்னு. "இருந்ததும் போச்சு லொள்ளேக் கண்ணு" என்ருகிவிடும் என் பிழைப்பு.

ஐயர்:– இல்லா விட்டால் இம்பொ ரொம்ப சுகப்படுகிருயாக்கும். சமையற் காரன் இருந்தால் ஒருவிதம் அலட்டி கொள்கிருய். இல்லாவிட்டாலோ இன்னெருவிதம் திண்டாடுகிருய். தர்ம சங்கடமாகவிருக்கே.

காமூ:– என்னவோ வார்த்தைக்கு சொல்ல வந்தால் அலுத்து கொள்கிறீர்கள். (கோபமாகப் போகக் கிளம்புகிருள்.)

ஐயர்:– (சிரிப்பை வரவழைத்து கொண்டு) இல்லேவா, இங்கே காமூ! மேட்னிக்குப்போகலாம் 'ரீகலில் 'மிலன்' பிக்சர் ரொம்ப நன்ருக விருக்காம். ரவிந்திர நாத் டாகூர் எழுதிய 'ரெக்' டீ அது? தமிழில் பெயர் என்ன அதற்கு? (தலையைச் சொறிகிருர்)

காமூ:– (முகமலர்ச்சியுடன்) 'புயல்' னுபெயர் அதற்கு.

ஐயர்:– ஆமாம், அதான்! போ, சீக்கிரம் 'டிரஸ்' செய்து கொண்டு கிளம்புங்கள். மல்லிகாவும், ஆனந்தனும் எங்கே?

காமூ:– இதோ, ஐந்தே நிமிஷத்தில் கிளம்பத் தயாராகி விடுகிருேம். அவர்கள் இருவரும் அப்பொழுதே பிடித்து சினிமாவுக்கு போகவேண்டும்னுதான் என்னே நச்சரித்தார்கள். "சமையல் காரன் சேவகன் முதற்கொண்டு வாரம் தவருமல் சினிமா வென்ன, பாட்டு கச்சேரி என்ன என்று ஜாம் ஜாம் என்று போகிருர்கள். எங்களே மாத்திரம் ஒரு இடத்திற்கும் போக விடுவதில்லே. பரீக்ஷைக்கு ஆறுமாதங்கள் இருந்தால் கூட படி, படி என்று உயிரை வாங்குவது ஒன்றுதான் மிச்சம், என்று கோபித்து கொண்டு படிக்கும் அறையில் புத்தகத்தை பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிருர்கள். சினிமாவுக்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னல் அப்படியே குதித்து விடுங்கள்.

ஐயர்:– சரி, சீக்கிரம் கிளம்புங்கள். மணி இரண்டு அடித்து விட்டது. இதோ நானும் இந்த 'பயில்' ஒன்றைப் பார்த்து முடித்துவிட்டு வருகிறேன். (ஐயர் பேனவை எடுக்கிருர். அம்மாள் காலித் தட்டையும், டம்ளரையும் எடுத்துச் செல்கிருள்.)

[திரை விழுகிறது]

5

[காலம்:– காலே பத்தரை மணி. ஐயர் ஆபீஸுக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிருர். அன்றைய 'ஹிண்டு' பேப்பரைக் காணுது

மேஜை, நாற்காலி, பெட்டி இடுக்குகளிலெல்லாம் தேடுகிருர்.]

ஐயர்:– டேய் ஆனந்து – மல்லிகா 'ஹிண்டு' வை எங்கே வைத்து விட்டீர்கள்? வீட்டில்தான் படிக்க முடிகிறதில்லையே, ஆபீஸுக்காவது கொண்டுபோய்ப் படிக்கலாம் என்ருல் காணுமே. படிக்கிறேன், கிழிக்கிறேன் என்று அரை குறையாகப் பார்த்து விட்டு கண்ட இடத்தில் எடுவெடாகப் போட்டு விடுகிறதுகள் கழுதைகள். டேய் ஆனந்தா! மல்லிகா!

(காமாக்ஷி வருகிருள்)

காமூ:– ஏன்ன? குழந்தைகள் அப்பொழுதே பள்ளிக்கூடம் போய்விட்டார்களே, என்ன வேண்டும்?

ஐயர்:– இன்றைய 'ஹிண்டு'வைக் காணுமே, எங்கே? நான் இன்னும் முழுக்கப் படிக்கவே இல்லை. நாழியாகி விட்டதே என்று அவசர அவசரமாகக் குளிக்கப் போய் விட்டேன். ஆபீஸுக்காவது கொண்டு போகலாம் என்ருல் காணுமேடீ.

காமூ:– இப்போ சிவகுமார் ஏதோ பேப்பர் வைத்துக் கொண்டிருந்தான். அதுதானே என்னவோ, போய்ப் பார்க்கிறேன்.

ஐயர்:– அடராமா! இவனுக்குப் பேப்பர் வேறையா படிப்பதற்கு! நேற்று சினிமாவில் பார்த்தாயோன்னே? நாம் 0–12–0 ஸீட்டில் உட்கார்ந்திருந்தால் அவன் 1–4–0 ரூபாய் ஸீட்டில் உட்கார்ந்திருந்தானே!

காமாக்ஷி:– அத்துடன் தானே! 'ஐஸ்கிரீம்' என்ன, டிரிங்ஸ் என்ன! டீ என்ன, என்றெல்லாம் வாங்கி சாப்பிட்ட வண்ணமே இருந்தானே, சினேகிதனுடன்! அதான் முப்பதும் முப்பத்தைந்தும் கேட்கிறதுகள் சம்பளம். உங்களுக்கு அந்த வேடிக்கையைக் காட்ட வேண்டும் என்று மல்லிகாவும், ஆனந்தனும் குதித்துக் கொண்டே இருந்தார்கள். அவர்களை அடக்கிக் கொண்டே இருந்தேன்.

ஐயர்:– அது கிடக்கு, பேப்பரை வாங்கிவா போ.

(காமாக்ஷி உள்ளே போய் விட்டு திரும்பி வருகிருள்.)

காமூ:– பேப்பர் அவனுக்குப் படிப்பதற்கு வேண்டுமாம். இல்லாவிட்டால் பொழுது போகிறதில்லையாம். யஜமான் இரவு வீட்டுக்கு வந்தபிறகு படிக்கட்டுமே என்கிருன்!

ஐயர்:– என்ன தைரியம்! என்ன வீம்பு! காசைக்கொட்டி வாங்கி விட்டு சமையற் காரனுக்காகப் பேப்பரை வாங்கட்டுமா? கேட்டு வாங்கிக் கொண்டுவா.

காமூ:– இல்லேன்ன, இப்பொழுதே போய்த் திரும்பவும் கேட்டால் ஏதாவது நினைத்துக் கொள்வான்ன. எங்கேயாவது ஓடிப் போய் விடப்போகிருன். நாளைக்கு நிதானமாகச் சொல்லலாம்.

ஐயர்:- நல்ல பிழைப்படி இது. இப்படி இடம் கொடுத்தால் தலைமேல் ஏறி உட்காருவான். எப்படியோ போ (கோபமாகச் செல்கிருர்.)

[திரை விழுகிறது]

195255

6

[இரவு எல்லோரும் சாப்பிட உட்கார்ந்திருக்கிறார்கள். காமாக்ஷி பறிமாறுகிறாள்.]

ஐயர்:– என்ன காமூ! சிவகுமார் எங்கே காணோம்? நீ பரிமாறுகிறாயே?

காமூ:– அவனா! மத்தியானமே ஓடிப்போய் விட்டானே. இப்பவே கணக்குத்தீர்த்துவிடுங்கள் என்றான். நாளைக்கு யஜமானரிடமே வந்து சம்பளத்தை வாங்கிக் கொண்டுபோ என்றேன்.

ஐயர்:– ஏன்! நீ ஏதாவது அதட்டினாயா?

காமூ:– (மூஞ்சியை சுளித்துக் கொண்டு) ஆமாம் எனக்கு வேறு வேலை இல்லையா? நான் தான் பயந்து பயந்து சாகிறேனே, எங்கே ஓடிப்போய் விடுவானோ என்று.

ஐயர்:– பின்னே ஏன் போய் விட்டான்?

ஆனந்தன்:– 'ஊருக்குக் கடிதம் எழுதவேண்டும். ஒரு கார்டும், பேனாவும்கொடுங்கள்' என்றான் 'இது போஸ்ட் ஆபீஸ் இல்லை. ஸ்டேஷனரி ஷாப்பும் இல்லை.' என்றேன். அம்மாவிடம் போய்க் கேள் என்று விட்டு ஓடிப்போய் விட்டான்.

காமூ:– அடியம்மா, இந்தச் சமையற் காரர்களிடம் நடுங்குகிற அளவு நான் மாமியாருக்குக் கூட நடுங்கவில்லை. நேற்றுப் பாருங்கள். "ஆடி வெள்ளிக் கிழமை ஆச்சே ஒரு பாயசம் வைத்து, வடை தட்டுடா, அம்பாளுக்கு நெய்வேத்தியம் செய்யவேண்டும்" என்றேன். அதிகப்படி சமையல் செய்ய என்னால் முடியாது. வேண்டுமானால் நீங்களே செய்து கொள்ளுங்கள்" என்று விட்டான். நான் தேமேன்னு வடைக்கு அறைத்தால் குண்டாட்டமா எதிரே நின்று கொண்டு பார்க்கிறான். கடைசியில் வடை, பாயாசம் செய்து அப்பளமும் நான் பொறித்தேன்.

ஐயர்:– நேற்றே என்னிடம் ஏன் சொல்ல வில்லை? நேற்றே துலைத்திருப்பேனே தடியனை.

ஆனந்:– அப்பா, பாலக்காட்டு ஆள் ஒருவன் இருக்கிறானாம். மாதம் முப்பத்தைந்து கேட்கிறானாம். வேண்டுமா என்று சுந்தரமாமா கேட்டார்.

ஐயர்:– சுந்தரத்தை எங்கே பார்த்தாய் நீ?

ஆனந்:– சாயந்திரம் கடைத் தெருவில் பார்த்தேன்.

மல்லிகா:– அய்யய்யோ சமையற்காரனே வேண்டாம் அப்பா. வேண்டியபடி கேட்டுப் பறிமாறிக் கொண்டு சங்கோசமின்றிச் சாப்பிட முடிகிறதில்லை. அவர்கள் பறிமாறினால் நமக்கெல்லாம் கொஞ்சுண்டு துசுக்கி விட்டு, தான் எல்லாவற்றையும் கொட்டிண்டு தின்கிறான் குண்டோதரனாட்டமா.

ஐயர்:– என்னமா செய்வது? அம்மாவுக்கு சுத்தமாகக் கையிலாகிறதில்லை. உங்களுக்கும் பரீக்ஷை கிட்டிவிட்டது.

காமூ:– 35 கொடுத்தா?

ஐயர்:– பணம் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தாலும் தேவலை.

நிலைத்து நிற்கவேண்டுமே தடியன்கள்.

காமு:- எவ்வளவுதான் அதிகம் கொடுங்களேன். அதுகள் புத்தி திருந்துமா?

ஐயர்:- என்னவோ, இவனையும் பார்த்து விடலாம் ஒருகை. இவனும் சரிபடாவிட்டால் அனுப்பி விடுகிறது.

காமு:- நாம் அனுப்ப வேண்டுமா என்ன? எவ்வளவோ பயந்து கொண்டு, தாழ்ந்து போனாலும் அதுகளே ஓடி விடுகிறதுகளே, கடைசிக்கு நமக்குத்தான் கெட்ட பெயர்.

ஐயர்:-என்ன செய்யலாம் சொல். காலம் கெட்டுக் கிடக்கு. அந்தக் காலத்தில்......

ஆனந்தன்:- (மல்லிகாவிடம் குசுகுசு வென்று) அப்பா ஆரம்பித்துவிட்டார் பெருமைக்கு, தாத்தா வீட்டில் இருந்த நாராயணனைப் பற்றி (இருவரும் மெதுவாகச் சிறிக்கிறார்கள்.)

[திரை விழுகிறது]



கிரேக்கப் பொன் மொழிகள்

நிரம்பவும் பழமையானவர் கடவுள்!
நிரம்பவும் அழகானது உலகம்!
நிரம்பவும் விவேகம் உள்ளது காலம்!
நிரம்பவும் பொதுவானது நம்பிக்கை!
நிரம்பவும் லாபமானது நற்செயல்!
நிரம்பவும் வேதனைக் குள்ளாக்குவது கெட்ட நடத்தை!
நிரம்பவும் வேகமானது மனம்!
நிரம்பவும் கடினமானது நம்மை நாமே தெரிவது!
நிரம்பவும் சுலபமானது நம்மைப் பிறர் ஆள்வது!
நிரம்பவும் இனிமையானது நம் மனப்படி நடத்தல்!

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram, at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.

P.A.R. சில்
பிரசித்தமானது
268
139. BOX
P.A. ராஜ் செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
குமரன்

REGD. NO. 4519 VASANTHAM AUGUST, 1947

இன்றைய பட உலகின் இணையற்ற
வெற்றிச் சின்னம்!

ஜூபிடர் பிக்சர்ஸ்

இனி வரும் படங்களின் அமோக
வெற்றிக்கும் அடையாளம்!

கஞ்சன்....
அபிமன்யு.....
வேலைக்காரி....
விப்ரநாராயணா....
கிருஷ்ணவிஜயம்